பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka


# எதிரொலி

Ethiroli

22-28 மே 2019

வாரஇதழ்

## ஒப்பரேஷன் நோஆ



## என்றும் மாறாத சிங்களம்



## அகதிகளின் கதி

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# வன்னியின் குரல்

● கருணாகரன்

கனவுச்சிறை, ஊழிக்காலம், ஆதிரை, மரணத்தின் வாசனை, பொக்ஸ் (Box), பார்த்தீனியம், கலிங்கு, நடுகல், நீந்திக்கடந்த நெருப்பாறு, புள்ளிகள் கரைந்த பொழுது, நஞ்சுண்டகாடு, விடமேறிய கனவு, கர்ப்பநிலம் எனப் பல புத்தகங்கள் இப்போது வன்னியைப் பற்றி சுமந்து வந்திருக்கின்றன. இன்னும் பலது வரவுள்ளன. ஏற்கனவே நிலக்கிளி, குமாரபுரம், பச்சை வயல் கனவு, சுமைகள், விண்ணில் அல்ல விடிவெள்ளி, தாகம், மழைக்கால இரவு, அழுவதற்கு நேரமில்லை, இனி வானம் வெளிச்சிரும், இருள் இனி விலகும், போராளியின் காதலி, போருலா எனப் பல புத்தகங்கள் ஏற்கனவே வந்துள்ளன. இதை விட பூநகரியின் வரலாறு, அடங்காப்பற்று, பண்டாரவன்னியன், கைலைவன்னியன் என ஏராளமான வரலாற்று நூல்களும் வந்திருக்கின்றன.

வ.ஐ.ச ஜெயபாலன், முல்லை முஸ்ரிபா, இளைய அப்துல்லா, முல்லைக்கோணேஸ், முல்லைக்கமல், முல்லையூரான், புதுவை இரத்தினதுரை, பொன் காந்தன், அகளங்கன் எனப் பலர் வன்னியைப்பற்றிக் கவிதைகளாகப் பாடியிருக்கிறார்கள்.

வன்னியைப்பற்றிய பதிவுகளாக இப்படி ஒரு காலம், அன்பின் திசைகள் என்று நானும் இரண்டு புத்தகங்களை எழுதியிருக்கின்றேன். இப்படி வன்னியைப்பற்றி ஏராளமானவர்கள் எழுதிக் கொண்டிருக்கின்றார்கள். கடந்த பத்து ஆண்டுகளில் ஈழத்தமிழர் எழுதிய புத்தகங்களில் 90 விழுக்காடும் ஏதோ ஒருவகையில் வன்னியைக் களமாகக் கொண்டவையே. முள்ளிவாய்க்கால் நினைவுகூரல், மாவீரர் நாள் போன்றவையும் வன்னி சார்ந்தே முக்கியத்துவம் பெறுகின்றன. அரசியல்வாதிகள் கூட வன்னியை முக்கியமான ஒரு களமாகவே பார்க்கின்றார்கள். அணுகு கின்றார்கள். ஏன் அரசாங்கமும் கூடத்தான்.

மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய ஆட்சிக்காலத்தில் கிளிநொச்சியில் அமைச்சரவைக் கூட்டத்தையே நடத்தினார். நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சியை மையப்படுத்திப் பல வேலைகளைச் செய்ய முயற்சித்தார். கிளிநொச்சியை சிறிய அம்பாந்தோட்டை என்று வர்ணிக்குமளவுக்கு நாமல் அந்த நாட்களில் (2012-2015) கிளிநொச்சியிலேயே முகாம் அமைத்துத் தங்கியிருந்தார்.

ரணில், மைத்திரி கூட வன்னியை - கிளிநொச்சியை முக்கியமான ஒரு மையக்களமாகவே கருதிச் செயற்பட்டதுண்டு. ஒரு தடவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிளிநொச்சியில் வயலில் இறங்கி விதைப்புச் செய்திருந்தார். கடந்த மாரியில் இரணைமடுக்குளத்தைப் பாசனத்துக்குத் திறந்து விட்டதே ஜனாதிபதிதான்.

கிளிநொச்சியில் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம், தொழில்நுட்பப்பீடம், விவசாய பீடம் ஆகியன இந்தப் பத்தாண்டுகளில் உருவாகியுள்ளன. இன்னும் இரண்டு பீடங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படுமென்று உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கின்றார். மன்னாரில் கடற்றொழில் பீடத்தை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் உண்டென்றும் கூறப்படுகிறது.

மேலும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் பிராந்தியப் பணிமனை, மத்திய வங்கியின் பிராந்தியப் பணிமனை, சுற்றுச்சூழல் துறையில் பிராந்தியப்பணிமனை போன்றவைகூட வன்னியை மையப்படுத்தியே கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்படி கிளிநொச்சி மட்டுமல்ல வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் போன்ற மாவட்டங்களும் இன்று கவர்ச்சிக்குரியவையாகி விட்டன. நிர்வாக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவம் மிக்கவையாகி விட்டன.

மன்னாரில் எண்ணெய் வளம் உள்ளது என்பது வன்னிக்கு இன்னொரு முக்கியத்துவத்தை அளிக்கக்கூடும். இப்போதே இந்தியாவும் சீனாவும் வன்னியில் எங்கே எப்படிக் கால் பதிப்பது என்று கடுமையாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.

முன்பு மன்னார் என்றால் மடுமாதா தேவாலயமும் திருக்கேதீஸ்வரமுமே நினைவுக்கு வரும். இப்பொழுது புதைகுழிகளும் எண்ணெய்வளமுமே முதற்கவனத்தில் வருகின்றன.

இப்படித்தான் முல்லைத்தீவிலும். வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் கோயிலும் ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரமும் முள்ளியவளை, குமுழமுனை, புதுக்குடியிருப்புப் பலாப்பழமும் மணலாற்றுக்காட்டு முரலிப்பழமும் வேட்டை இறைச்சியும் தேனுமே நினைவில் வருவதுண்டு. இன்னொரு ஞாபகம் கற்சிலைமடுவில் பண்டாரவன்னியனின் நினைவுக்கல் வெட்டு. இப்பொழுது மனதில் எழுவது கொக்குத்தொடுவாய், கொக்கிளாய்ப்பக்கம் முளைத்துக் கொண்டிருக்கின்ற சிங்களக் குடியேற்றங்கள்.

வவுனியாவின் கதையும் ஏறக்குறைய இதேமாதிரித்தான். முன்பு வவுனியா நகரிலேயே மாடுகளின் பெருக்கத்தைக் காணலாம். பட்டியில் நிற்பதைப்போல நகரில் கூட்டம் கூட்டமாக நிற்கும். எங்கும் பச்சைப் பசேலென்ற மரமும் சோலையும் வயலுமாக இருந்தது. இலங்கையிலேயே குளங்கள் கூடுதலாக உள்ள இடம் வவுனியாவோ என்று யாரும் எண்ணுமளவுக்கு ஏராளம் குளங்கள். ஊர்களின் பெயரே அப்படித்தான். கொந்தக்காரன் குளம், பண்டாரிக்குளம், வேப்பங்குளம், கோயில் குளம், விளக்கு வைச்சகுளம், ஆண்டாள் புளியங்குளம், தவசி குளம் எனப்பல. இப்போது வவுனியா தெற்கு மட்டுமல்ல நெடுங்கேணியில் பாதியே சிங்களப் பகுதி என்றாகி விட்டது எனலாம்.

வவுனியாவும் முல்லைத்தீவும் சிங்கள எல்லைப்புற மாவட்டங்கள் என்பது அரசின் கவனத்திற்குரியதாக இருக்கலாம். இப்படியெல்லாம் பலருடைய கவனப்புலத்திலும் உள்ள வன்னியில் உண்மையில் என்ன நடக்கிறது? என்று பார்த்தால் அதிர்ச்சியே ஏற்படும்.

1. வன்னியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மெல்ல மெல்ல நடக்கின்றன. எதிர்காலத்தில் வன்னியில் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் விகிதத்தில் மாற்றங்களை உண்டாக்கக் கூடிய அளவுக்கு இந்தக் குடியேற்றங்கள் செல்வாக்குச் செலுத்தப்போகின்றன. அதிக காலமில்லை. இருபத்தைந்து ஆண்டுகளில் இதைக் காணமுடியும்.

2. வன்னியின் வளங்களில் முக்கியமான காடுகள் அழிக்கப்படுகின்றன. வன்னியின் சிறப்பே காடுகள்தான். காடுகளால்த்தான் வன்னியில் மழை வீழ்ச்சி அதிகம். காடுகள் அழிக்கப்பட்டால் மழை வீழ்ச்சி குறையும். மழை குறைந்தால் குளங்கள் வரளும். குளங்கள் வரண்டால் விவசாயம் பாதிப்படையும். விவசாயம் பாதிக்கப்பட்டால் வன்னியை விட்டு மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை வரும். வன்னியின் பண்பாட்டுச் சிறப்பு அடையாளங்களான வேட்டையும் தேனெடுப்பும் காட்டுப் பழங்களோடிணைந்த வாழ்க்கையும் கூடக் காணாமல்ப் போய் விடும்.




3. மணலும் கிரவலும் கல்லும் கண்டபடி அகழ்ந்தெடுக்கப்படுகிறது. இது வன்னியின் நில அமைப்பையும் ஆறுகளின் போக்கினையும் மாற்றி விடப்போகிறது. நிலம் கெட்டால் வாழ்வு கெட்டது என்பார்கள்.

4. காட்டைப் படைத்தரப்பு ஆக்கிரமித்திருக்கிறது. படையின் பிடியிலுள்ள காட்டில் என்ன நடக்கிறது என்பது மர்மம். மர்மமான எதுவும் ஆபத்தென்பதே இன்றைய உலக நியதி. அது சஹ்ரானின் வெடிகுண்டையும் விட அபாயமானது.

5. வன்னியின் கடல்வள விருத்தி கவனிக்கப்படாதிருக்கிறது. மன்னார் முதற்கொண்டு பூநகரி வரையுமான மேற்குக்கரை. நிறைந்த மீன் வளமுள்ள கடல். அட்டை, இறால், நண்டு, கணவாய் போன்றவற்றுக்குப் பேர்போன பரப்பு. இடையில் வடக்கில் ஆனையிறவுக் கடனீரேரி. கிழக்கே சுண்டிக்குளம் தொடக்கம் நாயாறு, கொக்குத்தொடுவாய் வரையான பெருங்கடல். இப்படிக் கடல் வளமிருப்பது அபூர்வம். ஆனால், இதைப் பராமரித்து வளத்தைப் பெருக்கக் கூடிய திட்டங்களோ சிந்தனைகளோ இல்லை. ஏதோ நடக்கிறது என்ற அளவில் பாரம்பரியத் தொழில் முறையில் கடற்றொழில் செய்கிறார்கள். நவீனப்படுத்துகைகள் இல்லை.

6. வன்னியின்வீதிகள்பலவும்புனரமைக்கப்படவேயில்லை. புழுதியும் கிரவலுமே வன்னிக்கு விதிக்கப்பட்டது என்ற மாதிரித்தான் ஏராளம் தெருக்கள் கிடக்கின்றன. முறிகண்டி வலைப்பாடு வீதியில் முக்கால் வாசித்தூரம் கிரவல்க் குழிகளாகவே உள்ளன. சனங்கள் முதுகெலும்பை முறித்துக் கொண்டுதான் தினமும் போய் வரவேண்டியுள்ளது. யார்க்கெடுத்துரைப்போம். யாதுண்டு பயன் என்ற கணக்கில்த்தான் எல்லாமே உள்ளது. இது ஒரு பிரதான வீதி. இப்படித்தான் ஏராளம் வீதிகளின் விதியுள்ளது.

7. மேற்கொள்ளப்படுகின்ற அபிருத்திப்பணிகளும் முறையான ஆய்வோ திட்டமிடலோ இல்லாமலேயே மேற்கொள்ளப்படுகிறது. உதாரணம், குளங்களிலிருந்து மேற்கொள்ளப்படும் ஏற்று நீர்ப்பாசனம். அக்கராயன், புழுதியாறு, முத்தையன்கட்டு, இரணைமடு - திருவையாறு ஏற்று நீர்ப்பாசனம் படு தோல்வியாகியுள்ளன. ஆனால் இதற்காக செலவழிக்கப்பட்ட நிதி பெருந்தொகையானது. 1970 மற்றும் 80 களின் நிலையை எண்ணிக் கொண்டு, சில விவசாயிகள் விடுத்த கோரிக்கைக்கு அரசியல்த் தரப்புகளும் கண்மூடித்தனமாக வழங்கிய ஆதரவின் விளைவே இந்தத் தோல்வியாகும். வழங்கப்பப்பட்டுள்ள ஏற்று நீர்ப்பாசனத்தின் மூலமாக எத்தனை ஏக்கரில் விவசாயச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது என்றால் பதிலளிப்பதற்கு யாருமே தயாரில்லை.

8. இதைப்போலத்தான் வன்னியின் விவசாயச் செய்கைக்கான முயற்சிகளும் கால்நடை வளர்ப்புக்கான ஏற்பாடுகளும் முழு வெற்றியைத் தந்ததல்ல. ஆனால் வன்னியின் நீர் வளமும் நில விரிவும் விவசாயச் செய்கைக்கும் கால்நடை வளர்ப்புக்கும் மிக வாய்ப்பானவை. இதற்குச் சரியான திட்டமிடலைச் செய்திருந்தால் இப்போது வன்னியில் இலட்சக்கணக்கான கால்நடைகள் பெருகியிருக்கும். நூற்றுக்கணக்கில் பண்ணைகள் உருவாகியிருக்கும். பாலுற்பத்தியும் இறைச்சியும் பெரும் பொருளாதார அடைவாக அமைந்திருக்கும். ஆனால், அப்படி நடக்கவில்லை.

9. புத்தவிகாரைகளை அமைப்பதிலும் சிங்களக் குடியேற்றங்களை விரிவாக்குவதிலும் அரசாங்கம் அக்கறையோடிருக்கிறது என்றால் அதற்குப் போட்டியாகக் கோயில்களைப் பெரிதாகக் கட்டுவதிலும் கடைகளை உருவாக்குவதிலும்தான் தமிழ்த்தரப்பு அக்கறையாக உள்ளதே தவிர, பொருளாதார ரீதியிலும் நீர், நிலப்பயன்பாட்டைப் பெறுமதியாக்குவதிலும் அக்கறையாக இல்லை. இப்படியே போனால் வன்னி என்பது இன்னொரு முள்ளிவாய்க்கால் போலாகும். அது இன்று அரசியலாகக் கொண்டாடப்படும் முள்ளிவாய்க்கால் போலல்லாமல் தலைகவிழ்ந்து துக்கப்படும் ஒன்றாகவே மாறியிருக்கும்.

எதிரொலி
Ethiroli
அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

## ஏனிந்தப் பாசாங்கு வாலாட்டல்?

ஈஸ்டர் குண்டுவெடிப்புகளுக்குப் பின்னர், இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கருத்துக்களை சிங்கள அரசியல்வாதிகள் பலரும் சகட்டு மேனிக்கு கொட்டித் தீர்த்தார்கள். "முஸ்லிம்கள் அனைவருமே தீவிரவாதிகள்" என்று சாரப்பட விஷ வார்த்தைகள் தீண்டத் தொடங்கின. அடுத்த ஜனாதிபதியாக வருவார் எனக் கணிக்கப்பட்டுள்ளவரும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய, இன்னும் ஒருபடி மேலே போய் " நான் ஜனாதிபதியானவுடன் முதல் வேலையாக முஸ்லிம் பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிப்பேன்" என சபதமும் எடுத்தார். இப்படி கருத்து ரீதியாக உருவாக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு எதிரான போக்கு பேரினவாதிகளிடம் உருக்கொண்டு, அது ஒரு இன வன்முறையாக மாற்றம் பெற்றபோது ஊரடங்கு உத்தரவு போடப்பட்டு, காடையர்களுக்கு வசதி செய்து கொடுத்தது இலங்கைப் பேரினவாத அரசு.

அத்தோடு இதுதான் சந்தர்ப்பம் என்று முஸ்லிம் பெண்கள் முகத்தை மறைத்து அணியும் புர்காவையும் அரசு தடை செய்தது. பள்ளிவாசல்கள் பலவும் துருவித் துருவிச் சோதனையிடப்பட்டன. முஸ்லிம்கள் பலர் கைதும் செய்யப்பட்டார்கள். சட்டத்தின் ஓட்டையினூடாக, எவ்வளவு தூரம் முஸ்லிம் மக்களை அவமானப்படுத்தி, நசுக்க முடியுமோ அவ்வளவுதூரம் பேரினவாதிகள் செய்தார்கள்இன்னும் செய்கிறார்கள்.

ஆனால் இவ்வளவு துன்பத்தின் மத்தியிலும், முஸ்லிம் மக்களுக்கு உறுதுணையாகக் குரல் கொடுத்தவர்கள் தமிழ் மக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் தான். தற்போது முஸ்லிம் மக்கள் படுகின்ற துயரத்தையும், இழப்பையும் ஏற்கனவே பேரினவாதிகளால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் தமிழ் மக்களால் உணரமுடிந்தது. தாங்கள் துயரப்பட்டபோது முஸ்லிம்கள் ஆறுதல் சொல்லாமல், பாற்சோறு கொடுத்து கொண்டாடியவர்கள் என்பதையும் புறந்தள்ளிவிட்டு, உளமார முஸ்லிம்களுக்கு உறுதுணையாகத் தற்போது தமிழ் மக்களும்,தமிழ் அரசியல்வாதிகளும் குரல் கொடுத்தார்கள்.

இப்படிப்பட்ட நிலையில், தம் பக்கமாக நிற்கும் இன்னொரு சிறுபான்மையினமான தமிழர்களுடனான உறவினை இன்னும் பலப்படுத்தி, பேரினத்தால் விடுக்கப்படும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமையை அதிகரிப்பதே முஸ்லிம் மக்களின் முன்னால் உள்ள ஆகச்சிறந்த தெரிவாக இருக்கமுடியும். ஆனால் நடப்பதென்ன?

எந்தப் பேரினவாதிகளால் அவமானப்படுத்தப்பட்டார்களோ, எந்த மதத்தின் காடையர்களால் அடித்து, உதைத்து, எரித்து கொல்லப்பட்டார்களோ அதே இனத்தின், மதத்தின் வெசாக் கொண்டாட்டத்துக்கு வெளிச்சக்கூடுகளையும், பூக்களையும் ஏந்திக் கொண்டு வரிசை கட்டுகிறார்கள் முஸ்லிம்கள். அதே தினத்தில் மே–18 இல் முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்காக தமிழினமே உணர்வு பூர்வமாக கண்ணீர் விட்டு, நினைவேந்துகையில், கிளிநொச்சிப் பள்ளிவாசலில், போரில் உயிரிழந்த இலங்கை இராணுவத்துக்கு அஞ்சலி செய்து, தமிழர்களின் உணர்வுகளின் மீது மீண்டுமொரு முறை காறி உமிழ்ந்திருக்கிறார்கள் முஸ்லிம்கள்.

சஹ்ரான் கும்பல் செய்த கொலைகளுக்காக முன்னாள் போராளி அஜந்தன் வீண்பழி சுமத்தப்பட்டு கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து சிறையில் இருக்கிறார். அந்தக் கொடூர கொலையைச் செய்தது சஹ்ரான் கும்பல் தான் என்று தெரிந்தவுடன், முஸ்லிம் அரசியல்வாதிகள் அஜந்தனின் விடுதலைக்காக குரல் கொடுத்திருக்க வேண்டும். அப்படி யாருமே குரல் தரவில்லை. மாறாக முஸ்லிம்கள் மீது வன்முறையை ஏவிய பொதுபல சேனாவின் ஞானசார தேரரை விடுவிக்கச் சொல்லி, சம்பந்தமே இல்லாமல் சிங்களத்துக்கு வாலாட்டும் பாசாங்கை முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்தார்கள். ஆனால் இவையெல்லாம் பாசாங்கு என்று பேரினவாதிகளுக்கும் நன்கு தெரியும். உண்மையாக தங்கள் பக்கம் நிற்கும் தமிழர்களை எட்டி உதைத்து விட்டு, கொலைவெறியோடு நிற்கும் பேரினவாதிகளுக்கு ஆலவட்டம் பிடிப்பதையே இனியும் தங்கள் பாதையாக முஸ்லிம் மக்கள் நினைத்தால், இன்னொரு அழிவு ஏற்படும் போது ஆறுதல் கொடுக்க, அரவணைக்க யாருமே அவர்களுக்கு இருக்கப்போவதில்லை என்பதே யதார்த்தம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

**"ஒரு சுடரேற்றுவதற்கு நெஞ்சில் இடமில்லாத சமூகம் வாழும் நாட்டில்தான் தமிழர்கள் சுதந்திரத்துக்காக ஏங்குகிறார்கள் என்று எண்ணும்போது நெஞ்சம் வெடித்துவிடும்போலுள்ளது. நல்லிணக்கம் என்ற சொல்லின் அர்த்தம் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. அதனைப் புரிந்துகொள்ளக்கூட முயற்சி எடுக்காமல் எத்தனை வெசாக் கூடுகள் கட்டியும் பயனில்லை. கடைசியில் கலண்டரில் மத நல்லிணக்கம் தேடிய கதையாகத்தான் போய்முடியும்."**



# புத்த தர்மம் இதுதானோ?

● ப.தெய்வீகன்

குருதியாறு ஓடிய நாளைக் குதூகலமாய் கொண்டாடியவர்களே!

ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும் கலண்டர்களில் மூன்று மதக் கடவுள்களின் படங்களும் இடம்பெற்றிருப்பதை சிறிய வயதில் பார்த்திருக்கிறேன். அது மத நல்லிணக்கத்துக்கான குறியீடு என்பதை பின்னாட்களில் அறிந்துகொண்டேன். ஆனால், அந்த மத நல்லிணக்கம் என்பது அந்த கலண்டருக்கு வெளியே எனக்கு ஏதாவது ஒரு புரிதலை அல்லது நடைமுறை சாத்தியங்களை ஏற்படுத்தித் தந்திருக்கிறதா என்றால் அப்படியானதொரு சந்தர்ப்பம் எனக்கு வாய்க்கவேயில்லை என்றுதான் கூறுவேன்.

அதுபோலதொரு போலி மத நல்லிணக்கத்துக்கான பெரும் கூச்சலைத்தான் இம்முறை இலங்கையில் வெசாக் கொண்டாடப்படும் போதும் காணக்கூடியதாக இருந்தது. சிங்கள மேலாதிக்க அரசகட்டமைப்பு நேற்றைய தினத்தை வெசாக் தினத்துக்கு அப்பால், போரை வென்ற 'வெற்றியாளர்கள் தினம்' என்றும் விமர்சையாகக் கொண்டாடியது. அதாவது, முள்ளிவாய்க்காலில் - சூனியப்பிரதேசம் ஒன்றில்வைத்து பல்லாயிரக்கணக்கான அப்பாவிகளைக் கொலை செய்து சாட்சிகளற்ற ஒரு இன அழிப்பை நடத்திய தங்களது படையினரின் 'பெரு வீரத்தை' பாராட்டி உச்சி முகர்ந்து கொண்டார்கள். சிங்களவர்கள்மாத்திரமல்ல, தமிழர்களிலும் சிலர் சிலிர்த்துப்போய் முகநூலில் நூடில்ஸ் பதிவுகள் போட்டுக்கொண்டிருந்ததை ஏளனமாகப் பார்த்துக்கொண்டேன்.

இன்னொருபுறத்தில், தான் அடிக்கடி ஹெலிகொப்டரில் போய் கிளிநொச்சியில் இறங்கும்போது தாமரைப்பூக்களோடு வரிசையில் வந்து நின்று வரவேற்கப்பணிக்கப்படுகின்ற சிறுவர், சிறுமிகளின் சொந்தங்கள் தங்களது உறவுகள் இறந்த தினத்தை முள்ளிவாய்க்கால் மண்ணில் அழுது குழறி அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறார்களே என்ற எந்த உயர்வும் இல்லாமல் பெருமதிப்புக்குரிய நாமல் ராஜபக்ஷ புன்னகைத்தபடி போரை முடித்துவைத்த தனது நாட்டின் வெற்றி வீரர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, தான்கொண்டாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் படங்களை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியிருந் தார்.

அவராவது பரவாயில்லை, தமிழர் இரத்தத்தில் குளித்த குடும்பத்தில்வந்த 'பெருந்தகை' அவரது மூளையும் அப்படித்தான் சிந்திக்கும்!

நாட்டின் அடுத்த புத்தர் போல எங்குபோனாலும் சாந்தி, சமாதான, நல்லிணக்க வகுப்பெடுக்கும் 'வீரர்' குமார் சங்கக்கார. புத்தருக்கு போதி மரத்துக்குக் கீழ் ஞானம் கிடைத்தது போல, சங்கக்கார மூன்று விக்கெட்டுகளுக்குக் கீழ் இருந்ததால் ஞானம் பெற்றவர். அவர் நேற்று போரினால் விசேட தேவைக்குட்பட்டவர்களாகிப்போய்விட்ட சிங்களப்படையினரில் ஒரு தொகுதியினரை தனது 'மினிஸ்ரி ஒவ் கிரப்' (Ministry of Crab) சாப்பாட்டுக்கடைக்கு அழைத்து சாப்பாடு கொடுத்து அவர்களுடன் சேர்ந்து சிரித்தபடி போட்டோவுக்குப் போஸ் கொடுத்திருக்கிறார். அதாவது, போரின் வடு மறையாது பத்து வருடங்கள் கழிந்து இன்றுவரைக்கும் தள்ளுவண்டியில் முள்ளிவாய்க்காலில் போய் அழுது விட்டு வருகின்ற எத்தனையோ முன்னாள்ப் போராளிகள் தமிழ் தரப்பிலும் இருக்கிறார்கள் என்பது சங்கக்காரவுக்குத் தெரியாதது அல்ல. இருந்தாலும் அவரது 'மினிஸ்ரி ஒவ் கிரப்' (Ministry of Crab) இன் கதவுகள்தன் இனம்சார்ந்தவர்களுக்குத் தான் திறந்திருக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# விஷ உண்ணிகள்

● து.பிரசாந்தினி

'வெந்ததைத் தின்று விட்டு விதி வந்ததும் சாகவேண்டியதுதான்' என்று கிராமங்களில் விரக்தியாகச் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் அதனைக் கண்கூடே காணமுடிகின்றது. உணவு வெறும் உயிர் வாழத் தேவைப்படும் பொருளாக மாறிவிட்டது. அது ஆரோக்கியமான வாழ்க்கையின் அருமருந்தென்பதைப் பலர் மறந்துவிட்டனர். அதனாலேயே மருந்தாக வேண்டிய உணவு இன்று விஷமாகிவிட்டது. இதற்கு நம் பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களின்றும் நாம் விடுபட்டதே காரணம். நம் முன்னோர்கள் உணவே மருந்தாகவும் மருந்தே உணவாகவும் வாழ்ந்தவர்கள். அதன் வழிவந்த நாமோ இன்று பழைமையை மறந்து நோய் நொடிகள் நிறைந்த வெளிநாட்டவர்களின் உணவுப் பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிட்டோம்.

இன்று 35 வயது கடந்தாலே தொற்றா நோய்களின் இருப்பிடமாக எமது உடல் மாறிவிடுகிறது. இலங்கையில் குருதிச்



அது தெரிந்தும் தம் கையால் மெல்லக் கொல்லும் விஷத்தை பிள்ளைகளுக்குக் கொடுக்கும் பெற்றோர்களை என்னவென்பது? அதுமட்டுமல்ல இன்று பெண்கள் சிறுவயதிலேயே பருவமடைகின்ற நிலை அதிகரித்துள்ளது. அதற்குப் பல காரணங்களிருப்பினும் துரித உணவுகளே பிரதான காரணமாக அமைகின்றன எனப் பல ஆய்வுகள் கூறுகின்றன.

ரணமாக உண்ணும் உணவு. இன்று நீரிழிவு உள்ளவர்கள் உண்ணும் உணவாகிவிட்டது. முன்பு தாகம் தீரத் தண்ணீர் குடிப்பதிலிருந்து சமையல் வரை வீடுகளில் மண்பாணை, சட்டிகளைத்தான் பயன்படுத்துவார்கள். இன்று மட்பாண்டங்கள் அழகுக்கான பொருட்களாகிவிட்டன. மண்பாணையில் சமைக்கின்ற போது அடுப்புத்தீ சமைக்கின்ற உணவின்மேல் சீராகவும், மெதுவாகவும் பரவும் இதனால் உணவிலுள்ள சத்துக்கள் பாதுகாக்கப்பட்டு உடனே செரிமானமாகிவிடும். உணவிலுள்ள அமிலத்தன்மையை சமப்படுத்தும் தன்மையும் அவற்றுக்கு உண்டு. சாப்பிடும் போதுகூட வாழையிலை, வாழைமரப்பட்டைகள் இணைந்த ஓடுகள், இலைகள் இவற்றையே உணவு உண்ணப் பயன்படுத்தினர். மற்றைய உலோகங்களில் சூடான உணவைப் போடும் போது ஏற்படும் இரசாயண மாற்றம் இந்த இலைகளில் ஏற்படுவதில்லை. மாறாக நன்மையே செய்கின்றது. முன்னரெல்லாம் இரவு உண்டு மீதமுள்ள உணவில் (சோறு) நீரையும், கொஞ்சம் உப்பையும் போட்டு வைத்து காலையில் பழைய சோற்றை சாப்பிட்டு விட்டு இறுதியில் கஞ்சித்தண்ணீரைக்



சோகை நோயானது வயது வித்தியாசம் இன்றி பாதிப்பை ஏற்படுத்தும் போசணைக் குறைபாடாக இன்றும் இருந்து வருகிறது. கடந்த ஆண்டில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியுள்ளதாக சுகாதார அமைச்சின் ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. இவ்வாறான நோய்களுக்குரிய காரணங்களாக பலவற்றைக் குறிப்பிட்டாலும் ஆரோக்கியமற்ற உணவுப்பழக்க வழக்கமே பிரதான காரணமாகும்.

இன்றைய தலைமுறையினர் துரித நகரமயமாக்கல் வாழ்க்கை முறை மாற்றத்தால் நிற்கக்கூட நேரமில்லாமல், எங்கே ஓடுகிறோம் என்றும் தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கின்றார்கள். இதனால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குக் கொடுப்பதெல்லாம் துரித உணவுகளும், பதப்படுத்திய உணவுகளும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்த உணவுகளுமே. பன்னாட்டு நிறுவனங்களும் துரித உணவுகளை அறிமுகப்படுத்தி நம் மக்களை அடிமைகளாக்கி வருகின்றன. நூடில்ஸ், பிறைட் றைஸ், பீட்சா, பேகர், மென்பானங்கள் எனப்பல. இவற்றில் உடல் நலத்துக்குத் தேவையான சத்துக்கள் இருப்பதில்லை.

'எந்திரத் துப்பாக்கிகளை விடக் கொடிய ஆயுதங்களாகப் பதனப்படுத்தப்பட்டு டப்பாக்களில் அடைத்து விற்கப்படும் உணவுகள்தான் துரித உணவுகள்.' என்று ஜார்ஜ் ஆர்வல் எனும் எழுத்தாளர் கூறுகின்றார். துப்பாக்கியால் சுட்டால்க் கூட ஒரே முறையில் நம் உயிர் போய் விடும். ஆனால் தினசரி நம் உடலைக் கெடுக்கக்கூடிய, உணர்வுகளைக் கெடுக்கக்கூடிய இந்தத் துரித உணவுகளை உண்டு தினசரி நாம் இறந்துகொண்டிருக்கின்றோம்.

எமது பாரம்பரிய உணவு முறை சமைக்கும் முறை பரிமாறும் முறை என அனைத்தும் ஆரோக்கியத்தை முன்னிறுத்தியே வகுக்கப்பட்டன. முன்னர் கிராமங்களை அண்டி இயற்கை விவசாயம் மேற்கொள்ளப்பட்டது. குரக்கன், சாமை, திணை, வரகு, பயறு, கௌப்பி போன்ற தானியங்கள், கீரை வகைகள், கிழங்கு வகைகள், மரக்கறி வகைகள் போன்றன பயிரிடப்பட்டன. நச்சுத் தன்மையற்ற சேதனப்பசளைபயன்படுத்தப்பட்டன. ஆனால் இன்று உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயணக் கலவைகள் பயன்படுத்தப்படுகின்றன.

முன்பெல்லாம் குரக்கன் ரொட்டி சாதா

குடிப்பார்கள். கிராமத்தில் உள்ளவர்கள் சின்ன வெங்காயத்தையும் இந்த பழைய சோற்றையும் உண்டு வருவதால் பல்வேறு நோய்கள் தீர்ந்து வருவதாக இன்றைய விஞ்ஞானம் கூடச்சொல்கின்றது. அமெரிக்கா கூட பழைய சோற்றில் பல சத்துக்கள் நிறைந்திருப்பதாக ஆராய்ந்து கூறியுள்ளது. வெளிநாடுகளில் பழஞ்சோற்றைக் காசு கொடுத்து வாங்கும் நிலைமை. ஆனால் இங்கு அதன் அருமை தெரியாது கழித்துவைக்கும்நிலைமை. இங்கு சக்கைகளை உண்ணும் கூட்டம் உருவாகிக்கொண்டிருக்கிறது.

மருத்துவ குணம் மிக்க பாரம்பரிய உணவுப்பழக்கவழக்கத்தைக் கொண்ட நம் சமூகம் இன்று பயன்படுத்தக்கூடிய உணவு என்னவென்று பார்த்தோமானால் மிகவும் வேதனை தரக்கூடிய விடயமாக இருக்கிறது. ஆனால் ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் நம் பாரம்பரிய உணவுகளின் குண நலன்களை அறிந்து அவற்றை உட்கொள்கின்றனர். நாமோ இன்னமும் நம் பாரம்பரியத்தின் மகத்துவத்தை உணராது அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றோம். அனைத்தும் நம் கைகளை மீறிவிடமுன் விழித்துக்கொள்ளுங்கள். கண்கெட்டபின் சூரியநமஸ்காரம் எதற்கு?




ஸுலறீனா அப்துல் ஹக்ஸூ

# காஃபிர்கள் என்று அழைக்கலாமா?

ஒரு சகோதரி என்னுடன் தொலைபேசியில் உரையாடினார். அவர் ஓர் ஆசிரியை. அவர் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எனும் மும்மொழிப் பாட்சாலை ஒன்றில் பணியாற்றுகின்றார். பேச்சுவாக்கில், தமது அதிபர் உள வள ஆலோசனை உள்ளிட்ட முக்கியமான எல்லாப் பொறுப்புக்களையும், 'காஃபிர்'களிடம் ஒப்படைத்திருப்பதாகச்சொல்லிக்குறைபட்டார். சுகநலங்களை விசாரித்து விட்டு, தனக்குப் பாடத்துக்குப் போக நேரமாவதாய்ச் சொல்லிவிட்டு தொலைபேசி அழைப்பை துண்டித்துவிட்டார். அவரது கருத்துக் குறித்து அவரை அடுத்த முறை நேரில் சந்திக்கும் போது விரிவாய்ப் பேசவேண்டும் என எண்ணிக் கொண்டேன். அந்த உரையாடலின் அடியான எண்ணங்கள் மனதை ஆட்கொள்ளத் தொடங்கின.

இலங்கை பன்மைத்துவ சமூகங்கள் வாழும் ஒரு நாடு. இனமுரண்பாட்டுப் போரினால் மூன்று தசாப்தகாலமாய் சீர்குலைந்த ஒரு நாடும்கூட. இந்நிலையில், அதுபோன்ற ஒரு கொடிய இன முரண்பாடு மீண்டும் எழாமல் இருக்க இனங்களுக்கிடையில் நல்லெண்ணமும் பரஸ்பரப் புரிந்துணர்வும் மதிப்புணர்வும் எல்லாத்தரப்பு மக்கள் மத்தியிலும் பரவலாகவேண்டிய தேவை ஆழமாக இருக்கின்றது. அத்தகைய ஒரு நிலை வெற்றிடத்திலிருந்து தோன்றிவிடப்போவதில்லை. மாறாக, சமாதானத்தையும் அமைதியையும் விழையும் அனைத்துத் தரப்பினரும் தத்தமது மட்டங்களில் அதற்கான முனைப்பில் ஈடுபடல் வேண்டும். குறித்த சகோதரி சொன்ன கருத்தில் இரண்டு விடயங்களை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாகின்றோம்.

1. முஸ்லிம் அல்லாதோரைக் 'காஃபிர்கள்' என வகைப்படுத்துதல்.

2. முஸ்லிம் அல்லாதவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைத்தல் தொடர்பான அதிருப்தி.

உண்மையில், காஃபிர்கள் என்ற பதப் பிரயோகத்தை அல்குர்ஆன் யாரை நோக்கிப் பயன்படுத்தியுள்ளது என்ற கேள்வி மிகவும் முக்கியமானது. அரபிகள் மத்தியில் அல்குர்ஆன் இறங்கப் படும்போது, அரபிகளாக இருந்து அல்குர்ஆனின் தூதை நன்கு புரிந்துகொண்டபின் அதனை மனமுரண்பாடாக மறுத்தவர்களையே அல்லாஹ் 'காஃபிர்கள்' - 'இறை மறுப்பாளர்கள்' எனக் குறிப்பிடுகின்றார். அப்படியானால், இலங்கையிலுள்ள முஸ்லிம் அல்லாதவர்கள் யாவரும் அல்குர்ஆனின் செய்தியை உள்ளவாறு முழுமையாகப் புரிந்துகொண்ட பின் அதனை வேண்டுமென்றே ஏற்க மறுத்த காஃபிர்கள் என்ற வகைப்பாட்டுக்குள் அடங்குவார்களா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வாழும் முஸ்லிம் அல்லாதவர்கள் பற்றிய இந்தப் பிழையான வரைவிலக் கணப்படுத்தல், அவர்களைத் தம்மைப் போலவே கருதிச் சகமனிதர்களாய் சமத்துவமாய் ஏற்றுக்கொள்ளத் தயங்குதல், அவர்களுடனான ஊடாட்டங்களை இயன்றளவுக்குக் குறைத்துக் கொள்ளும் முனைப்பு, அவர்களைப் பற்றிய இழிவெண்ணம், தனித்துவம் காத்தல் என்ற பெயரில் அவர்களிலிருந்து ஒதுங்கி வாழுதல் போன்றன வேரூன்றி வளர்ந்தமைக்கான முழுப் பொறுப்பும் நமது ஆலிம்களையேஃ ஆசிரியர்களையே சாரும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அவர்கள் தமது சன்மார்க்க உரைகளின் வழியே இத்தகைய தவறான கருத்துக்களை மக்கள் மனங்களில் தூவி, அவை வளர்ந்து பரவலடைய அறிந்தோ அறியாமலோ காரணமாகி விட்டார்கள் என்பது மிகவும் கசப்பான உண்மையாகும்.

இஸ்லாம் என்பது உலக மக்களுக்கு ஓர் அருட்கொடை என்றும், முழு மனித குலமும் ஆதம் - ஹவ்வா (அலை) எனும் ஒரே பெற்றோரில் இருந்து உருவானது என்றும் றஹ்மத்துலில் ஆலமீன் சொல்கின்றது. இறைவனை விசுவாசிப்போர், இணையவைப்போர், இறைவனே இல்லையென்போர் என எல்லாத் தரப்பினரும் உலகம் அழியும் வரையில் பூமியில் இருக்கப் போகிறார்கள் என்பது யதார்த்தம். அல்லாஹ்வை ஒருவர் ஏற்றுக்கொள்கிறார், நிராகரிக்கிறார் என்பதை அல்லாஹ் அவரவர் தெரிவாக வழங்கியுள்ளான். அதற்கான தீர்ப்பினை இறுதிநாளில் வழங்கிவைக்க அவனே போதுமானவன். 'லகும் தீனுக்கும் வலியத்தீன்' (எனக்கு எனது மார்க்கம், உங்களுக்கு உங்களது மார்க்கம்), 'லா இக்ராஹ /பித்தீன்' (மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை) என்ற அல்குர்ஆன் வசனங்களின் ஊடே தனிமனித சமய சுதந்திரத்துக்கு உத்தரவாதம் அளித்து, மனித உரிமை பேணும் ஒரு மார்க்கம் இஸ்லாம். அதேவேளை, பிற சமயத்தவர்களை நேசிக்கக்கூடாது என்றோ அவர்கள் மத்தியில் பாரபட்சம் காட்டுமாறோ, அவர்களுக்கு அநீதி இழைக்குமாறோ. அவர்களை வெறுத்து ஒதுக்குமாறோ இஸ்லாம் ஒருபோதும் கட்டளை இடவில்லை.

> இலங்கை பன்மைத்துவ சமூகங்கள் வாழும் ஒரு நாடு. இனமுரண்பாட்டுப் போரினால் மூன்று தசாப்தகாலமாய் சீர்குலைந்த ஒரு நாடும்கூட. இந்நிலையில், அதுபோன்ற ஒரு கொடிய இன முரண்பாடு மீண்டும் எழாமல் இருக்க இனங்களுக்கிடையில் நல்லெண்ணமும் பரஸ்பரம் புரிந்துணர்வும் மதிப்புணர்வும் எல்லாத்தரப்பு மக்கள் மத்தியிலும் பரவலாகவேண்டிய தேவை ஆழமாக இருக்கின்றது. அத்தகைய ஒரு நிலை வெற்றிடத்திலிருந்து தோன்றிவிடப் போவ தில்லை. மாறாக, சமாதானத்தையும் அமைதியையும் விழையும் அனைத்துத் தரப்பினரும் தத்தமது மட்டங்களில் அதற் கான முனைப்பில் ஈடுபடல் வேண்டும்.

மாறாக, நம்முடைய சொல்லாலும் செயலாலும் நீதி நேர்மையாகவும் உண்மையாகவும் சக மனிதர்கள் மீது அன்பு காட்டியும் 'உம்மத்தன் வஸத்' எனும் நடுநிலைமைப் பண்புடன் முன்மாதிரியாய் வாழ்வதன் மூலம் இஸ்லாத்தின் செய்தியை பரப்புவதும், நீதி நியாயம், மனித உரிமைகள் முதலான விழுமியங்கள் உலகில் தழைத்தோங்க உழைப்பதுமே அல்லாஹ்வின் பிரதிநிதிகளான, நமது கடமையாகின்றது. இந்நிலையில், மற்றைய சமூகத்தவரை மானசீகமாகவும், பௌதீக ரீதியாகவும் புறந்தள்ளி ஒதுக்குவதன் மூலமும், அவர்கள் மீது வெறுப்புக் கொள்வதன் மூலமும் நம்மால், உலகுக்கு அருளாக அமையும் இந்த வகிபாகத்தைத் திறம்பட ஆற்றுவது எப்படிச் சாத்தியமாகும்?

வறுமை குஃப்ரை நெருங்கச் செய்யும் என்கிறது இஸ்லாம். ஆக, வறுமை ஒழிப்பினை ஊக்குவித்து, ஸக்காத், ஸதகா முதலானபொருளாதார நடைமுறைகளை இஸ்லாம் ஊக்குவிக்கின்றது என்பதை நாம் அறிவோம். என்றாலும் அதன்போது அனைவரதும் இறைவனான அல்லாஹ், முஸ்லிம்கள் மட்டுமே அவற்றின் மூலம் பயனடைந்து வறுமையில் இருந்து மீளவேண்டும் என்று பாரபட்சம் காட்டுபவனாய் இருப்பானா என்ற கேள்வி மிக முக்கியமானது. நீதியாளனாகிய, உணவளிப்பவனாகிய அல்லாஹ் முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் ஒரே விதமாகவே உணவளிப்பான், நீதி செலுத்துவான் என்ற உண்மை நம் உள்ளங்களில் அழுந்திப் பதிய வேண்டாமா?

இதை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால், இன்றும்கூட நமது இஸ்லாம் பாடப் புத்தகங்களில், ஸக்காத்தினை முஸ்லிம்களுக்கு இடையில் மட்டும் வழங்கப்பட வேண்டியதாகவும், ஸதகாவினை முஸ்லிம், முஸ்லிமல்லாதோர் என எல்லோருக்கும் வழங்கப்படக்கூடியதாகவும் வரைவிலக்கணப்படுத்தப்படும் அவலம் குறித்து அப்பாடத் திட்டத்தை வகுக்கும் நமது ஆலிம்கள் ஆசிரியர்கள் யோசித்ததாகத் தெரியவில்லை. ஓர் ஊரில், 40 குடும்பங்களில் 10 குடும்பங்கள் கடும் வறுமையில் இருப்பதாகவும் அதில் 3 குடும்பங்கள் முஸ்லிம் அல்லாதோருடையதாகவும் இருக்குமானால், ஸக்காத்தின் மூலம் அந்த ஊரின் வறுமையை ஒழிக்கும் போது, அந்த முஸ்லிம் அல்லாதோர் புறக்கணிக்கப்படும் நிலையை றஹ்மத்துலில் ஆலமீனாகிய இஸ்லாத்தின் பார்வையில் நின்று எப்படி அங்கீகரிக்க முடியும்?

(16 ஆம் பக்கம் பார்க்க)

# எலியும் தாத்தாவும்




முன்னொரு காலத்தில் காட்டில் வயதான தாத்தாவும் பாட்டியும் வசித்து வந்தார்கள். அவர்கள் தினமும் காட்டிலுள்ள மரங்களை வெட்டி, விறகாக்கி அதை பக்கத்துக் கிராமத்தில் விற்று பிழைப்பை நடத்தி வந்தார்கள். ஒரு நாள் மதியம் தாத்தா மிகவும் களைத்துப்போய் சாப்பிட அமர்ந்தார்.

பாட்டி அவருக்கு கேழ்வரகுக் களி சமைத்து அனுப்பியிருந்தார். களியை கையில் எடுத்துச் சாப்பிடப் போனார். அது தவறிக் கீழ்ே விழுந்தது. அது ஒரு பொந்துக்குள்ளே போய் விழுந்துவிட்டது. அது ஒரு எலிப் பொந்து போல இருந்தது. அய்யோ இனி சாப்பாட்டுக்கு என்ன செய்வதென்று யோசித்தார் அந்தத் தாத்தா. நல்ல பசி. அப்படியே அமர்ந்திருந்தார். திடீரென ஒரு அழகான எலி பொந்திலிருந்து எட்டிப் பார்த்து 'சாப்பாடு போட்டமைக்கு மிக்க நன்றி தாத்தா' என்று சொல்லியது. அட! எலி பேசுகின்றதே என்று ஆச்சரியமாகப் பார்த்தார். 'நன்றாக சாப்பிடு' என்று தாத்தா எலியிடம் சொல்லிவிட்டு, 'நீ பார்க்க மிகவும் அழகாக இருக்கின்றாய்' என்றும் சொன்னார். எலி சிரித்துக்கொண்டே 'நீங்கள் எங்களுடைய அரண்மனைக்கு வருகின்றீர்களா?' என்று கேட்டது. தாத்தா சிரித்துக்கொண்டே 'இந்தச் சிறிய பொந்துக்குள்ளேயா...? நானா...!? நான் எப்படி வர முடியும்' என்று கீழே உட்கார்ந்து கேட்டார். முடியாதது எதுவும் இல்லை தாத்தா, அது மிகவும் சுலபம், நீங்கள் என்னுடைய வாலைப் பிடித்துக் கொண்டு கண்ணை மூடிக்கொள்ளுங்கள்' என்று சொல்லியது. தாத்தாவும் சிரித்துக்கொண்டே கண்ணை மூடி எலியினுடைய வாலைப் பிடித்துக்கொண்டார். அவருக்கு ஒரே ஆச்சரியம். எங்கேயோ பறக்கிற மாதிரி இருந்தது. கொஞ்ச நேரம் கழித்து 'தாத்தா வாங்க வாங்க' என்ற அன்பான வரவேற்பு சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தார் தாத்தா. எலிகளுடைய அரண்மனை மிகவும் பிரமாண்டமாய் இருந்தது. அங்கே நிறைய தங்கங்கள் குவிந்து கிடந்தன. சில எலிகள் சமைத்துக்கொண்டிருந்தன. சில எலிகள் ஓடி ஆடி விளையாடிக்கொண்டிருந்தன. சில எலிகள் சாப்பாட்டுப் பொருட்களை எங்கிருந்தோ எடுத்துக் கொண்டு வந்தன. எங்கு பாத்தாலும் தங்கமாக இருந்தது. அப்போது பெண் எலி வந்து 'தாத்தா உங்களுக்கு பசிக்கும், இந்தாருங்கள் சாப்பாடு' என்று சாப்பாடு கொடுத்தது. எலிகள் எல்லாம் பாட்டுப் பாடி மகிழ்ச்சியாக ஆடிப் பாடி மகிழ்ந்து கொண்டிருந்தன. 'நாங்கள் இங்கே எலிகள் நல்ல நல்ல எலிகள் பூனை சத்தம் வேண்டாமே எங்கும் அமைதி வேண்டுமே திலக்கலக்கா திலக்கலக்கா' இதுதான் அந்தப் பாட்டு. தாத்தா அந்தப் பாட்டைக் கேட்டுக் கொண்டே சந்தோசமாக சாப்பிட்டு முடித்தார். ராஜா எலி ஒன்று தாத்தாவை நோக்கி ஒரு மூட்டையை இழுத்து வந்தது. தாத்தாவிடம் வந்து, இது எல்லாம் உங்களுக்குத்தான், நீங்கள் எடுத்துக்கொண்டு செல்லுங்கள்' என்று சொல்லியது. தாத்தா மூட்டையைத் திறந்து பார்த்தார். ஒரே ஆச்சரியம்! மூட்டை நிறைய தங்கம். தாத்தா எலிகளிடமிருந்து விடைபெற்று மறுபடியும் அதே எலி வாலைப் பிடித்துக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பறந்து அவர் வீட்டுக்கு வந்துவிட்டார். வீட்டுக்கு வந்த தாத்தா, அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பாட்டியிடம் சுவாரஷ்யமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். தங்கத்தை எல்லாம் காண்பித்தார். பக்கத்து வீட்டிலிருந்த ஒருத்தன் இதை எல்லாம் ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான். மறுநாள் பக்கத்து வீட்டுக்காரன் அதே பொந்துக்குப் போய் ஒரு களி உருண்டையைப் போட்டான். அதே எலி வந்தது. அதே போலவே அவனை அவர்களுடைய அரண்மனைக்கு அழைத்துச் சென்றது. 'நாங்கள் இங்கே எலிகள் நல்ல நல்ல எலிகள் பூனை சத்தம் 'வேண்டாமே எங்கும் அமைதி வேண்டுமே திலக்கலக்கா திலக்கலக்கா' எலிகள் பாடும் சத்தம். அரண்மனையில் எங்கு பார்த்தாலும் தங்கமாக இருந்தது. இவனுக்குப் பேராசை. ஒரு மூட்டை தங்கம் மட்டும் போதாது. இதை எல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டு யோசித்தான். பெண் எலி இவனுக்கு சாப்பாடு எடுத்து வரும் போது 'மியாவ் மியாவ்' என சத்தம் போட்டான். எல்லா எலியும் பயந்து எங்கே போனது என்று தெரியவில்லை. கொஞ்ச நேரத்தில் ஒரு எலியும் அரண்மனையில் இல்லை. எல்லாத் தங்கத்தையும் அள்ளி எடுத்தான். ஆனால் அங்கிருந்து எப்படி வெளியே போவதென்று தெரியவில்லை. ஒரே இருட்டாக மாறிவிட்டது. கத்தி அழுது பார்த்தான். ஒருவரும் வரவில்லை. எலிகள் அந்த இடத்திலிருந்து இடம்மாறிப் போய் வேற இடத்தில் அரண்மனையைக் கட்டி சந்தோசமாக வாழ்ந்தன. பேராசை இல்லாத தாத்தா நன்கு பிழைத்து வந்தார். பேராசை கொண்ட பக்கத்து வீட்டுக்காரன் இன்னும் எங்கிருக்கின்றான் என்று தெரியவில்லை. அளவான ஆசையுடன் இருப்பது யாருக்கும் துன்பம் இல்லை. ■

# அறியலாம் வாங்க....

## அம்மாடி! இவ்வளவா!

மே

- **01** சர்வதேச தொழிலாளர் தினம்
- **03** ▲உலக பத்திரிகைச் சுதந்திர தினம்
  ▲உலக ஆஸ்துமா தினம்
  ▲உலக சக்தி தினம்
- **08** ▲உலக செஞ்சிலுவை தினம்
  ▲உலக செம் பிறை தினம்
- **11** தேசிய தொழில் நுட்ப தினம்
- **12** ▲உலக அன்னையர் தினம் (இலங்கையில் ஒவ்வொரு வருடத்திலும் வரும் மே மாதத்தின் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையில் அன்னையர் தினம் கொண்டாடப்படுகின்றது. இவ் வருடம் 12 ஆம் திகதி கொண்டாடப்பட்டது)
  ▲உலக தாதியர் தினம்




- **15** சர்வதேசக் குடும்ப நல தினம்
- **17** உலக தொலைத் தொடர்பு தினம்
- **18** திமிங்கிலங்கள் தினம்
- **19** உலக எயிட்ஸ் நோயாளர்களுக்கு உதவி வழங்கும் தினம்
- **21** உலக கலாசார பண்பாட்டு தினம்
- **24** பொதுநலவாய தினம்
- **29** ▲ஐக்கிய நாடுகளின் சமாதானத்தைப் பாதுகாப்போரின் சர்வதேச தினம்
  ▲உலக தம்பதியினர் தினம்
- **31** உலக புகைப்பாவனை தவிர்ப்பு தினம்

## மூளைக்கு வேலை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | 5 | | 7 | 1 | 3 |
| 4 | 3 | 1 | | | | 8 | | 5 |
| 6 | 7 | 5 | 8 | | | | 9 | 4 |
| | 1 | 6 | | 7 | 5 | | | |
| 7 | 4 | | 2 | 6 | 8 | 9 | | 1 |
| | 5 | 2 | 9 | 1 | 4 | | 3 | 7 |
| 5 | 2 | 7 | 6 | | | 1 | | 9 |
| 1 | 6 | 4 | | 9 | | 3 | 8 | 2 |
| | 8 | | 1 | | 2 | | | 6 |

## பொருளறிவோம்

- ❒ பொச்சாவாமை - சோர்வின்மை
- ❒ பொறையுடைமை - பொறுமையாக இருத்தல்
- ❒ அழுக்காறாமை - பொறாமை இல்லாமை
- ❒ வெகுளாமை -'.கோபம் கொள்ளாமை
- ❒ அவாவறுத்தல் -ஆசையை விட்டுவிடுதல்
- ❒ வலியறிதல் -வலிமையை அறிதல்
- ❒ மடியின்மை -சோம்பல் இல்லாமை
- ❒ பேதைமை - அறிவில்லாமை

# சுதந்திர இலங்கையின் முதலாவது...


சந்திரிக்கா

- ❒ பிரதமர் - டி.எஸ்.சேனநாயக்க
- ❒ ஜனாதிபதி - வில்லியம் கோபல்லவா
- ❒ நிறைவேற்றதிகார ஜனாதிபதி - ஜே.ஆர்.ஜெயவர்தன
- ❒ பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டார நாயக்க (1960-65, 1970-77 மற்றும் 1994-2000)
- ❒ முதலாவது பாராளுமன்ற கூட்டத் தொடரை ஆரம்பித்து உரையாற்றியவர் - 2ஆம் எலிசபத் மகாராணி
- ❒ ஆங்கிலேய ஆளுநர் - பிரெட்றிக் நோர்த்
- ❒ பெண் மாகாண முதலமைச்சரும் பெண் ஜனாதிபதியும் - சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க
- ❒ தேர்தல் மூலம் தெரிவான முதல் ஜனாதிபதி - ஜே.ஆர்.ஜெயவர்தன
- ❒ தேசாதிபதி - சேர் ஒலிவ் குணவர்தன
- ❒ சபாநாயகர் - சேர் பிரான்சிஸ் மொலமுரே
- ❒ தமிழ்மொழியில் வெளியான பத்திரிகை - உதயதாரகை
- ❒ சிங்கள மொழியில் வெளியான பத்திரிகை - சிங்களஹட
- ❒ ஆங்கில மொழியில் வெளியான பத்திரிகை - த கொழும்பு ஜேணல்
- ❒ தமிழ்த்துறைப் பேராசிரியர் - சுவாமி விபுலானந்தர்


ஜே.ஆர்.ஜெயவர்தன

- ❒ புகையிரதப் பாதை- கொழும்பு - கண்டி
- ❒ அரசியற் கட்சி - தேசிய காங்கிரஸ்

பேராசிரியர்
எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்

( The Bombings, Refugees & Emergency Regulations: The Dangers Of A Military Dictatorship என்ற தலைப்பில் கொழும்பு ரெலிகிராப்பில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் )



# அகதிகளின் கதி

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் (Human Rights Watch) தகவல்களின் பிரகாரம் இலங்கையில் தஞ்சம் கோருபவர்கள் சுமார் 1,600 பேர். இவ் அகதிகளில் ஆப்கானிஸ்தானியர்கள், ஈரானியர்கள், பாகிஸ்தானியர்கள் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் இஸ்லாமியர்கள். ஒரு சில கிறிஸ்தவர்களும் உள்ளனர். இவ்வாறான நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் அவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் உடனடிப் பாதுகாப்புத் தேவைப்படுகின்றது.

கிறிஸ்தவத் தொழிலாளர் சகோதர அமைப்பொன்றின் பகல் உணவு விருந்தில் அகதிகள் சமையல்காரர்களாகச் செயற்பட்ட சந்தர்ப்பத்தில் அவர்களினால் தயாரிக்கப்பட்டிருந்த சுவை மிக்க உணவை உட்கொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களில் ஒருவர் இலங்கையில் இறையியல் தொடர்பான பட்டப் படிப்பை படித்ததுடன், அவர் இப்பொழுது அங்கிலிக்கன் திருச்சபையின் மதகுருவாகவும் இருந்து வருகின்றார். இலங்கையில் அங்கிலிக்கன் திருச்சபையின் மதிப்பு மிக்க ஒருவராவார். இவ்வாறு பெருந்தொகையான மக்களுக்குத் தஞ்சம் வழங்குவதும் பாதுகாப்புத் தேவைப்படும் சிறுபான்மை மக்களுக்கு ஆதரவளிப்பதும் இலங்கையின் மதிப்பு மிக்க சாதனைகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. இந்தச் சாதனை இப்பொழுது ஓர் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்திலிருந்து வெளிவரும் 'த' ரெலிகிராப்' (The Telegraph ) பத்திரிகை 'இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களையடுத்து முன்னெடுக்கப்பட்ட பழிவாங்கல் தாக்குதல்களின் காரணமாக 1,000 முஸ்லிம் அகதிகள் தமது வீடு, வாசல்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள்' எனச் செய்தி வெளியிட்டுள்ளது. அது மாத்திரமல்ல எமது வெட்க உணர்வைப் பிரதிபலிக்கும் விதத்தில் ஒரு சில உள்ளூர்ப் பத்திரிகைகளும் இந்தச் செய்தியை வெளியிட்டிருந்தன.

மேலும் டெலிகிராப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில், மூன்று நாடுகளைச் சேர்ந்த சிறு எண்ணிக்கையிலான கிறிஸ்தவ அகதிகளும் தவறான விதத்தில் அடையாளம் காணப்பட்டதன் விளைவாக இந்தத் தாக்குதல்களில் சிக்கிக் கொண்டனர். எனப் பாகிஸ்தான் அஹமதியா முஸ்லிம்களைச் சேர்ந்த 58 வயதான தாரிக் அகமத் என்பவரை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானில் அவர்கள் முஸ்லிம்கள் அல்லாதவர்கள் எனக் கூறப்பட்டுத் துரத்தி அடிக்கப்பட்டதாகவும், இலங்கையில் அவர்கள் எங்களை முஸ்லிம்கள் எனக் கருதும் காரணத்தினால் எம்மைத் தாக்குகின்றார்கள் எனவும் 'அசோசியட் பிரஸ்" (Associated Press) செய்தி நிறுவனத்துக்கு அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர், எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "சுமார் 650 அகதிகள் நீர்கொழும்புக்கு அருகில் பஸ்யாலை என்ற நகரில் ஒரு பள்ளிவாசலில் தஞ்சம் கோரியிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஏனையவர்கள் பொலிஸ் நிலையங்களிலும், உள்ளூர் பாடசாலைகளிலும் தங்கியிருப்பதாக நம்பப்படுகின்றது. அதே வேளையில் 30 ஈரானியர்கள் தமது வீடுகளுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்றார்கள்." எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேவாலயத்தின் நடவடிக்கை

புனித வேதாகமத்தில் பல இடங்களில் கட்டளையிடப்பட்டது போல கிறிஸ்தவ தேவாலயம் இந்தப் பிரச்சினைக்கு எதிர் வினையாற்றியது. விசுவாசமிக்க முஸ்லிம்களும் கூட செய்ய வேண்டியவையாகக் கருதப்படும் மூன்று விடயங்களை இங்கு மேற்கோள்காட்ட முடியும்:

"உங்கள் நாட்டில் ஒரு விருந்தினர் உங்களுடன் தங்கியிருக்கும் பொழுது நீங்கள் அவருக்கு தீங்கிழைக்கக்கூடாது." (Leviticus 19:33).

"வெளிநாட்டுக் கொலைகாரர்களுக்கும் கூட தஞ்சம் வழங்குதல், இந்த ஆறு நகரங்களும் இஸ்ரேலைச் சேர்ந்த மக்கள் தஞ்சம் புகும் இடங்களாக இருந்து வரும். அவர்களுக்கு மத்தியில் அன்னியர்களும், வழிப்போக்கர்களும் இருப்பார்கள். எந்தவொரு நோக்கமும் இல்லாமல் யாரேனும் ஆளொருவரை கொலை செய்யும் ஒரு நபரும் இங்கு தப்பிவர முடியும்." (இலக்கங்கள் 35:15).

"உங்கள் அறுவடையில் ஒரு பாகத்தை ஏழைகளுக்குக் கொடுத்தல், நீங்கள் உங்களுடைய பழத் தோட்டத்தை முழுமையாக மொட்டையடித்து விட வேண்டாம். உங்கள் பழத்தோட்டத்தில் விழும் திராட்சைகளை நீங்கள் சேகரிக்கவும் கூடாது. அவற்றை நீங்கள் ஏழைகளுக்கும், வழிப் போக்கர்களுக்கும் விட்டு வைக்க வேண்டும், நான் உங்கள் ஆண்டவரின் தலைவன் ஆவேன்." (Leviticus 19:10)

அரசியல் தஞ்சத்தை வலியுறுத்தும், இப்பொழுது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் இந்த விவிலிய விழுமியங்களின் பயனாளிகளாக பெருந்தொகையான இலங்கையர்கள் - குறிப்பாகத் தமிழர்கள் உள்ளனர். அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கென இலங்கைத் திருச்சபை முன்வந்துள்ளது. இதற்குச் சான்றாக முஸ்லிம்களுக்கு ஆறுதலளிக்கும் விதத்தில் ஆயர் டிலோராஜ் கனகசபை அவர்கள்,

'இந்தச் சோதனை மிக்க காலகட்டத்தில் 'கண்ணுக்குக் கண் அல்லது பல்லுக்குப் பல்' என்ற அடிப்படையில் கிறிஸ்தவ சமூகம் செயற்பட முடியாது செயற்படவும் கூடாது. உயிரை வழங்கும் சர்வ வல்லமை பொருந்திய இறைவனின் பெயரில் பாரிய கொலைகளை நிகழ்த்துவதற்கான உரிமையை ஆட்கள் தமது கைகளில் அபகரித்துக்கொண்டிருப்பது கவலைக்குரிய ஒரு விடயமாகும். உயிர் இறைவனுக்குச் சொந்தமானதாகும். ஒருவரின் உயிரைப் பறிப்பதற்கு இறைவனைத் தவிர வேறு எவருக்கும் உரிமை இல்லை. அதற்குப் பதிலாக, எமது எஜமானரின் முன்மாதிரியை நாங்கள் பின்பற்ற வேண்டும். அதே விதத்தில் நாங்களும் எமது அழுகுரலை எழுப்ப வேண்டும் சிலுவையுடன் இணைந்து கடும் துயரத்துடனும், கனத்த இதயத்துடனும் எமது ஆண்டவர் அழுது இப்படிக் கூறினார்: "பிதாவே, அவர்களை மன்னித்து விடும், தாங்கள் என்ன காரியம் செய்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை." இந்நிலையில் நிறைவேற்றுத் தரப்பும், சட்டவாக்கத் தரப்பும் தமது சொந்த, அற்பத்தனமான நிகழ்ச்சி நிரல்களின் அடிப்படையில் மும்முரமாகச் செயற்பட்டு வந்தன. அதேபோல அவர்களுக்குக் கீழ் இருந்து வரும் தரப்புக்களும் இரு துருவங்களாகப் பிரிந்திருப்பதனையும், இந்தப் பிரிவினையின் காரணமாக செயல்முடங்கிப் போனவர்களாக இருந்து வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. சுமார் நான்கு தசாப்த காலமாக இரத்த ஆறு ஓடிய இந்தத் தீவுத் தேசத்தில் மீண்டும் ஒரு முறை இரத்தம் ஓடுகிறது. மக்களால் தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள் உண்மையிலேயே இந்நாட்டை நேசிப்பவர்களாக இருந்தால் இது நடப்பதற்கு அவர்களால் இடமளித்திருக்க முடியாது. இது ஒட்டுமொத்த தேசத்துக்கும் இழைக்கப்பட்ட ஒரு துரோகமாகும்" எனத் துணிச்சலான அறிக்கை இதனை எடுத்துக் காட்டுகின்றது:

### பாதுகாக்க முடியாத பொலிஸ்

ஒரு சில அகதிகள் அத்துருகிரிய தேசிய கிறிஸ்தவப் பேரவையின் தேவாலயத் தலைவர்களினால் தேவாலயக் கட்டடம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், அன்றைய தினம் இரவு பௌத்த பிக்குகள் ஆவேசமடைந்திருந்த கிராமவாசிகளுடன் அந்த இடத்துக்கு வந்ததாகத் தேவாலய வட்டாரங்கள் என்னிடம் தெரிவிக்கின்றன. அந்த நிலையில், அகதிகளை பொலிஸ் நிலையத்துக்கு திருப்பி அனுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. அத்தகைய அகதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவது பொலிஸாரின் தலையாய கடமையாக இருந்து வந்த போதிலும், தம்மால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியாது எனப் பொலிஸார் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களிடம் சொன்னார்கள் எனத் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் முஸ்லிம்களுக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்கும் என ஜனாதிபதியை உள்ளடக்கிய அரசாங்கத் தரப்பினர் கூறியிருந்த போதிலும், ஒரு சில ஆவேசமடைந்த புத்த பிக்குகள் அகதிகள் மீதான தாக்குதலை முன்னின்று நடத்திய போது, அதனைத் தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.

அவர்கள் முன்வைத்த வாதம் கொழும்பில் தமிழர்களை வைத்திருப்பது ஆபத்தானது என்று 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் முன்வைக்கப்பட்ட வாதத்துக்கு இணையானதாகவே இருந்தது. அப்பொழுது தமிழர்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்தை பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா ஆதரித்துப் பேசியதாக 'டைம்ஸ் ஒப் இந்தியா பத்திரிகை' செய்தி வெளியிட்டிருந்தது, "தலைநகருக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கும், புலிகளின் குண்டுத் தாக்குதல்களிலிருந்து நகரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இந்த நடவடிக்கை அவசியமானது எனக் கூறப்பட்டது. சாதாரண தமிழ் மக்கள் தங்கும் மலிவான விடுதிகளில் அவர்களுக்கு மத்தியில் 'புலிப்பயங்கரவாதிகள்' தங்கியிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது."

இந்த இடத்தில் தமிழர்கள் என்ற வார்த்தைக்குப் பதிலாக "முஸ்லிம்கள்" என்ற வார்த்தையை இட்டு நிரப்பி வாசித்துப் பார்க்கவும். இது அதே இயல்பிலான மேலாதிக்க உணர்வுடன் கூடிய இனச் சுத்திகரிப்பு உத்தியாக இருந்து வருகின்றது. இந்தத் தடவை அரசாங்கத்தினால் முஸ்லிம்கள் அவ்விதம் சுத்திகரிக்கப்படுகின்றனர். இந்த அகதிகளை, அகதிகளாக ஏற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது தொடர்பான ஒரு கடப்பாட்டை ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் தெரிவித்திருந்தது. இடம்பெறப் போகும் பேரழிவு குறித்து இந்தியப் புலனாய்வுத் துறையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அரசாங்கம் செயற்பட மறுத்தமை, எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க மற்றும் ஜே.ஆர். ஜெயவர்தன ஆகியோர் அவர்களுடைய கால கட்டங்களில் கலவரங்கள் மூண்ட பொழுது நடந்து கொண்ட விதத்தை நினைவூட்டுகின்றது. ஜே.ஆர். ஜெயவர்தன "உங்களுக்கு ஒரு போர் வேண்டுமானால் நாங்கள் ஒரு போரை நடத்துவோம். உங்களுக்குச் சமாதானம் வேண்டுமானால் சமாதானத்தை எடுத்து வருவோம். இது நான் கூறுவதல்ல. இலங்கை வாழ் மக்கள் கூறுவதாகும்." என தமிழர்களுக்கு அச்சுறுத்தல் வழங்குவதன் மூலம் இதனை மேலும் தூண்டினார்,


மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவ்விதம் தமிழர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்ததுடன், அந்த வழக்கு வெற்றியீட்டியதனை அடுத்து அந்தத் தீர்மானம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அந்த வழக்கின் போது எம்.ஏ. சுமந்திரன் தமிழர்களின் வெளியேற்றத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் ஆஜராகினார். இன்று இலங்கை மக்கள், மௌனம் காப்பதனூடாக அப்பாவி அகதிகள் மீதான தாக்குதல்களுக்கும், முஸ்லிம்களுக்கும் என்ன செய்தியைச் சொல்கிறார்கள்?

சர்வோதய இயக்கத்தின் திரு. ஏ.ரீ. ஆரியரத்ன ஒரு சில முஸ்லிம் அகதிகளை தமது கட்டடங்களில் தங்கவைப்பதற்கு முயற்சி செய்த பொழுது கிராம மக்கள் ஒரு சில மதக் குழுக்களின் தலைமையில் வந்து வெறியாட்டம் ஆடியதாக தேவாலய வட்டாரங்களிலிருந்து எனக்குத் தெரிய வருகின்றது. அவர்கள் அந்த அகதிகளை பேருந்திலிருந்து கீழே இறங்கக்கூட விடவில்லை. திரு. ஆரியரத்ன போன்ற மனிதர்களும், கிறிஸ்தவ திருச்சபையைச் சேர்ந்தவர்களும், இலங்கையர்களில் இன்னும் ஒரு சிலரே மனிதாபிமானமிக்கவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதனைக் குறைந்தபட்சம் நிரூபித்து வருகின்றார்கள்.

### தமிழர்களின் பச்சாதாபம்

பாரிய அழிவுகள் மற்றும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் என்பவற்றின் விளைவாக ஏற்கனவே துன்பங்களை அனுபவித்திருக்கும் தமிழர்கள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள்? அவர்கள் இப்பொழுது என்ன சொல்கின்றார்கள்? அரசாங்கம் விரும்பினால் இந்த அகதிகளை தமிழ்ப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்க முடியும் என இனவாதத்தைப் பரப்பும் பிக்குகள் கூறியதாக தமிழ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதேவேளையில், ஒரு சில தமிழ்த் தலைவர்கள் இது குறித்து கோபமடைந்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் 2007ஆம் ஆண்டில் நீதிமன்றத்தில் முன்வைத்த வாதங்களின் பிரகாரமும், ஒரு மெதடிஸ்த போதகர் (தீட்சை பெறாத) என்ற முறையிலும் இந்த அகதிகளை வட பிரதேசத்தில் ஏற்றுக்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருக்கும் அதே வேளையில், நாடாமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன் மற்றும் சார்ல்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் அதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். தனது தலைவர் இரா. சம்பந்தன் அவ்வாறு செய்யுமாறு கேட்டுக்கொண்டாலும் கூட, அகதிகள் வட பிரதேசத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டால், தான் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கப் போவதாகக் கூறி, சார்ல்ஸ் நிர்மலநாதன் இதற்குக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

(17ஆம் பக்கம் பார்க்க)



● வேதநாயகம் தபேந்திரன்

# சிக்கனத்தால் உயரும் நாடு

'ஐயா நிற்கிறாரோ?' 'ஓம். உள்ளே வாருங்கள்.' வந்தவர் கதிரையில் அமர்ந்தார். நன்றாகக் கரைந்து அவிந்த சர்க்கரைப் பொங்கல் கொண்டு வந்து வைக்கப்பட்டது. வந்தவருக்குப் பசியில்லை. என்ன செய்வது. வந்த அலுவல் முடிய வேண்டுமே. கையில் எடுத்துச் சாப்பிட்டார். கைகளைக் கழுவவெனச் செம்பும் தண்ணீரும் இருந்தது. செம்பை எடுத்துச் சென்று கைகளைக் கழுவினார். தூரத்தே யாரோ ஒருவர் தன்னைப் பார்ப்பது தெரிந்தது. உள்ளே சென்று அமர்ந்தார்.

ஐயா வந்தார். எவ்வளவு காசு தேவை, எப்போது திருப்பித் தருவீர்களெனக் கேட்டார். காசைக் கொடுத்தார். இன்னொரு நாளில் வேறு ஒருவர் காசு கேட்டு வந்தார். இதே வித உபசரிப்பு. ஆனால் காசு கையிருப்பில் இல்லை. இரண்டு மாதங்கள் கழித்து வாருங்கள் என்று திருப்பி அனுப்பி விட்டார்.

ஐயாவின் சின்ன மகன் கேட்டார் 'ஏன் இன்று இவரைத் திருப்பி அனுப்பினீர்கள்? அன்றைக்கு வந்தவருக்கு ஏன் காசு கொடுத்தீர்கள்?' அதற்கு அவர் 'அன்று வந்தவர் சாப்பிட்ட பின்பு கை கழுவிய போது கவனித்தேன். அளவாகத் தண்ணீரை ஊற்றிக் கழுவினார். அவர் சிக்கனவாதி. அவரிடம் காசு கொடுத்தால் உழைத்துக் கடனைத் திருப்பித் தருவார். அதனால் காசை வட்டிக்குக் கொடுத்தேன். இன்று வந்தவர் முழுச் செம்புத் தண்ணீரையும் ஊற்றிக் கழுவினார். இவர் ஊதாரி. இவரிடம் கடனை அறவிடுவதில் தேவையற்ற பிரச்சினைகள் வரும். அதனால் காசு இல்லை என்றேன். ஒருவர் தண்ணீரைப் பாவிப்பதிலிருந்து அவரது சிக்கனத்தை அளவிடலாம் என்றார்.

சிக்கனம் தனிமனிதர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு மட்டுமல்ல நாடுகளின் அபிவிருத்திக்கும் முக்கியமானது. இன்றைய உலகில் சீனாவைப் பாருங்கள். உலகின் பொருளாதார வல்லரசாக உருவெடுத்து வருகின்றது. சீனாவின் பொருளாதார வளர்ச்சியின் ரகசியமே சிக்கனம்தான். சீனர்கள் வளம் குறைந்த தமது நாட்டை இடைவிடாத கடின உழைப்பு மூலமாக முன்னேற்றியுள்ளார்கள்.

ஜப்பானுக்கு உயர்பட்டப்படிப்புக்குச் சென்ற ஒரு நண்பர் தனது பிறந்த நாளன்று தன்னுடன் படிக்கும் ஜப்பானிய நண்பருக்கு டின்னர்(இரவு விருந்து) கொடுக்க ரெஸ்ரோரண்ட் (உணவகம்) ஒன்றுக்கு அழைத்தார். இரவு உணவு அருந்தி முடிந்த பின்பு எஞ்சிய உணவுகளைத் தன்னுடன் தயாராக எடுத்து வந்த சிறிய சொப்பிங் பைகளில் பார்சல் செய்யத் தொடங்கினார் அந்த ஜப்பானிய நண்பர். இலங்கையிலிருந்து சென்ற எனது நண்பருக்கோ தலையைச் சுற்றியது.

> சிக்கனப் பழக்க வழக்கத்தைக் கடைப்பிடித்தால் ஏளனம் செய்தே சாகடித்து விடுவார்கள். சீட்டுப் பொருளாதார முறையில் முன்னேறிய சமூகம் எமது சமூகம். அடுப்பில் உலைபோட முன்பாக ஒரு பிடி அரிசி எடுத்து அதை ஒரு பானைக்குள் சேமித்து வைத்த ஒரு மக்கள் கூட்டம் முன்பு இருந்தது. எதையுமே வீணாக்காமல் சேமிக்கத் தெரிந்தவர்களால் அச் சமூகம் நிறைந்திருந்தது. தங்க நகை மீதான சேமிப்புப் பழக்கம் போரின் போதான இடப்பெயர்வின் போது பலரைப் பசி பட்டினியிலிருந்து காத்தது. புலம்பெயர்வுக்குரிய நிதி ஆதாரத்தைத் தந்தது.

'மிஞ்சிய சாப்பாட்டை எடுத்து வைத்து திரும்பவும் சாப்பிடுவது தங்களுக்குச் சாதாரண ஒரு பழக்கம். மிஞ்சிய எதையும் நாம் வீணாக்குவதில்லை. இயற்கை வளங்கள் குறைந்த எமது நாட்டில் இத்தகைய பழக்கத்தை எமது முன்னோர்கள் எமக்குப் பழக்கியதால் தான் எம்மால் முன்னேற முடிந்தது' என்றார்.

எமது நாட்டில் இத்தகைய சிக்கனப் பழக்க வழக்கத்தைக் கடைப்பிடித்தால் ஏளனம் செய்தே சாகடித்து விடுவார்கள். சீட்டுப் பொருளாதார முறையில் முன்னேறிய சமூகம் எமது சமூகம். அடுப்பில் உலைபோட முன்பாக ஒரு பிடி அரிசி எடுத்து அதை ஒரு பானைக்குள் சேமித்து வைத்த ஒரு மக்கள் கூட்டம் முன்பு இருந்தது. எதையுமே வீணாக்காமல் சேமிக்கத் தெரிந்தவர்களால் அச் சமூகம் நிறைந்திருந்தது. தங்க நகை மீதான சேமிப்புப் பழக்கம் போரின் போதான இடப்பெயர்வின் போது பலரைப் பசி பட்டினியிலிருந்து காத்தது. புலம்பெயர்வுக்குரிய நிதி ஆதாரத்தைத் தந்தது.

இன்று தண்ணீருக்கான யுத்தம் தொடங்கும் காலம் ஒன்றை நெருங்கிக் கொண்டிருக்கின்றோம். முன்னர் ஊரில் நாலைந்து பொதுக் கிணறு இருக்கும். ஒவ்வொரு கிணற்றிலும் தண்ணீர் அள்ளி 20 முதல் 25 குடும்பங்கள் வரை சீவித்தார்கள். தண்ணீரை அருமருந்தாகப் பாவித்தார்கள். ஒரு கிணற்றை நம்பி 150 பேர் வரையில் வாழ்ந்தார்கள். கிணற்றடியில் சொந்தம் கொண்டாடினார்கள். சினேகிதங்கள் எல்லாம் மலர்ந்தது. அது மட்டுமல்ல காதலும் மலர்ந்தது. கல்யாணத்திலும் முடிந்தது. இன்று வீட்டுக்கு வீடு கிணறு. வரையறையில்லாமல் இறைக்க மின்சார மோட்டார். தண்ணீரை அருமருந்தாகப் பாவித்த சமூகம் அதனை ஊதாரிப் பொருளாக்கியது. தண்ணீரின் சிக்கனம் அற்றுப் போனது. நிலத்தடி நீர் வற்றிப் போகிறது. அற்றுப் போகிறது. விளைவு, தண்ணீருக்கான போராட்டம் தொடங்கி விட்டது. கட்டணம் ஏதுமின்றி இயற்கை அன்னை தந்த தண்ணீரை சிக்கனம் பேணாமல் நாம் விரயமாக்கி வருகின்றோம். ஒரு துளி நீரின் பெறுமதி தெரிய வேண்டுமென்றால் இஸ்ரேலிய யூதர்களிடம் போய்ப் பாருங்கள்.

இலவசங்களால் நாசமாகிய நாடு எதுவென்று கேட்டால் உதாரணத்துக்கு எமது நாட்டைத் தான் கூறலாம். கல்வி, மருத்துவம் உட்பட பல இலவசங்கள் உண்டு. முன்னர் மீனவக் குப்பமாக இருந்த சிங்கப்பூர் குடி தண்ணீருக்கும் மலேசியாவை எதிர்பார்த்திருந்த நாடு. ஆனால் இன்று மிகப் பெரும் பணக்கார நாடு. லீ குவான் ஜீ சிங்கப்பூரின் பிரதமரான போது செய்த முதல் வேலை இலவசங்கள் யாவற்றையும் நிறுத்தியது தான். மூலதனத் திரட்சி தான் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை என்கிறது பொருளியல். லீ குவான் ஜீ இலவசங்களை நிறுத்தி அந்த நிதியைக் கொண்டு துறைமுகங்களை, விமான நிலையங்களைக் கட்டினார். தரம் வாய்ந்த பெருந்தெருக்களை அமைத்தார். உற்பத்தித் திறன்மிக்க மக்கள் கூட்டத்தை உருவாக்கினார். இலவசங்களாகப் போய் மக்களைச் சோம்பேறிகளாக மாற்றிய பணம் சிக்கனப்படுத்தப்பட்டது. அந்தச் சிக்கனம் மூலதனமாக மாறியது. நாட்டைப் பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச் சென்றது.

'கடன்பட்டார் நெஞ்சம் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்றார் கம்பன். கடன் இல்லாமல் வாழும் ஒருவர் முன்னேற முடியுமா? இல்லை. அரசாங்கங்கள் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கின்றன. மொத்த வருமானத்தை விடச் செலவுகள் கூடுதலாகவுள்ள பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைத் தான் தயாரிக்கின்றன. வருமானத்தை விட செலவு குறைந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தால் என்ன என நீங்கள் நினைக்கலாம். அப்படியல்ல. வருமானத்தை விடச் செலவுகள் உயர்வாக இருந்தால்த்தான் பற்றாக்குறைக்கு வருமானத்தைக் கண்டுபிடிக்க வழி உண்டாகும். அதன் மூலமாக பொருளாதார வளர்ச்சி ஏற்படும். இது போலத்தான் மனித வாழ்க்கையும். ஒருவர் தான் உழைத்துக் கடனை மீளளிக்கக் கூடியதான கடனை வைத்திருந்தாரானால்த்தான் அவரால் முன்னேற முடியும். முழுக் காசையும் வைத்திருந்து ஒருவர் வீடு கட்டுவதில்லை. கடனும் பட்டுத்தான் வீட்டைக் கட்டுவார். கடன் அவரது வாழ்வை முடிக்கக் கூடியதாகவோ அல்லது தலைநிமிர முடியாததாகவோ இருக்கக் கூடாது. திருப்பிச் செலுத்தக் கூடிய இயலளவு உள்ள கடன் இன்னொரு வகையில் கூறப்போனால் அவரது உழைப்பின் மீதான சேமிப்பாக இருக்க வேண்டும். சேமிப்பு என்பது சிக்கனம் தான்.

ஏனையவர்களை விட அரசாங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் பலவித கடன்களைப் பெறக் கூடிய வசதி இருப்பதுதான். அக் கடன்கள் அவர்களது வீடு, வாகன வசதிகளை வழங்கும். வீடுகளில் உள்ள சிறுதுண்டு நிலத்தையும் பயன்படுத்தப் பழகினோமானால் பலவித சிக்கனங்களை நாம் ஏற்படுத்தலாம். சமையலுக்கு வாங்கும் 10 கிலோ அரிசிப் பைகளில் மண்ணையிட்டு மரக்கறிகளை நடலாம். ஆடு ஒன்றை வளர்த்தால் கஞ்சி, தேங்காய்ப் பூ, மிஞ்சும் மரக்கறிக் கழிவுகளை, வளவின் இலைகுழைகளைத் தீவனமாகக் கொடுக்கலாம். கிடாய் ஆடு வளர்த்து வருக்ஷம், தீபாவளிக்குப் புது உடுப்புகள் அல்லது புதுச்சைக்கிள் வாங்கிய தலைமுறை இருந்தது.

ஜப்பானியர்களும், சீனர்களும் சிக்கனத்தால் பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கின்றனர். இலங்கையர்களான நாமோ ஆடம்பரங்களின் மோகத்தின் வசப்பட்டு சிக்கனமின்றி நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல முடியாமல் உள்ளோம். சிக்கனம், சேமிப்பு என்பவற்றைப் பற்றி பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுதல் வேண்டும். நாட்டு மக்களுக்கும் அதன் அவசியத்தினை புரிந்து கொள்ளக்கூடிய வேலைத் திட்டங்களே அவசியம். ■

# ஈரநிலம்

நிலம் 18

● ஆத்மீ



அமைதியாய் சோர்ந்து கிடந்த நட்சத்திரனின் உடலில் அசைவுகள் தெரிந்தன. அவனது இதயத் துடிப்பு இயங்குவதும் தெரிய, தீரன் அருகில் வந்து நின்று கொண்டான். பதைபதைக்கும் உள்ளத்தை கொஞ்சம் அமைதியாய் இருக்கும்படி கடிந்து கொண்டான். ஆர்வம் தாளவில்லை. தன் நண்பன் உயிர் பிழைத்துக்கொண்டான் என்பதை உள்ளூர மனம் கொண்டாட ஆரம்பித்து விட்டது. எத்தனை வலிகளோடு இந்த ஓரிரு நாட்களும் வாழ்ந்திருப்பான் என்று இவனுக்குப் புரிந்தது.

காயப்பட்டு விழுப்புண் அடைந்து விட்டால், அதை விட ஒரு கொடுமை வேறேதும் இருக்க முடியாது. அது அனுபவப்பட்டவர்களுக்குத்தான் தெரியும். அந்தளவுக்கு வலியும், மனதளவில் வேதனையும் ஏறிப்போயிருக்கும். இப்பொழுது போர் தொடங்கியதிலிருந்து, விழுப்புண் அடையும் போராளிகளின் தொகை அதிகரித்திருந்திருந்தது.

இழப்புக்கள் காயங்களாகவும் வீரச்சாவுகளாகவும் அதிகரித்து விட்டன. பல இடங்கள் கைவிடப்பட்டன. பல பிரதேசங்களும், மக்களது வாழ்விடங்களும் கைவிடப்பட்டு வந்தன. ஒன்றும் செய்ய முடியாத நிலை.

மேலிடங்களும் முடிந்தளவுக்கு எல்லா இடங்களிலும் இருந்த போராளிகளை வைத்து தாக்குப்பிடிக்கப் பணித்தார்கள்.

ஆனாலும், எதிர்பாரா விதமாய் எல்லா இடங்களிலும் அளவுக்கு மீறிய தாக்குதல்களும், ஷெல்களும் அடித்தே கைப்பற்றி வந்தார்கள்.

களமுனைகளில் முன்னரங்குகளில் பொஸ்பரஸ் வகையறா குண்டுகள் வீசப்பட்டன. பல்குழல் எறிகணைகள் அச்சொட்டாகக் களத்திலேயே அடைக்கப்பட்டன. அதுவே மிகப்பெரிய இழப்புக்களை எம்மவர்களுக்குக் கொடுத்துவிட்டன. அதுவே இன்னுமின்னும் மனதளவில் தளர்ச்சியைக் கொடுத்து விட்டது.

என்ன செய்ய? எல்லாமே கைவிட்டுப் போய்விட்டதால், காலமும் சதி செய்யத்தொடங்கி விட்டது. இருண்ட யுகமாய் வன்னி மாறிப்போனது. இயற்கையும் செழிப்பும் வனப்புமாய் நிறைந்து கிடந்த தாய்நிலம், சோபையிழந்து, வளமிழந்து, எல்லாமே பறிபோன நிலமாய் வெறுமை சுமந்து கிடந்தது. அதுவும் மாற்றான் கையில் அகப்பட்டு விட்டது. மீட்க முடியாமலும், விட முடியாமலும் நம்மவர்கள் திண்டாடிக்கொண்டிருக்கக் காலமும் ஓடிக்கொண்டேயிருந்தது.

நட்சா... என்ன செய்யுது? கண்ணைத் திறந்து பாருடா... டேய்..' மெதுவாய் அவன் கைகளைப் பற்றினான் தீரன். குளிர்ந்து வறண்டிருந்த கரங்களுக்குள் இரத்தமேயில்லாமல் மரத்திருந்தது. இவன் கை வைத்ததும், அவனது உடம்பு மெதுவாய் அசைந்தது. இன்னும் கொஞ்சமாய் கைகளும் அசைய, கண்கள் மெல்லத் தடுமாறி விழித்தான்.

'தீரா........' கண்விழித்து அவனது பற்றிய கரங்களை இன்னும் இறுக்கமாய் பற்றிக்கொண்டான் நட்சத்திரன். அந்தப் பற்றுதலில் ஈரமும் அன்பும் நிறையவே ஒட்டிக்கிடந்தது. இன்னும் ஆசையாய் அவனைத் தன்னோடு குனிந்து அணைத்து உச்சிமுகர்ந்தான் தீரன்.

ஒருவாறு தன் பிரார்த்தனை நிறைவேறிவிட்டது என்பதை உள்ளூர எண்ணிக்கொண்டவன், இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொண்டான்.

(நனையும்..)

# உங்கட சமயத்தில சொல்லி இருக்கிறதெண்டதால எல்லாம் சரியோ எண்டு கேக்கிறன்?



அமீர் அலி நாநா சொல்லுறதைக் கேக்கப் பெரிய துன்பமாப் போச்சுது. அந்தாள் அழுது அழுது சொல்லியிருக்கிறார். இலங்கையிலுள்ள ஊடகமார்களே தயவு செய்து எங்கட சமூகத்தை இழிவுபடுத்திற செய்தியளை எழுதாதையுங்கோ. சிறுபான்மை இனத்தைக் கொச்சைப்படுத்திறதாக ஒரு கருத்தையும் சொல்லாதையுங்கோ எண்டு, அழுவார் ஒண்டா சொல்லேக்க கேக்கக் கஸ்டமாத்தானிருந்துது.

ஆனால் அவர் சொன்னதை பேப்பரில பாத்திட்டு முதலி சிறுபிள்ளைத்தனமா 'அப்ப சிறுபான்மை இனம் எண்டதுக்காக அவை நீதி ஞாயம் இல்லாமல் நடக்கலாமோ? அதை மற்றவ பாத்துக் கொண்டு இருக்க வேணுமோ? அவேன்ர சமயத்தில சொல்லி இருக்கெண்டு சொல்லித்தானே உந்த அநியாயத்தைச் செய்தவ. ஆனால் வேற முஸ்லிம் ஆக்கள் அப்பிடி ஒண்டும் அங்க இல்லையெண்டும் பேப்பரில எழுதி இருக்கினம்' எண்டு கேக்கிறான். உதுக்கு நான் என்ன பதிலைச் சொல்லலாம் எண்டு நினைக்கிறியள்?

அதோட தமிழ், சிங்கள ஊடகங்களோ இல்லாட்டி வேற எந்த ஊடகங்களோ தர்மத்தோட பேசத் தவறினால் நிச்சயமா ஒரு சமூகம் முற்று முழுதா வெறுத்து ஒதுக்கிற ஊடகமா அது மாறிப்போகும் எண்டு அமீர் அலி நாநா ஒரு வெருட்டலையும் போட்டிருக்கிறார்.

ஒரு கத்தியைக் கண்டால் இல்லாட்டி பள்ளிவாசலில கத்தியைக் கண்டெடுத்தால் அதைப் பெருசா எழுதிப் பூதாகரமாக்கி செய்தியாப் போடுறியள். வீட்டுச் சமையலறையில பாண் வெட்டுற கத்தியைக்கூட வைச்சிருக்கேலாம பயத்தில அதை எடுத்துக் கொண்டு போய் வீதியில இல்லாட்டி ஆத்தில இல்லாட்டி கிணத்துக்க போடுறமாதிரியான சூழ்நிலை இப்ப வந்திருக்கு. ஏன் இப்பிடி நடக்குது? ஊடகங்களாலதான் இந்தக் கேவலமாக்கிடக்கு எண்டு அமீர் அலி நாநா சொன்னதாச் செய்தி இருக்கு.

கத்தியள் பிடிபட்டதைக் கத்தி பிடிபட்டது எண்டு ஒருமையா எழுதிறதாலதான் இந்த வில்லங்கமோ தெரியாது? சரி பள்ளிவாசலில தேங்காயும் உடைச்சு அரிச்சனை செய்யிறேல்ல. மானம்பூக்கு வாளையும் வெட்டுறேல்ல. பேந்து ஏன் பள்ளிவாசலில கத்தியும் வாளும் வைச்சிருப்பான்? அப்பிடி புல்லுபத்தை வெட்டுறதுக்கு வைச்சிருந்தாலும் ஏன் கத்தியளைக் கட்டுக்கட்டா வைச்சிருக்கிறியள்? அதுவும் உள்ளூரில செய்யாமல் இம்போட் பண்ணி ஒரே மாதிரியான கத்தியள எல்லாப் பள்ளிவாசலிலையும் வைச்சிருக்கிறியள்? அதுவும் அப்பிடியான நீட்டு வாளை ஏன் வீடுவளிய வைச்சிருக்கிறியள்? அது பாண் வெட்டுற கத்தி எண்டு சொல்லுறியள். பாண் வெட்டுறதுக்கு உப்பிடி சைனாவில செய்த நீட்டுக் கத்தியை அதுவும் சினிமாவில வாற மாதிரி ஆக்களை வெட்டுற கத்தியால பாண் வெட்டுறதெண்டு ஒரு நாளும் நான் கேள்விப் படேல்ல. அதோட வீட்ட செக்கிங்குக்கு வாற பொலிஸ்க்கும், ஆமிக்கும் பாண் வெட்டுற கத்தி எது எண்டும் ஆளை வெட்டுற கத்தி எது எண்டும் வடிவாத்தெரியும். ஏனெண்டால் அவைதான் எங்களிலும்விடக் கூடப் பாண் தின்னிறவை.

ஊடகங்கள் தங்கட வேலையைச் சரியாச் செய்தபடியாலதான் கன விசயம் வெளியால வந்திருக்கு. பள்ளிவாசலுக்க வெடிகுண்டு இருந்ததையும் கத்தியள் பொல்லுகள் வாளுகள் எண்டு பெருந்தொகையா இருந்ததையும் அதிரடிப்படை கண்டுபிடிச்சதெண்டதையும் ஊடகங்கள் எழுதினதாலதான் சனம் முழிச்சது. இல்லாட்டி கொழும்புக்கு வெளியால கன இடங்களிலையும் குண்டு வெடிச்சிருக்குமெண்டு ஆக்கள் கதைச்சவ. அதோட திகதி முடிஞ்ச தேயிலை, சாப்பாட்டுச் சாமான்கள் எண்டு பள்ளியை வைச்சுக் கொண்டு பல விளையாட்டும் நடந்திருக்கு எண்டு ஊடகங்கள் எழுதினதாலதான் சனம் எல்லாத்தையும் அறிஞ்சு கவனமா இருந்திச்சு.


சண்டை நடந்த காலத்தில ஊடகங்கள் தமிழ் சனம் எல்லாத்தையும் பெரிசு சின்னன் குஞ்சு குருமன் எண்டு பாராமல் புலியள் எண்டுதானே எல்லாரையும் எழுதினவ. அப்பவும் அமீர் அலி நாநா இலங்கையிலைதானே இருந்தவர். அப்பவும் உதைச் சொல்லி இருக்கலாம் தானே. சுளகு தனக்குத் தான் எண்டால் படக்குப் படக்கு எண்டு அடிக்குமாம். அப்ப ஆமி பொதுசனத்தை சுட்டுப்போட்டதையும் பயங்கரவாதியளைச் சுட்டது எண்டுதான் ஊடகங்கள் எழுதினவை. அப்ப நீங்கள் ஒண்டும் பேசாமல் இருந்தனியள். என்ன?

அமீர் அலி நாநா சொன்ன மாதிரி சிறுபான்மைதானே எண்டு சொல்லிக் கொண்டு ஊடகங்கள் உதுகளை எழுதாமல் விட்டிருந்தால் பெரிய துரோகமெல்லோ நாட்டுக்குச் செய்திருப்பினம். ஊடகங்கள் எழுதினபடியாலதானே எங்களுக்குப் பள்ளீக்க கத்தி கிடந்து பிடிபட்டதெண்டு தெரிஞ்சது. ஊடகங்கள் கத்திகள் பிடிபட்டது எண்டு எழுதேக்கதானே நீங்கள் பள்ளீக்க வைச்சுக் கத்தி வியாபாரம் செய்திருக்கிறியள் எண்ட கதையும் வெளியில வந்தது. பள்ளியைத் தொழுகைக்கு மட்டும் பாவிச்சிருந்தால் உந்தக் கதை எழுதினதைப் பிழை எண்டு சொல்லுவம். ஆனால் பள்ளீக்க வெடிபொருள் கிடந்திருக்கு. குண்டுகள் செய்யிற சாமான் சக்கட்டுகள் கிடந்திருக்கு. வாள் கத்தியள் கிடந்திருக்கு. நாள் போன சாப்பாட்டுச் சாமான்களும் கிடந்து பீ.எச்.ஐ பிடிச்சும் இருக்கினம். அப்ப நீங்கள் பள்ளியை ஒரு புனித இடமாப் பாக்கேல்ல.

சமூகத்தில விரல் விட்டு எண்ணுமளவிலுள்ள ஒரு சிலர் செய்த இந்தச் செயலுக்காக ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் பழியைச் சுமத்திச் சங்கடத்துக்குள்ளாக்க வேண்டாம் எண்ட செய்தியைப் பெரும்பான்மைச் சமூகத்தினரிடம் நாங்கள் சொல்ல வேண்டும் எண்டு அமீர் அலி நாநா தன்ரை ஞாயத்தைச் சொல்லிப்போட்டார்.

ஆனால் தன்ர கண்ணுக்கு முன்னால வெடிச்சுச் செத்ததைப் பாத்து விசர் பிடிச்சுப்போய் இருக்கிற ஆக்களுக்கு அமீர் அலி நாநா என்ன சொல்லப்போறார். சும்மா வீட்டில இருந்த சனம் சாகேல்ல. தங்களுக்கு ஒரு முக்கியமான சிறப்பான நாளெண்டு உடுத்துப் படுத்துச் சந்தோசமாப் போய் தேவாலயங்களில கும்பிட்டுக் கொண்டிருந்த சனத்தைச் சாக்காட்டி இருக்கிறியள். நூறு நூற்றம்பது வருசம் பழசான அவையின்ர மதிப்புக்குரிய மரியாதையான தேவாலயங்களைக் குண்டு வைச்சுத் தகர்த்தெறிஞ்சிருக்கிறியள். இப்பிடி நடக்கப் போகுதெண்டு தெரியாமல் நடந்திருந்தால் பறவாயில்லை. உங்களில முக்கியமான ஆக்களுக்குத் தெரிஞ்சுதான் நடந்திருக்கெண்டதும் கதைபடுது. உங்கட சமயத்தில சொல்லி இருக்கிறதெண்டதால எல்லாம் சரியோ எண்டு கேக்கிறன்?

– வில்லங்கம் விநாசி



# என்று மாறா சிங்கள

● அவதானி

சர்வதேசத்தின் முகத்தில் அறைந்தாற் போன்ற நிகழ்வு முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்துள்ளது. அங்கு சில வினாக்கள் சர்வதேசத்தின்முன் எழுப்பப்பட்டுள்ளன. அங்கு நடந்த நிகழ்வில் பொதுச்சுடரை பத்து வயதுச் சிறுமி ஏற்றினார். அவரது பெயர் ராகினி. படையினரின் தாக்குதலில் அவரது ஒரு கையை இழந்திருந்தார். அத்தாக்குதலில் அவரது அன்னை உயிரிழந்து விட்டார். அது தெரியாமல் (தெரிந்துகொள்ளும் வயது அல்லவே) தன் பசியாற தாயிடம் பால் குடித்துக்கொண்டிருந்தார். அதே குழந்தை ஒரு தசாப்தத்தின் பின் இந்து மற்றும் கிறிஸ்தவ மத குருமாரின் உதவியுடன் தனது ஒற்றைக் கையால் சுடரேற்றிய காட்சி சகலரையும் உருக்கியது. இவ்வளவு காலத்தின் பின்னரும் சர்வதேசம் இவ்வாறான இனப்படுகொலைகள் பற்றிய விடயத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்காதது ஏன் என்பது முதலாவது வினா. இவ்வாறான சம்பவங்களை பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம்என்றாநியாயப்படுத்தப்போகிறீர்கள் என்பது அடுத்த வினா. மேலும் இவ்வாறான சம்பவங்கள் எவையும் சிங்கள மக்களின் மனதில் ஏன் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்ற வினாவும், இதனுடன் சேர்ந்தே எழுந்துள்ளது.

***

1972 ஜூன் 9ஆம் நாள் வியட்னாமில் அமெரிக்கப் படைகள் மேற்கொண்ட ஒரு தாக்குதலின் விளைவு அமெரிக்க மக்கள் மனதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. வியட்னாமில் நிலைகொண்டிருந்த படைகள் பெற்றோலிய இரசாயணம் கலந்த நேபாம் குண்டுகளை வீசினர். தாரான் பாங்க் என்னும் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் இதில் பாதிப்புற்றனர். ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு, ஒரு மூதாட்டி ஓடி வந்தார். அது இறந்து விட்டதை அறிந்ததும், அலறிக்கொண்டிருந்தார். செய்தி நிறுவனங்களைச்சோந்த புகைப்படக்காரர்கள் இக்காட்சியை படம்பிடித்துக்கொண்டிருந்தனர். அச்சமயம், 19 வயதேயான நிக்வூட் (Nick ut) என்பவரின் கவனம் வேறு பக்கம் திரும்பியது. சுடுது சுடுது என்று அலறிய வண்ணம் ஒரு சிறுமி ஓடி வந்துகொண்டிருந்தார். குண்டின் இரசாயனங்கள் அவரது ஆடையில் பட்டதால் தோளுக்குக் கீழே உள்ள பகுதிகள் எரிந்தன. 8 வயதான அந்தச் சிறுமியின் பெயர் பான் தி கிம்ஃ ப்யூக் (Phan thi kim phuc) இச்சிறுமியுடன் அவரது உறவுகளான சிறுவர்களும் ஓடி வந்தனர். நிக் வூட் தனது காரில் இச்சிறுமியை ஏற்றிக்கொண்டு போய், முதலுதவி சிகிச்சை அளித்து காப்பாற்றினார். முன்னதாக ஆடைகள் எரியும்போது, அவற்றை கழற்றி எறிந்துவிட்டு சிறுமி ஓடி வந்த கோலத்தை நிக் வூட் படம் பிடித்திருந்தார். தனது நிறுவனமான அஸோசியேற்றற் பிரஸிடம் இதனைக் கையளித்து பிரசுரிக்குமாறு கோரினார். ஆனால், சிறுமி நிர்வாணமாக இருப்பதால் அதனைப் பிரசுரிக்க முடியாது என அந்நிறுவனம் மறுத்து விட்டது. ஆனால், நிக்வூட்டின் மனச்சாட்சி அவரை சும்மா இருக்க அனுமதிக்கவில்லை. அநீதிகளுக்கு எதிராகப் போராடும் வயதல்லவா அது? இறுதியில் நியூயோர்க் ரைம்ஸ் முதல் பக்கத்தில் இப்படத்தை பிரசுரித்தது. அதைப் பார்த்ததும் அதிர்ந்து போயினர் அமெரிக்க மக்கள். தமது பிள்ளைகள்/ படையினர் இவ்வளவு மோசமாக நடந்து கொள்கின்றனரா என எண்ணினர். உலகில் போருக்கு எதிரான புகைப்படம் என அடையாளப்படுத்தப்பட்ட இப்படம் மிகப் பிரபலமாயிற்று. 1973 இல் நோபல் பரிசுக்கு நிகரான புலிட்சர் விருது நிக் வூட்டுக்கு கிடைத்தது. சொந்த மக்களின் எதிர்ப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 1973 மார்ச் 23 இல் வியட்னாமை விட்டு அமெரிக்கப் படைகள் வெளியேறின. அப்போது பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது கனடாவில் வசித்து வருகிறார். 2015 இல்இவர்யுனெஸ்கோவின்நலலெண்ணத் தூதுவராக நியமிக்கப்பட்டார்.

***

ஸ்ரீலங்காவில் என்ன நடக்கிறது 1985 மே 15ஆம் நாள் குமுதினிப் படகில் பயணம் செய்யும் போது கடற்படையினரால் கொல்லப்பட்ட குழந்தையின் மரணம்கூட சிங்களவர்களிடம் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. தாங்கள் மேலானவர்கள் என்ற எண்ணம் சிங்களவர்களிடம் எப்போதும் உண்டு. சேபால எக்கநாயக்கா என்பவர் இத்தாலிய விமானம் ஒன்றைக் கடத்தினார். தனது உடலில் உடலில் வெடி குண்டுகள் பொருத்தியிருப்பதாக நாடகம் ஆடினார். தன்னை விட்டுப் பிரிந்துபோன இத்தாலிய பெண்ணான மனைவியையும் தனது மகனையும் தன்னிடம் சேர்க்க வேண்டும்; குறிப்பிட்ட தொகைப் பணம் (அமெரிக்க டொலர்) வழங்க வேண்டும் என்ற நிபந்தனைகளை அவர் முன் வைத்தார். அவரது நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் என உறுதி வழங்கப்பட்டது. பயணிகளின் உயிருடன் விளையாடிய சேபால எக்கநாயக்காவை 'ஜெயவேவா' கோஷத்துடன் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர் சிங்கள மக்கள். பயண நாடகம் முடிந்ததும் சேபாலவின் மகனுடன் மனைவி இத்தாலிக்குப் பயணமாகி விட்டார். பயணிகளின் உயிரைப் பாதுகாக்கத்தானே ஸ்ரீலங்காவுக்கு வந்தார் அவர். சில நாட்கள் செல்லத்தான் பெருந்தொகைப் பணம் வைத்திருப்பதால் தனக்கு பொலிஸ் பாதுகாப்பு வேண்டும் என சேபால கேட்டார். அவரது கோரிக்கை ஏற்கப்பட்டது. இதனையடுத்து சர்வதேச விமானிகள் தமது கடும் கண்டனத்தை அரசுக்குத் தெரிவித்தனர். இதனால், தனக்கு விருப்பம் இல்லாத போதும், சேபாலவை சிறைக்குள் தள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது அரசுக்கு.

இந்த சேபாலதான் 1983 வெலிக்டை கலவரங்களின் சூத்திரதாரிகளில் ஒருவர். அங்கிருந்து தமிழ்க் கைதிகளை கொன்று குவித்தது மட்டுமல்ல இன்னொரு குரூரபக்கமும் அவருக்கு உண்டு. குட்டிமணியின் கண்களைத் தோண்டி 'இந்தக் கண்களால் தானே தமிழீழத்தை பார்க்க வேண்டும் என்றாய்! பார்!' என கண்களை மண்ணில் புரட்டினார். தனக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படும் போது, எனது கண்ணை பார்வையில்லாத தமிழ் மகனுக்கு வழங்குங்கள் அதன் மூலம் மலரவிருக்கும் தமிழீழத்தை என் கண்களால் காண்பேன்' என குட்டிமணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். அதற்காகவே இந்த குரூரமான தண்டனை.

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்புக்கான பொறுப்பான அதிகாரி பிரிகேடியர் பிரியந்த 'கழுத்தை அறுப்பேன்' என தமிழருக்கு சைகை காட்டினார். அவர் நாட்டுக்கு திரும்பும் போது அவரின் துணிச்சலை பாராட்டி விமானப் பணிப் பெண்கள் உட்பட பலரும் அவருடன் புகைப்படம் எடுப்பதில் காட்டிய ஆர்வம் அவர்களின் மன நிலையை வெளிப்படுத்தியது.

***

இன்று நேற்றல்ல காலங்காலமாகவே சிங்களம் இவ்வாறு நடந்து வருகிறது. 1958 கலவரத்தில் பெருந்தொகையான தமிழர் கொல்லப்பட்டனர். அரச படைகளின் ஆதரவுடனேயே இவை நடந்தேறின. இக்கலவரம் முடிந்த சில நாட்களில் நேபாள நாட்டின் மன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். இவர் ஒரு நாள் பொழுது போக்குக்காக கையில் வேட்டைத் துப்பாக்கியுடன் காட்டுக்குச்சென்றார். அங்கே ஒரு மானைக் கண்டதும் உடனே துப்பாக்கியால் சுட்டார். மான் இறந்து விட்டது. அவர் தனது நாட்டில் நினைத்ததைச் செய்ய முடியாது. அவரை யாரும் கேள்வி கேட்க முடியாது. வேண்டுமென்றால் அவரது குறி சுடும் ஆற்றலைப் பற்றி கவிதை பாடி விட்டு பரிசில் பெற்றுச் செல்லலாம். இது இன்னொரு நாடு அல்லவா? இங்கே மானை சுடுவது குற்றம். மன்னனின் செய்கை குறித்து கண்டனங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் களைகட்டின. சிரித்திரன் சுந்தர் இது குறித்து சுதந்திரனின் ஒரு கேலிச் சித்திரத்தை வரைந்திருந்தார். ஒரு பக்கம்






# ழும் ாத ம்!!

தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருந்தனர். மறுபக்கம் ஒரு மான் உயிரிழந்து கிடக்கிறது. அதனைச் சூழ பிக்குமார் ஒப்பாரி வைத்து அழுதுகொண்டிருக்கின்றனர். 'மானாய் பிறந்திலனே மாநிலத்தே' என இக் கேலிசித்திரத்துக்கு தலைப்பிட்டிருந்தார் சுந்தர். பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் இறப்பின் பின் ஒரு ஜனாதிபதி நாயைக் கொல்வது பாவம் என தெரிவித்தார். சிரித்திரன் சுந்தர் உயிருடன் இருந்திருந்தால் யார் மூலமாவது படம் கீறி 'நாயாய் பிறந்திலனே நானிலத்தே' என்று தலைப்பிட்டு சிரித்திரனில் பிரசுரித்திருப்பார். (1990 இன் பின் அவர் பாரிசவாத நோயினால்பாதிக்கப்பட்டிருந்தார்)

***

இடதுசாரிகளாக தம்மை இனங்காட்டிக்கொண்ட சிங்களவரும் இறுதியில் தம் சுயரூபத்தை வெளிப்படுத்தினர். சிங்களத்தில் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட போது, 'ஒரு மொழியெனில் இரு நாடு; இரு மொழியெனில் ஒரு நாடு' என நாடாளுமன்றில் முழங்கினார் கொல்வின் ஆர்.டி.சில்வா. பின்னர் இவரே தமிழரை இரண்டாம் தரப் பிரஜைகள் ஆக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தை 1972 இல் உருவாக்கினார். இது குறித்து வடக்கில் இருந்து சென்ற வைத்திலிங்கம் குழுவினரின் ஆட்சேபனைகள், அறிவுரைகளை அவர் பொருட்படுத்தவில்லை. சந்திரிகா ஆட்சி பீடம் ஏறியதும் வாசுதேவ தலைமையிலான ஒரு குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. இக்குழுவில் பிக்குமாரும் பாரதலக்ஸ்மன் பிரேமச்சந்திர என்ற எம்.பியும் இடம்பெற்றிருந்தார். (கிருணிகாவின் தந்தை) - உட்கட்சி பூசலினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அப்போதைய வன்னி மாவட்டத் தளபதி சூட்டி தலைமையிலான புலிகளின் அணியினர் இவர்களை வரவேற்று, கடல் வழியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தனர். அங்குள்ள நிலைமைகளை பார்த்துவிட்டு இக்குழு வவுனியா திரும்பியது. அன்றுள்ள நிலைமையில் யாழ்ப்பாணம் செல்வதே சாதனை அல்லவா? இவர்களைக் காண கணிசமானோர் கூடியிருந்தனர். அங்கு கருத்துத் தெரிவித்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர 'யுத்தம் வேண்டும் எனச் சொல்வோர் ஒரு தடவை யாழ்ப்பாணத்துக்குச் சென்று நிலைமைகளை பார்க்க வேண்டும்' என்றார். சமாதானத்தை விரும்பும் சக்திகள் அவரது கூற்றால் திருப்தி அடைந்தனர். ஆனால், நவாலி சென்.பீற்றர்ஸ் மீதான தாக்குதல் மற்றும் சூரியக்கதிர் நடவடிக்கைள் மூலம் தமிழருக்கு பல்வேறு இன்னல்க்ளை ஏற்படுத்தி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கேணல் ரத்வத்தை கொழும்பில் போய் இறங்கியதும் அவருக்கு மாலைபோட்டு கட்டியணைத்ததும் இதே பாரதலக்ஸ்மன் பிரேமச்சந்திர தான். அன்றும் சரி இன்றும் சரி சாதாரண தமிழ், முஸ்லிம் மக்கள் அவலம் குறித்து சிங்களம், கவனம் எடுக்கத் தயாரில்லை என்பதே உண்மை.

***

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கான பொறுப்புக் கூறலை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் (தொழில் கட்சி) ஜெரமி கோர்பின் கூறுகிறார். தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன என்றும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையில் அர்த்தமுள்ள பொறுப்புக் கூறல் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூட் றுமேஸ் தெரிவித்துள்ளார். ஆனால், படையினரை நீதிமன்றில் நிறுத்த முடியாது என்பது ஜனாதிபதியின் தீர்மானம். இந்திய இராணுவத்தால்கூட வெற்றிகொள்ள முடியாது புலிகளை தமது இராணுவத்தினர் தோற்கடித்தனர் என பெருமிதம் கொள்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால.

இதேவேளை, புலம்பெயர் அமைப்புகள் ஒன்றுபடத் தவறினால் இலங்கை அரசு சர்வதேச கண்காணிப்பிலிருந்து மறைந்து போகும் என உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துலக அமைப்பின் தலைவர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். இவ்வருடம் நாட்டில் நவக்கிரகங்களாக நின்ற சக்திகளை நினைவேந்தல் நிகழ்வில் ஏதோ ஒரு வகையில் நேர்கோட்டில் நிற்க வைக்க முடிந்தது. பல சக்திகள் உருவாக்க முயன்ற மதங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை மக்கள் தூக்கி எறிந்தனர். ஆனால், இன்னமும் யார் யாருக்கு தடை விதிப்பது என்றே புலம் பெயர் அமைப்புகள் பட்டியலிடுகின்றன. கறையான்கள், கரப்பான் பூச்சிகளை அழிப்பது குறித்தே கவிதை பாடுகின்றன. யதார்த்தத்தை நோக்கி நகர அவர்கள் தயாராக வில்லை. ஒரு தசாப்தகாலம் முடிந்த பின்னரும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலம் அவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லை. சர்வதேசத்தை வென்றெடுப்பதற்கான பொறிமுறை குறித்து போதுமானளவு கவனத்தைக்கூட அவர்களால் செய்ய முடியவில்லை என்பதே பெரும் துயரம். ■







# ஒப்பரேஷன் நோ ஆ

# (OPPERATION NOA)

■ உதிரா

1950 இற்குப் பின்னர் மத்தியகிழக்கு நாடுகளில் உள்ள பெரும்பாலான நாடுகள் இராணுவ ரீதியாகத் தம்மை வளர்த்துக் கொள்ள முனைப்புக் காட்டின. இராணுவ சமநிலையைப் பேணுவதற்கு அரபு நாடுகள் அமெரிக்காவையும் சோவியத் ஒன்றியத்தையும் நாடின. அரபு நாடுகளின் இராணுவ பலத்துக்கு ஈடுகொடுக்க இஸ்ரேல் தனது இராணுவத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேற்கு நாடுகளின் தயவை நாடத் தொடங்கியது.

1960 இன் ஆரம்பத்தில் இஸ்ரேல் கடற்படையின் கட்டளைத் தலைமையகம் தமது கடற்படைக்கு மேலதிகமான நவீன பீரங்கிப் படகுகள் தேவை என்பதை உணர்ந்து கொண்டு அவற்றை வாங்குவதற்கு அல்லது நிர்மாணிப்பதற்கு உரிய இடத்தை ஆராயத் தொடங்கியது. நீண்ட ஆய்வின் பின் ஜேர்மனி யில் உள்ள கப்பல் கட்டுமானத் துறைமுகமான லுர்சேன் (Lurssen) கட்டுமானத் துறைமுகம் தெரிவு செய்யப்பட்டு பீரங்கிப் படகுகளின் தயாரிப்புக்கான ஒப்பந்தம் ஜேர்மனியுடன் கைச்சாத்திடப்பட்டது. இதை அறிந்து கொண்ட அரபுலீக், ஜேர்மனி மீது அழுத்தம் கொடுத்தது. இதனால் இஸ்ரேலுக்கான பீரங்கிப் படகுகள் தயாரிப்பிலிருந்து ஜேர்மனி பின்வாங்கியது. ஜேர்மனியின் இந்த முடிவையடுத்து இஸ்ரேல் கடற்படை உடனடியாகவே வேறு உரிய இடத்தைத் தேடும் பணியில் ஈடுபட்டு பிரான்சில் உள்ள ஷேர்போ (CHERBOURG) துறைமுகத்தைத் தெரிவு செய்தது. பீலிக்ஸ் அமியோட் (FELIX AMIOT) என்பவருக்குச் சொந்தமான தனியார் கட்டுமானத் துறைமுகத்தில் தனது பீரங்கிப் படகுகளின் தயாரிப்பு வேலைகளை இஸ்ரேல் ஒப்படைத்தது. பீரங்கிப் படகுகளை பிரான்ஸ் நிர்மாணிக்க அதற்கான இயந்திரங்கள் ஜேர்மனியில் வடிவமைக்கப்பட்டன. இவையாவும் இஸ்ரேல் கடற்படையின் தேவைகளிற்கேற்பவே தயாரிக்கப்பட்டன. இந்தத் திட்டத்துக்கு AUTUMN என்ற குறியீட்டுப் பெயரும் சூட்டப்பட்டது. இஸ்ரேலின் தேவைக்கேற்ப 12 பீரங்கிப் படகுகள் நிர்மாணிப்பதென ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இதற்கான மாலுமிகள் 1965 இன் ஆரம்பத்தில் தளபதி ஹய்ம்




சாசள் (HAIM SCHACHAL) தலைமையில் பிரான்ஸூக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிர்வாகம் மற்றும் நடவடிக்கைகளுக்கென கட்டன் பின்யமின் தலீம் (BINYAMIN TALEM BINI) தலைமையில் இன்னொரு குழுவும் அனுப்பி வைக்கப்பட்டது. இவர் பின்னாளில் யொம் கிப்பூர் (YOMKIPPUR WAR) போரின் போது இஸ்ரேலின் கடற்படைத் தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதி இஸ்ரேல் - பிரான்ஸ் உறவில் ஒரு பொற்காலம் என வர்ணிக்கப்பட்டது. ஆனால் இந்தச் சுமூக உறவு இருநாடுகளுக்கும் இடையில் நீடிக்கவி ல்லை.

### பிரான்ஸ் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதிக்குத் தடை

6 நாள் யுத்தத்தின் பின் இஸ்ரேல் - பிரான்ஸ் உறவு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. (6 நாள் யுத்தம் - 1967 ஜூன் 5ம் திகதி முதல் ஜூன் 10ம் திகதி வரைக்குமான இஸ்ரேல் - அரபு யுத்தம். எகிப்து, ஜோர்தான் மற்றும் சிரியா தலைமையில் சில அரபு நாடுகள் இஸ்ரேலுடன் போரில் குதித்தன). இந்தப் போரினால் கடும் சினம் கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல் இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதிகளை நிறுத்தும்படி கட்டளையிட்டார்.

பீரங்கிப்படகு விவகாரம் மற்றொரு வழியிலும் சிக்கல்களைச் சந்தித்தது. இஸ்ரேல் - பிரான்ஸ் ஒப்பந்தத்தை இஸ்ரேல் மதிக்கத் தவறிவிட்டதாக கூறிக் கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல் அரபு லீக் உடனான உறவை மேலும் பலப்படுத்த முற்பட்டார். இதுபோன்ற நிகழ்வுகளால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல்தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டிய நிலை உண்டானது. தொடர்ந்து நடந்த ஜனாதி பதித் தேர்தலில் ஜோர்ஜஸ் பொம்பிடோ (GEORGES POMPIDOU) ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய ஜனாதிபதி தம்முடன் நல்லெண்ணத்தைப் பேணுவார் என்று எதிர்பார்த்த் இஸ்ரேலுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. புதிய ஜனாதிபதியும் பழைய ஜனாதிபதியின் கொள்கைகளையே பின்பற்றினார்.

இதேவேளை, இஸ்ரேலின் விமானச் சேவை விமானம் ஒன்று லெபனானைத் தளமாகக் கொண்டு இயங்கிய பலஸ்தீன விடுதலை முன்னனி அமைப்பினால் (POPULAR FRONT FOR THE LIBRATION OF PALESTINE - PFLP) தாக்கப்பட்டதற்கு பதிலடியாக 1968 டிசெம்பர் 28இல் பெய்ரூட் விமான நிலையம் மீது கேணல் ரபயல் எய்ட்டன் தலைமையில் சிறப்பு கமாண் டோப் படையினர் தாக்குதல் நடாத்தினர். இத்தாக்குதலில் 12 பயணிகள் விமானமும் 2 பொதிகள் ஏற்றும் விமானமும் முற்றாக அழிக்கப்பட்டன. இஸ்ரேலியப் படையினர் நடாத்திய தாக்குதலுக்கு ஒப்பரேசன் கிவ்ற் (OPERATION GIFT) எனப் பெயரிடப்பட்டது.

### 7 பீரங்கிப் படகுகள் இஸ்ரேலிய மாலுமிகளால் பிரான்ஸில் இருந்து இஸ்ரேலுக்கு செலுத்தப்பட்டது

இத் தாக்குதலின் பின் மேலும் கோபமடைந்த பிரான்ஸின் புதிய ஜனாதிபதி இஸ்ரேலுக்கான முழுமையான ஆயுத ஏற்றுமதிக்குத் தடைவிதித்தார். ஆனாலும் பீரங்கிப்படகுகளிற்கான பணம் முழுவதுமாக இஸ்ரேலினால் செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்கனவே நிர்மாணித்து முடிக்கப்பட்டிருந்த 7 பீரங்கிப் படகுகள் இஸ்ரேலிய மாலுமி களால் பிரான்சில் இருந்து இஸ்ரேலுக்குச் செலுத்தப்பட்டுவிட்டது. மத்தியதரைக்கடற் பகுதியில் இராணுவ சமநிலையைப் பேணுவதற்கு நவீன போர்க் கப்பல்களை தமது கடற்படையில் இணைத்துக் கொள்வது இஸ்ரேலுக்கு மிகுந்த தேவையாக இருந்தது. எனவே பிரான்ஸில் தமக்கென தயாரிக்கப்பட்ட மிகுதி 5 படகுகளையும் எப்படியாவது மீட்டுவர இஸ்ரேல் திடசங்கட்பம் பூண்டு அதற்கான திட்டங்களையும் வகுக்கத் தொடங்கியது. ஓய்வுபெற்ற ரியர் அட்மி ரல் மோர்சொய் மொக்கா லிமோன் (REAR ADMIRAL MORDECHAI MOKKA LIMON) தலைமையில் இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இவர் இஸ்ரேல் கடற்படையின் தளபதியாகவும் பாரிசில் இஸ்ரேலின் பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகளிற்கு தலைவராகவும் விளங்கினார். இக்காலகட்டத்தில் இஸ்ரேலுக்கு சாதகமாக பல விடயங்கள் நடைபெற்றன.

பிரான்சில் நிர்மாணிக்கப்பட்ட இஸ்ரேலுக்கான 12 பீரங்கிப் படகுகளில் 7 பீரங்கிப் படகுகள் இஸ்ரேலுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. இதேவேளை இஸ்ரேலின் கடற்படை கட்டளை மையத்திலிருந்து சகல பீரங்கிப்படகுகளையும் இஸ்ரேலின் HAIFA நகருக்கு நகர்த்தும்படி அறிவுறுத்தல் விடுக்கப்படுகிறது. துறைமுகத்திலிருந்து படகுகளை நகர்த்துவதற்கு பிரெஞ்சு அரசாங்கத்தால் விதிக்கப்பட்டது. தடைகளை கருத்திற் கொள்ளாமல் படகுகளை உடனடியாக நகர்த்தும்படி அந்த அறிவுறுத்தல் இருந்தது. இதனால் சினம் கொண்ட பிரெஞ்சு அரசு பாதுகாப்பு இல்லாத பிரெஞ்சுத் துறைமுகங்களில் இருந்து இஸ்ரேலிய கடற்படை மற்றும் ஏனைய படகுகளை வெளியேற்றும்படி உத்தரவிட்டது.

### முதற்கட்ட ஏமாற்று நடவடிக்கை

5 பீரங்கிப் படகுகளையும் தந்திரமாக இஸ்ரேலிற்கு நகர்த்துவதற்கான இரகசிய திட்டத்தை மொசாட் மிகவும் இரகசியமாக மேற்கொள்ள ஆரம்பித்தது. இஸ்ரேலைத் தளமாகக் கொண்டு இயங்கும் மறிரைம் ப்ரூட் கறியேல் (MARITIME FRUITCARRIERS) என்னும் பொதிகள் கப்பல் நிறுவனத்தின் உரிமையாளரான ஓய்வுபெற்ற கடற்படை தளபதி மிலா பிறென்னர் (MILA BRENNER) உடன் ரியர் அட்மிரல் லிமோன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார். இந்த மிலா பிறென்னருக்கு இற்கு நோர்வேயில் உள்ள பிரபல தொழிலதிபர்களில் ஒருவரான மாட்டின் செய்ம் (MARTIN SIEM) என்பவருடன் தொடர்புகள் இருந்தது. ரியர் அட்மிரல் மோர்சொய் மொக்கா லிமோன் ஆகியோரிடையே இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தி 5 படகுக்ளும் ஸ்ரார் போட் (STARBOAT) நிறுவனத்துக்கு விற்கப்பட்டன. இந்த நிறுவனம் நோர்வேயில் எண்ணை அகழ்விற்கென பனாமாவில் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனை விற்கும்போது இஸ்ரேல் அதிகாரிகள் பிரெஞ்சு அரசாங்கத்துடன் கடுமையான பேச்சுக்களை நடாத்த வேண்டியிருந்தது. நீண்ட பேச்சுகளின் பின்னர் பிரெஞ்சுப் பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் (MICHEL DEBRE) விற்பனைக்கான ஒப்புதலை வழங் கினார். இஸ்ரேல் அதிகாரிகள் படகுகளிற்கான மாலுமிகள் அனுபவம் வாய்ந்த இஸ்ரேலிய மாலுமிகளாகவே இருப்பார்கள் என ஸ்ரார் போட் (STARBOAT) நிறுவனத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தார்கள். மொசாட் அமைப்பின் உயர்நிலைத் தலைவர்களில் ஒருவரான பென்னா அமின் வேட் (BENYAMIN VERED) என்பவர் தலைமையில் மொசாட் உறுப்பினர்கள் STARBOAT நிறுவனத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இவையாவும் ஒப்பரேஷன் நோ ஆ (OPPERATION NOA) நடவடிக்கையின் முதற்கட்ட ஏமாற்று நடவடிக்கையாகும். (ஏமாற்று நடவடிக்கை என்பது இராணுவ, உளவு நடவடிக்கைகளில் மிகப் பெரிய தந்திர நடவடிக்கையாகக் கொள்ளப்படுகிறது.)

இஸ்ரேலியர்கள் அடுத்தகட்டமாக நாளுக்குநாள் தமது நாளாந்த வேலைகளைச் சாமர்த்தியமாக நகர்த்திக் கொண்டிருந்தனர். இஸ்ரேலிய மாலுமிகள் படகுகளை அத்திலாந்திக் கடற்பகுதிக்குள் சிறுசிறு பயணங்களை மேற்கொண்டு தமது பயணத்துக்கான ஒத்திகையை பார்க்கத் தவறவில்லை. இதனை பயிற்சி நடவடிக்கைகள் எனக் கூறிக்கொண்டு பிரெஞ்சு அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருந்தனர்.

### மேலதிக இஸ்ரேல் அதிகாரிகள் இரகசியமாக இணைவு

இதேவேளை மேலும் 80 இஸ்ரேலிய அதிகாரிகள் இரகசியமான முறையில் இந்த மாலுமிகளுடன் இணைந்து கொண்டனர். இவர்கள் சாதாரண சுற்றுலாப்பயணிகள் போன்று பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கூடாகவும் வந்து சேர்ந்தனர். ஒரே தடவையில் இத்தனை பெருந்தொகையான நபர்கள் சென்றால் பிரெஞ்சு புலனாய்வுத்துறையை உஷார்ப்படுத்திவிடும் என்பதற்காகக் குழுக்களாகப் பிரித்து அனுப்பப்பட்டனர். இவர்கள் ஒருநாளுக்குமேல் ஒரு ஹோட்டலில் தங்கக்கூடாதெனவும் உத்தரவிடப்பட்டிருந்தது. சகலரும் நேர்த்தியான இஸ்ரேலியக் கடவுச்சீட்டு வைத்திருந்ததால் கடவுச்சீட்டு மோசடியில் அகப்பட்டுக் கொள்ளவில்லை.

டிசம்பர் 23ஆம் திகதி சகல மாலுமிகளும் சேர்போக் (CHERBOURG) நகரிற்குள் வந்து பரந்து ஐதாக இருந்தனர். இத்தனை யூதர்கள் ஒரு நகருக்குள் எதற்காக கூடுகின்றனர் என்று பிரெஞ்சுப் பொலிசாருக்கு சந்தேகம் வந்தால் எல்லாத் திட்டங்களும் சுக்கு நூறாகிவிடும் என மொசாட் தலைவர் மெய்ர் அமிற் (MEIR AMIT)சற்றுப் பயம் கொண்டார். எனினும் நகர்வுகளை மிகமிக இரகசியமாகத் திட்டமிட்டு மேற்கொண்டதால் எந்த விதமான இடையூறுகளும் வரவில்லை.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# ஆளத் தெரியாதவன் ஆண்டால்...!

● ஸபர் அஹமட்

கடந்த வாரம் குருநாகல் மாவட்டத்தின் சில இடங்களிலும் மினுவன்கொடவிலும் அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிராய் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையின் பின்னணியை வைத்துப் பார்க்கும் போது இரண்டு விடயங்கள் புலனாகின்றன.

1.மாற்று சமூகங்களிலும் பல சஹ்ரான்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு அந்தஸ்தில் வெவ்வேறு படித்தரங்களில் இவர்கள் இருந்திருக்கிறார்கள். அனைவரினதும் போலியான நடுநிலை என்னும் ஆடை விலகி உண்மை நிலை தெரியத் தொடங்கியிருக்கிறது.

2. 'இப்படிப்பட்டவர்கள் செய்கின்ற வேலை எமது முழு பௌத்த சமூகத்துக்கும் பெரும் தலை குனிவு' என்று சில முற்போக்காளர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இது பௌத்த தர்மம் அல்ல என்கிறார்கள். இதைத்தான் இங்கே இருக்கும் மாற்று மதத்தவர்களிடம் நாங்கள் ஏப்ரல் 21முதல் கூறிக்கொண்டிருக்கின்றோம். நம்மில் சிலர் இவர்கள் முஸ்லிம்கள் அல்ல என்று இப்போது சப்பைக் கட்டு கட்டுகிறார்கள். அப்படி ஜகா வாங்கத் தேவையில்லை. இவர்கள் இஸ்லாத்தைத் தவறாய்ப் புரிந்து பயங்கரவாதிகளாகி இறந்துபோன முஸ்லிம்கள் என்கிறேன். அதே போலத்தான் பௌத்தத்துக்குள் மறைந்திருக்கும் வன்முறையாளர்களும். அதற்காக மகாவம்சத்தையோ பன்சலையில் ஓதப்படும் 'பன' போன்றவற்றையோ யாரும் மாற்றம் செய்யத் தேவையில்லை. இங்கே நடந்து கொண்டிருப்பது திட்டமிட்ட அரசியல்ப் பயங்கரவாதம்.

இந்தக் கொலைவெறி ஆட்டத்தின் பின்னணியை



ஆராயப் பெரிதாய் ஓர் ஆய்வும் தேவையில்லை. கடல் நீரில் ஊற்றப்பட்ட நல்ல தண்ணீர் தான். பயங்கரவாதக் குண்டுத் தாக்குதல்கள் நடந்து மூன்று வாரங்களின் பின்னர் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்க ஒரு நிராயுத பாணியான சமூகம் தாக்கப்படுகிறது. இத்தனைக்கும் பாருங்கள். ஒரு வாகனம் நிறுத்தாமல்ப் போனால்க்கூட துப்பாக்கிச் சூடு நடக்கும் நாடு இது. இதற்கு மேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது.

இந்த நாடு போகப் போகும் பாதை இனி இப்படித் தான் அமையப்போகிறது. அப்பாவி முஸ்லிம்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அவர்களை நிர்வகிக்க ஒரு தலைமை இல்லை. உலமா சபை போன்ற கையாலாகாத அமைப்பும் ஊழலில் கொழுத்த முஸ்லிம் அரசியல்வாதிகளும் யார் ஆட்சிக்கு வந்தாலும் போய் முட்டுக் கொடுத்ததைத் தவிர என்ன செய்தார்கள்? சிங்களம் பேச வராதவர்களெல்லாம் ஒரு நிகழ்ச்சி நிரலில் இயங்கிக் கொண்டிருக்கும் இனவாத ஊடகங்களுக்கு விளக்கம் கொடுக்கின்றேன் என்று இறங்கி திக்குமுக்காடி வெளியேறினார்கள். எதையோ சொல்ல வந்து எதையோ சொல்லப் போய் விபரீதத்தில் முடியும் இந்த மொழிக் குழப்பம் இனவாதக் கும்பலுக்கு இன்னும் தீனியானது. ஆனால் இதையெல்லாம் முஸ்லிம் இணையத்தளங்கள் பெரு வெற்றியாய்க் கொண்டாடி தன்னையும் சமூகத்தையும் ஏமாற்றிக் கொண்டன.

பிரான்ஸில் ஐ.எஸ் தாக்குதல் நடத்திய போது முழு ஐரோப்பாவும் அதிர்ந்தது. ஆனால் அங்கே இருக்கும் எண்பது இலட்சம் முஸ்லிம்களுக்கு ஒரு கீறல் விழவில்லை. இலண்டன் தாக்கப்பட்டது. ஆனால் இலண்டன் முஸ்லிம்களை அரவணைத்தபடி முன்னேறியது கெமரூன் அரசு. பெல்ஜியம் தாக்கப்பட்டது. எங்காவது ஒரு வன்முறை? அவ்வளவு ஏன் 2001செப்டம்பர் 11இல் முழு அமெரிக்கா மக்களும் நிலைகுலைந்த போது அங்கே வாழும் முஸ்லிம்களின் எந்த உடைமை எரிக்கப்பட்டது? வெளியுறவுக் கொள்கைகள் எப்படிப் போனாலும் தேசத்தை நேசிக்கும் இந்நாடுகள் தன் மக்களிடம் சமத்துவம் பேணுவதில் தவறுவதே இல்லை. இப்படி ஒட்டுமொத்த சமூகத்தைப் பிடித்து வதைத்து பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். இங்கிருப்பவர்களைப் போன்றவர்கள் அங்கே ஆள்வதுமில்லை. அங்கே உள்ள முஸ்லிம் சமூகங்களை ஐந்தாம் ஆறாம் வகுப்புடன் பாடசாலையிலிருந்து விலகி வந்து மத்ரஸாக்களில் தஞ்சம் புகுந்த கூட்டம் வழிநடத்துவதும் இல்லை.

இங்கே முஸ்லிம்களிடம் சீர்திருத்தத்துக்கு உள்ளாக வேண்டியது தாடியோ ஜூப்பாவோ அல்ல. அதன் ஆண் மீகத்தலைமைத்துவமும் அரசியல்த் தலைமைத்துவமும் மட்டுமே. ■

# இராவணன் தமிழனா?

● கோப்பாய் சிவம் - சிவானந்த சர்மா



கலி முற்றிவரும் காலத்தில் அழிவுக்குக் காரணமாகப் பல அபத்தங்கள் நிகழ்வது தவிர்க்கமுடியாது என நமது புராணங்களும் சாஸ்திரங்க்ளும் கூறுகின்றன. அவ்வகையில் இப்போது இராவணன் புது அவதாரமெடுப்பதை அவதானிக்கமுடிகிறது. இராவணன் தமிழன், எனவும் சித்தர் கணத்தில் ஒருவன் என்றும், சிவபக்தன் என்றும் அவனைப் போற்றுவதையும் சிலர் அவனைக் கடவுளுக்குச் சமமாக வணங்கமுற்படுவதும் புரியாத புதிராக மாத்திரமல்லாமல் வெறுப்பாகவும், வேதனையாகவும் உள்ளது. மிக விரைவில் இராவணனுக்கு இங்கே ஒரு பெருங்கோவில் கட்டப்போகிறார்களாம் எனவும் தகவல் கிடைத்திருக்கிறது.

சுமார் எழுபது ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டில் தனித்தமிழ் இயக்கம் என்ற பெயரில் ஆரம்பித்து ஆன்மீகத்தையே அழித்தொழிக்க முற்பட்டு அந்தணர்களுக்கும், சமஸ்கிருதத்துக்கும் எதிராகப் போர்தொடுத்து தமிழ்ப் பண்பாட்டையும் ஒற்றுமையையும் சீர்குலைத்து சாதிகளுக்கு எதிராகப் பேசுகிறோம் என்று சொல்லிக் கொண்டு அரசியலுக்காக ஆயிரத்தெட்டுச் சாதிகளையும் சாதிக் கலவரங்களையும் ஏற்படுத்திய திராவிட மாயை இன்று கொஞ்சம் கொஞ்சமாக அழிவை நாடும் நேரத்தில் இங்கே சிலர் இப்போதுதான் அதன் ஆரம்பங்களை நாடுகிறார்கள். ஆரம்பத்தில் இவற்றை ஆன்மீக அறிஞர்கள் கவனத்தில் எடுக்காவிட்டால் நாம் நமது தலையில் மண்போட்டவர்களாகிவிடுவோம்.

இராமர் இந்துக்களின் வணக்கத்துக்குரிய நாயகனாக, வைஷ்ணவர்களின் தெய்வமாக இருப்பதை எதிர்ப்பதற்காக, எதிரியின் எதிரி எனக்கு நண்பன் என்ற கோட்பாட்டுக்கு இணங்க, இராவணனைப் போற்றத் தொடங்கினார்கள் இவர்கள். எம். ஆர். ராதா கீமாயணம் என்ற பெயரில் இராவணனைக் கதாநாயகனாகவும் இராமனை வில்லனாகவும் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார். இராவணன் தமிழன் எனப் புதுக் கதை விடத்தொடங்கினர். இங்கே சிங்களவர்களும் இராவணனைத் தமது தலைவனாக இப்போது போற்றத் தொடங்கியிருக்கின்றனர் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும்.

சித்தர்களின் தலைவராகிய அகத்தியர் இராவணனைத் தோற்கடித்த வரலாறும், இராமர் இராவண வதத்துக்குமுன் அகத்தியரிடம் ஆசிபெற்றதையும் அறிவீர்களா? சித்தர்களில் ஒருவரான தாயுமானவர் பாடல்களைப் படித்திருக்கிறீர்களா? வேதாந்தம், சித்தாந்தம், வடமொழி, தென்மொழி என்னும் வேறுபாடுகளற்ற எதையும் வெறுக்காது அனைத்தையும் அரவணைக்கின்ற சித்தர் மரபு உங்களுக்குப் புரியுமா? தேவார முதலிகள் இராவணனது சிவபக்தியை மட்டும் குறிப்பிட்டுள்ளனரல்லாமல் அவனைப் போற்றவில்லை என்பதையும், அவன் மூலமாக சிவனையே போற்றுகின்றனர் என்பது புரியவில்லையா?

ஆறுமுக நாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, ஏழாலை மு. கந்தையா (நான் போற்றி வணங்கும் இவர்களில் யாரும் பிராமணர் இல்லை என்பதை நன்கு கவனித்துக்கொள்ளுங்கள் பிராமண எதிர்ப்பாளர்களே!) ஆகியோரின் வழிவந்த சைவத் தமிழர்களே! புதுக் கோவில்களும், புதுத் தெய்வங்களும், புது வழிபாட்டு முறைகளும், புதுச் சடங்குகளும் அறிமுகமாகும்போது (வைதிகத் தெய்வங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். சிவபரம்பொருளைத் திரும்பியும்பாராமல், சிறுதெய்வங்களையே பெருந்தெய்வமாகக் கொண்டாடும் நம்மவர்களையும் இந்தப் பேனாமுனை கடுமையாகச் சாடத் தவறாது) அதுபற்றிய விபரங்களை, ஆதாரங்களை ஆராயுங்கள். கேள்விகளை எழுப்புங்கள். புதுமை மோகத்திலோ, புரட்சி விருப்பிலோ மயங்காதீர்கள்.

இராவணனைப் பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள் தமிழர்களே!!

1. இராவணன் உத்தரப் பிரதேசத்தில் பிக்ஷரக் எனும் ஊரில் பிறந்தவன்.

2. விஸ்ரவஸ் எனும் ஒரு பிராமணர்க்கு மகனாகப் பிறந்தவன்.

3. இராவணனை வலித்த அரக்கன், இராட்சதன் என்று தமிழ்ச் சங்க இலக்கியமாகிய புறநானூறு(378) கூறுகிறது. ஆரியனோ பார்ப்பனனோ அல்ல.

4. இலங்கைக்குச் சென்ற இராவணன் குபேரனிடமிருந்து அதை பறித்துக் கொண்டு ஆட்சி செய்தான். இலங்கை இராவணனின் சொந்த ஊரல்ல.

5. கடவுளாகிய திருமால் இராமனாக அவதரித்து இராவணனை வதம் செய்ததாக நம்மாழ்வார் திருவாய் மொழியில் கூறியுள்ளார்.

6. இராமாயணத்தைப் பற்றி தமிழ்ச் சங்க அகநானூறு (70), புறநானூறு பாடியுள்ளது. இராமாயணத்தை கட்டுக்கதை என்போர் தமிழ்ச் சங்க நூல்களையும் கட்டுக்கதை என்று சொல்ல வேண்டும்.

7. தமிழ் முனிவர் அகத்தியரிடம் சமஸ்கிருத வேத பண்டிதனாகிய இராவணன் போட்டியிட்டுத் தோற்றுள்ளான்.

8. இராவணனுக்கும் தமிழுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவன் குடும்பப் பெயர்களான விபீக்ஷ்ண, கும்பகர்ண, இந்த்ரஜித், மேகநாத, மண்டோதரி, பூதனை எனும் எந்தப் பெயரும் தமிழ் கிடையாது.

9. சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை தமிழ்க் கடவுளான திருமாலின் அவதாரம் இராமனின் புகழைக் கேளாத காதுகளை ஏசுகிறது.

10. இராமனுக்கும், இராவணனுக்கும் சம காலத்தில் வாழ்ந்த வால்மீகி பதிவு செய்த இராமாயணம் மட்டுமே அதிகார பூர்வமானது. மற்ற பிற இராமாயணங்கள் எல்லாம் பிற்காலத்தில் வேறு பலரின் கற்பனைகள் புகுத்தப்பட்டுள்ளது. அவை நிஜமல்ல.

11. இராவணன் பல பெண்களை கற்பழித்ததால் பிரம்மன் அவனுக்கு இனி எந்தப் பெண்ணையும் விருப்பமின்றி தொட்டால் தலை வெடித்துச் சாவாய் என சாபமிட்டிருந்தார். அதன் பொருட்டே அவன் பின்னாளில் சீதையை தொட அஞ்சினான். உடன் வர கொலை மிரட்டலும் செய்தான்.

12. இராவணனை கொல்லும் முன்னர் இராமன் தமிழ் முனிவர் அகத்தியரிடம் ஆசி பெற்றதாக தமிழ்சேர மன்னர் குல சேகர ஆழ்வார் பெருமாள் திருமொழியில் உரைத்துள்ளார்.

13. பிறர் மனைவியை நோக்காமையே பெரும் ஆண்மை எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். அதன்படி இராவணன் ஆண்மையற்றவன். இராவணனை புகழ்பவர்கள் திருவள்ளுவர்க்கு எதிரானவர்கள் என்பதை அறிய வேண்டும்.

14. இராவணன் தமிழ் பேசியதாக வால்மீகி இராமாயணத்திலோ தமிழ்க் கம்பராமாயணத்திலோ எங்குமே குறிப்பிடவில்லை.

15. சூர்ப்பநகை சீதையைக் கொல்ல முயன்றதால் மட்டுமே இலக்குமணன் அவளது மூக்கைத் துண்டித்தான்.

16. தமிழ்க் கம்பராமாயணத்தில் இராவணன் ஆயகலைகள் 64உம் அறிந்தவனாயினும் சிறந்த சிவபக்தனாயினும், இராவணன் ஈவு இரக்கமற்ற அரக்கன் என்றே கம்பர் கூறுகிறார்.

17. வாலி சுக்ரீவனின் மனைவியை அபகரித்தான். தன் எதிரில் வருபவனின் பலம் எல்லாம் இல்லாமல்ப் போக வேண்டும் என்ற வரம் பெற்றவன். அதனால்த் தான் இராமன் மறைந்திருந்து துண்டித்துக் கொன்றார். இதை வாலியே ஒத்துக் கொண்டு செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு விட்டான்.

19. வால்மீகியே ஒரு பார்ப்பனர் அல்ல. சூத்திர குலத்தை சேர்ந்தவரே. தவம் செய்து மந்திரம் ஓதி பிராமணர் ஆனார். சாதி பிறப்பால் வருவதல்ல என காண்பித்தார்.

20. தமிழ் சங்க இலக்கியங்களும், தமிழ்த் திவ்யபிரபந்தமும் பிராமணர்க்குப் பிறந்த இராவணனே அரக்கன் ஆனான் எனக் கூறுகிறது.

21. உயர் சாதி பார்ப்பனர்க்கு பிறந்த இராவணன் அரக்கனாக வாழ்ந்ததால் சத்திரிய இராமனால் கொல்லப்பட்டான்.

22. தமிழ்க் கடவுளான திருமாலின் அவதாரமானாலும் இராமன் மனிதனாகவே வாழ்ந்தார். அதனாலேயே அவர் பறந்து இலங்கை செல்லாமல்பாலம்கட்டிச்சென்றார்.

23. இராவணன் புலஸ்திய ரிக்ஷியின் பேரன். புலஸ்தியர் பிரம்மனின் மகன். இராவணனை தமிழன் என கதை செய்தால் பிரம்மனும் தமிழன் ஆகி விடுவார்.

24. இராமன் சீதையை தீக்குளிக்க சொன்னது தன் சந்தேகத்தைப் போக்க அல்ல. ஊராரின் சந்தேகத்தைப் போக்கவே.

25. இராவணன் எற்கனவே வாலியாலும், கார்த்தவீரியனாலும் தோற்கடிக்கப் பட்டவனே.

26. இராவணன் செய்தவற்றை அவன் உடன் பிறந்த தம்பி விபீஷ்ணன், கும்ப கர்ணன், மனைவி மண்டோதரி எல்லோருமே தவறென்றே கூறியுள்ளனர். வால்மீகி ராமாயணத்தில் இது போன்ற எல்லாக் கேள்விகளுக்கும் விடையுண்டு.

மொத்தத்தில் இராவணனும் வாலியுமே இறக்கும் போது தவறுக்கு மனம் வருந்தி திருந்தி விட்டனர். ஆனால் அவனை பாராட்டும் இந்த கலியுக இராவணர்கள் தான் திருந்துவதில்லை. தமிழ்ச் சங்க இலக்கியங்களும் இந்து மதமும் கூறும் இராமாயணத்தின் மேல் நம்பிக்கை இல்லாதவர்கள் அதை விமர்சிக்க வேண்டிய அவசியம் இல்லை.

எதிரொலி
Ethiroli
22 - 28 மே 2019

## ஹீமோகுளோபின் அளவை அதிகரிக்கும் முருங்கை இலை....!

முருங்கை இலையில் பாலாடையை விட 2 மடங்கு புரோட்டீன், ஓரஞ்சைவிட 7 மடங்கு விட்டமின் சி, வாழைப்பழத்தைவிட 3 மடங்கு பொட்டாசியம், கரட்டைவிட 4 மடங்கு விட்டமின் ஏ, பாலைவிட 4 மடங்கு கல்சியம் உள்ளது.

உடலுக்குத் தேவையான எல்லா ஊட்டச் சத்துக்களும் இந்த இலையில் இருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். நமது அன்றாட உணவில் போதுமான அளவு ஊட்டச்சத்துக்கள் இருக்கவேண்டுமானால், முருங்கைக் கீரையை அடிக்கடி நமது சமையலில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

முருங்கை மரத்தின் இலைகள், பூக்கள், காய்கள் என எல்லாமே மருத்துவக் குணங்கள் கொண்டவை. முருங்கை இலையின் சாறு இரத்த அழுத்தத்தை சரியான அளவில் வைத்திருக்கவும், மனப்பதற்றத்தைத் தணிக்கக் கூடியது.

சர்க்கரை நோயாளிகளுக்கு முருங்கையைப் போன்ற மாமருந்து இந்த உலகில் வேறு இல்லை. சோயாவில்த்தான் அதிகபட்ச புரதம் கிடைக்கும் எனச் சொல்லி வந்த உணவு ஆய்வாளர்கள் இப்போது முருங்கையை புரதச்சத்துக் குறைபாடுகளுக்குப் பரிந்துரைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். மனிதர்களுக்குத் தேவையான 20 அமினோ அமிலங்களில் 18 இந்த இலையில் உள்ளது.

முருங்கை இலைக்கு 'விந்து கட்டி' என்ற பெயரும் இருக்கிறது. கோழையை அகற்றும். முருங்கைக்காய் பிஞ்சு ஒரு பத்திய உணவாகும். இதை நெய் சேர்த்தோ அல்லது புளி சேர்த்தோ சமைப்பது நலம். ஒரு கைப்பிடி முருங்கை இலையை 1 தேக்கரண்டி நெய்யில் வதக்கி, மிளகு மற்றும் சீரகம் பொடித்துப் போட்டு, தினமும் காலையில் சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட, ஹீமோகுளோபின் அளவு பல மடங்கு அதிகரிக்கும்.

முருங்கை இலையில் மஞ்சள், பூண்டு, உப்பு சேர்த்து வேகவைத்து சாப்பிட்டால் வாய்வுக் கோளாறுகள் விலகும். முருங்கை இலையை அரைத்து வீக்கங்களின் மேல் பற்றுப் போடலாம்.

சிறுநீர் சுலபமாகப் பிரிய, முருங்கை இலையுடன் சீரகம் கால் தேக்கரண்டி, சிறிதளவு மஞ்சள் சேர்த்துக் கஷாயமாக்கிக் குடித்தால் நீர்க்கட்டு நீங்கி, சிறுநீர் தாராளமாகப் பிரியும். முருங்கை இலைகளை அரைத்துச் சாறு எடுத்து, சிறிது தேன் கலந்து, காலையில் வெறும் வயிற்றில் குடித்தாலும் வயிற்றுப் பூச்சிகள் அழியும். இலைச் சாற்றைத் தலையில் தேய்த்துக் குளித்தால், பொடுகுத் தொல்லை போகும்.

## நோய்களுக்கு தீர்வு தரும் சித்த மருத்துவம்!



✶மூச்சுக்கூட விடமுடியாமல் அதிகப்படியான இருமலாலும் சளியாலும் சிரமப்படும் குழந்தைகளுக்கு, குப்பை மேனியின் சாற்றைப் பிழிந்து சிறிதளவு கொடுத்தால் உடன் அனைத்துச் சளியும் வாந்தியாக வெளியில் வந்து விடும். ஆனால் சரியான அளவில் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வயிற்றுப் போக்கு ஏற்படும்.

✶தேனை தினமும் வெந்நீரிலோ, பாலிலோ சிறிதளவு கலந்து குடித்து வர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். நாள் பட்ட இருமல், சளி குணமாகும்.

✶ஆண்மைக்குறைவைப் போக்க விரும்புபவர்கள் முருங்கை விதையைப் பொடி செய்து, பாலில் கலந்து, இரவில் படுக்கப் போகும் முன் சாப்பிட்டுவர விரைவில் பலன் கிடைக்கும்.

✶இரவில் தினந்தோறும் தூக்கம் வராமல் அவதிப்படுபவர்கள் சிறிதளவு வெந்நீரை அருந்திப் பின் படுக்கைக்குச் செல்ல வேண்டும். நீரிழிவு நோய் இல்லாதவர்கள் சிறிதளவு கருப்பட்டி அல்லது சர்க்கரை சாப்பிடலாம்.

✶அறுகம்புல்லைச் சாறாகவோ அல்லது பொடியாகவோ வாரம் ஒருமுறை சேர்த்துக் கொண்டால் இரத்தம் சுத்தமாவதுடன், உடல் உஷ்ணமும் தணியும்.

✶எந்த மருந்துகளை உட்கொள்பவராக இருந்தாலும் மது அருந்தும் பழக்கம் உடையவராகவோ அல்லது புகைப்பிடிப்பவராகவோ இருந்தால் அது உடலில் மருந்தின் செயல்பாட்டு வீரியத்தைக் குறைக்கும்.

✶உடல் வெளுப்பு மற்றும் தேமல் குணமாக வெள்ளைப் பூண்டை வெற்றிலை சேர்த்து மசிய அரைத்து தினமும் தோலில் தேய்த்துக் குளித்து வரக் குணமாகும்.

## இந்த வாரம் உங்களுக்கு...

### மேடம்

பணவரவு திருப்தியாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பழைய கடன்களைத் தந்து முடிப்பீர்கள். வேலையின் காரணமாக குடும்பத்தைத் தற்காலிகமாக பிரிய வேண்டிய சூழ்நிலை உண்டாகும். அலுவலகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்புகள் தேடி வரும். வேலைக்குச் செல்லும் பெண்மணிகள் தங்கள் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். வியாபாரத்தில் வங்கிக் கடன் கிடைத்து வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். வியாபாரங்களில் சுமாரான நிலையே இருக்கும். என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும்.

### இடபம்

எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு வெளியூர்ப் பயணமும் அதனால் ஆதாயமும் ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் உறவினர்களிடம் மதிப்பு அதிகரிக்கும். அலுவலகத்தில் பணிச் சுமை அதிகரிக்கும். இருந்தாலும் அதற்கேற்ற சலுகைகள் கிடைப்பதால் உற்சாகமாகச் செயற்படுவீர்கள். தொழில், விவசாயம் மேற்கொள்பவர்கள் நல்ல இலாபங்களை அடைந்து கடன்களை அடைத்து முடிப்பார்கள்.

### மிதுனம்

குடும்பப் பொருளாதார நிலை நிறைவாக இருக்கும். பழைய கடன்கள் அனைத்தையும் அடைத்து முடிப்பீர்கள் தொலைதூரப் பயணங்களால் உடல் மற்றும் மன சோர்வு உண்டாகும். திருமணமான தம்பதிகளிடையே ஒற்றுமை மேலோங்கும். பிரிந்து சென்ற உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் மீண்டும் வந்து உறவு கொண்டாடுவர். பணியிடங்களில் சக பணியாளர்களின் உதவி உங்களுக்குக் கிடைக்கும். வியாபாரம், தொழில் ரீதியாக மேற்கொள்ளும் பயணங்கள் இலாபங்களைத் தரும்.

### கடகம்

உங்களுக்கு நண்பர்கள் மூலம் எதிர்பாராத பணவரவு ஏற்பட வாய்ப்புண்டு. உற்றார், உறவினர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். திருமணம், புது வீடு புகுவிழா போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும் காலம் இது. வேலைக்குச் செல்பவர்களுக்கு அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். எதிர்பார்த்த பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை கிடைக்கும். பெண்களுக்குப் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். புதிய தொழில், வியாபார முயற்சிகளை சற்று ஒதுக்கி வைப்பது நல்லது.

### சிம்மம்

பணியின் காரணமாக சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரும். உடல் நலம் நன்றாக இருக்கும். வருமானத்துக்கு எந்த ஒரு குறைவும் ஏற்படாது. புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் ஒரு சிலருக்கு உண்டாகும். காரமான உணவுகளை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஊழியர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உண்டாகும். சக போட்டியாளர்களைச் சமாளித்து வெற்றி பெறுவீர்கள்.

### கன்னி

அதிகமான வருமானம் இருக்கும். பிரிந்த தம்பதிகள் ஒன்றிணைவார்கள். வாரிசுகளால் பெருமை அடைவீர்கள். உறவினர்கள் நண்பர்களுடன் சிலருக்குப் பிணக்குகள் ஏற்படலாம். தொலைதூர புனிதத் தலங்களைத் தரிசிக்கும் பாக்கியம் ஒரு சிலருக்குக் கிடைக்கும். புதிய முயற்சிகள் சிறப்பாக வெற்றியடையும். தொழில், வியாபாரங்களை பெருக்க வங்கிக் கடனும் கிடைக்கும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பதவிகளும், நற்பெயரும் ஏற்படும்.

### துலாம்

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். பொருளாதார வசதிக்குக் குறைவு எதுவும் இருக்காது. கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் எழலாம். குழந்தைகள் வழியில் ஒரு சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். புதிய வேலைக்கு முயற்சி செய்து கொண்டு இருப்பவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் மட்டுமே இருக்கும். கலைத்துறையினர் கடுமையாக முயற்சி செய்தால் மட்டுமே நல்ல வாய்ப்புகளைப் பெற முடியும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்களுக்குப் பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும்.

### விருச்சிகம்

மனதில் குழப்ப நிலை இருக்கும். குடும்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதே பெரும் பாடாக இருக்கும். தேவையற்ற அலைச்சல்களால் உடல் மற்றும் மன சோர்வு உண்டாகும். பணியிடங்களில் சக பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். உயரதிகாரிகளின் பாராட்டுதல்களைப் பெறுவீர்கள். வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். குடும்பப் பெண்களுக்கு, உறவினர்களின் வருகையால் மனமகிழ்ச்சி உண்டாகும். வீட்டில் சுப காரியங்களுக்கான சுப செலவுகள் ஒரு சிலருக்கு ஏற்படும். ஒரு சிலர் ஆன்மீகப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

### தனுசு

வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் அவ்வப்போது பாதிக்கப்படக்கூடும். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு அதிகமாகும். வேலைச்சுமை அதிகரிக்கும். பணியிடங்களில் எல்லோரிடமும் இணக்கமான பழக்கம் வைத்துக் கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும். வியாபாரங்களில் சுமாரான நிலையே இருக்கும். என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். பெண்களுக்கு மனதில் உடல் மற்றும் மனச் சோர்வு ஏற்டும்.

### மகரம்

திருமண வயதில் இருப்பவர்களுக்கு நல்ல இடத்தில் திருமணம் நிச்சயமாகும். உறவினர்கள், நண்பர்கள் போன்றவர்களால் உங்களுக்கு பொருளாதார வரவு உண்டாகும். கூடுதல் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். வீட்டுப் பெண்களுக்கு அதிக பொறுப்புக்களால் மனதில் சோர்வும் உடல் அசதியும் உண்டாகும். தொழில் வியாபாரங்களில் இருப்பவர்களுக்கு நல்ல இலாபங்கள் இருக்கும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த ஊதிய உயர்வும், பதவி உயர்வும் கிடைக்கும்.

### கும்பம்

உங்களின் நீண்ட நாள் ஆசைகள், எண்ணங்கள் நிறைவேறும். உடல்நலத்தில் அவ்வப்போது சிறு சிறு பாதிப்புக்கள் ஏற்பட்டு நீங்கும். வீண் செலவுகளும் ஒரு சிலருக்கு ஏற்படும். அலுவலகத்தில் சுமுகமான சூழ்நிலையே காணப்படும். புதிய வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை அமையும். வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூல மாக முடியும். சக வியாபாரிகளுடன் இணக்கமான உறவு ஏற்படும்.

### மீனம்

உடலும் மனமும் உற்சாகத்துடன் இருக்கும். எதையும் சமாளிக்கும் மனோதிடம் உண்டாகும். குடும்பத்தில் குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப உறுப்பினர்கள் வழியில் மருத்துவ செலவு ஏற்படும். தொழில், வியாபாரங்களில் இருப்பவர்களுக்கு புது வாடிக்கையாளர்கள் அதிகம் கிடைக்கும் அமைப்பு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்கள் பொருள், புகழ் போன்றவற்றை சம்பாதிக்கக்கூடிய வாய்ப்புக்கள் தேடி வரும். தாமதித்து வந்த திருமண முயற்சிகள் வெற்றி பெறும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

மார்க்கெட்டிங் துறைக்குள் நுழைவது என்று முடிவு செய்து விட்டால் அலைவதற்கு அஞ்சக் கூடாது. சுட்டுப் பொசுக்கும் கத்திரி வெயில், அடிச்சு ஊத்தும் மழை, மூச்சு எடுக்க முடியாத தூசு என்று அனைத்தையும் தாங்க வேண்டும். பனி விழும் நிலம், பாலைவனம் என்று அனைத்திலும் பயணிக்க வேண்டும். எப்போதும் பயணம் செய்துகொண்டே இருக்க வேண்டும் என்ற காரணத்தால் ஆண்கள் கூட ஈடுபடக் கொஞ்சம் யோசிக்கிற மார்க்கெட்டிங் துறையை ஒரு மிடில் கிளாஸ் குடும்பத்தைச் சேர்ந்த வினிதா பாலி ஏறத்தாழ 35 வருடங்களுக்கு முன்னர் தேர்ந்தெடுத்துக் கடுமையாக உழைக்கத் தொடங்கியதன் பயன்தான் பிரித்தானியா பிஸ்கெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் (MD) பதவி. பயணம்....பயணம்....பயணம் இதுதான் அவள் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டு தலைவிதியையும் மாற்றி எழுதியது. திறமை இருந்தும் வெளியே வரத் தயங்கும் பெண்களுக்கு ஒரு முன்மாதிரி (ROLE MODEL) வினிதா பாலி. இன்றைக்கு அவளது ஆண்டு வருமானம் 7கோடி இந்திய ரூபாய்.




# மார்க்கெட்டிங்கால் உயர்ந்தவள்

நம் வீடு இருக்கும் தெருவிலுள்ள கடைக்குப்போய் பாண் வாங்க வேண்டுமானால் கூட வீட்டிலுள்ள பெண்களை அனுப்பாமல் ஆண் பிள்ளைகளை அனுப்பித்தான் வாங்கிக் கொள்கிறோம். குட்டையாக வெட்டப்பட்ட முடி, மெலிந்த தேகம், கண்களில் விழிம்பு இல்லாத (Rimless) கண்ணாடி மிக எளிமை அதுதான் வினிதா. மார்க்கெட்டிங்குக்காக ஊர் ஊராகப் பயணம் செய்யும் சூழல் உருவான போது போகிற இடங்களில் பெரிய ஹோட்டல்களோ தங்கு மிடங்களோ இருக்காது. சிலவேளைகளில் அவை கிடைத்தாலும் ஒரு பெண் என்ற காரணத்தால் சில இடங்களில் தங்குவது பாதுகாப்பு இல்லாததாகவும் இருந்தது. ஆனால், வினிதா அதற்கெல்லாம் கலங்கியதில்லை அப்படிப்பட்ட நேரங்களில் போகிற ஊர்களில் உறவினர் வீடோ அல்லது தெரிந்தவர்களின் வீடோ இருந்தால் அங்கே தங்கிக் கொள்வாள். அதுவும் கிடைக்காத பட்சத்தில் ஊரில் நல்லவர்களுக்கா பஞ்சம். பத்துப் பேரிடம் விசாரித்து ஒரு நல்லவர் வீட்டைக் கண்டுபிடித்து அங்கே தங்கிக் கொள்வாள். இது மிக ஆபத்தானது. 'உனக்கு எதுக்கு இந்த வேண்டாத வேலை' என்று அறிந்தவர் தெரிந்தவர் பலர் கோபப்பட்டனர். பயந்தால் வேலைக்கு ஆகுமா, 'நெஞ்சில் துணிவிருந்தால் போதும், நம்மை நாமே பாதுகாத்துக்கொண்டு வேலையைப் பார்க்க வேண்டியது தான்' என்பாள் புன்னகைத்தபடி.

இந்தியாவின் பெங்களூரில் 1955ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி பிறந்தாள் வினிதா பாலி. அப்பா பாதுகாப்புத் துறையில் வேலை பார்த்தார். தாயார் இசையில் அதீத நாட்டம் கொண்டவர். தனது இருபதாவது வயதில் டெல்லி பல்கலைக்கழகத்தின் பெண்கள் ஸ்ரீராம் கல்லூரியில் பொருளியல் பாடத்தில் (Economics) இளங்கலைப் பட்டதாரி ஆனவள் பின்னர் புகழ்பெற்ற மும்பைப் பல்கலைக்கழகத்தில் ஜம்னாலால் பஜாஜ் இன்ஸ்ரியூட் ஒவ் மனேஜ்மன் ஸ்ரடீஸில் (JAMNALAL BAJAJ INSTITUTE OF MANAGEMENT STUDIES) முதுநிலைமானிப் பட்டப் படிப்பை (MBA) முடித்தாள். றோட்ரரி இன்டனாஷனல் (ROTARY INTERNATIONAL) எனும் அமைப்பின் புலமைப்பரிசில் பெற்று அமெரிக்காவின் மிக்சிகன் ஸ்டேட் யுனிவசிற்றியில் (MICHIGAN STATE UNIVERSITY) பட்டப்பின் படிப்பை (Postgraduate Studies) முடித்தவள் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தில் கொஞ்சக் காலம் மருத்துவமனை உதவியாளராகப் பணிபுரிந்தாள். ஒரு வணிக நடவடிக்கைக்கு தொழில்நுட்ப அறிவுடையவர்களின் பங்களிப்பு எவ்வளவு தேவையோ அதே அளவுக்கு அதனை விரிவுபடுத்த மார்க்கெட்டிங் (சந்தைப்படுத்தல்) செய்பவர்களும் முக்கியம் என்பதை படிக்கும் போது நன்கு உணர்ந்து கொண்டாள். அதனால்தான் அவள் கவனம் மார்க்கெட்டிங் பக்கம் திரும்பியது.

'நான் காலூன்ற வேண்டியது அங்கு தான்' என்று முடிவெடுத்தாள். வாயில் திறந்திருந்தாலும் அதில் உள்ளே நுழைவது பெண் என்பதால் மிகவும் கடினமாக இருந்தது. எடுத்த முயற்சிகள் எண்ணிலடங்காதவை கடும் போராட்டத்தின் பின் டாடா குறூப் நிறுவனங்களில் ஒன்றான வோல்டாஸ் (VOLTAS) நிறுவனத்தில் முகாமைத்துவப் பயிற்சியாளராக (MANAGEMENT TRAINEE) சேர்ந்தாள். அங்குதான் பிஸ்னஸ்உக்குள் நெழிவுசுழிவுகளைப் பெற்றுக் கொண்டாள். வோல்டாஸில் தன்னுடைய திறமையைக் காட்டி முன்னேறிக்கொண்டிருந்தாலும் வினிதாவுக்கு பெரியளவில் பெயர் வேண்டிக்கொடுத்தது ரஸ்னா (RASNA) குளிர்பானத்தில் பிராண்ட் மனேஜராக (BRAND MANAGER) நியமிக்கப்பட்ட பின்புதான். ரஸ்னாவின் விற்பனையை உச்சத்துக்கு கொண்டு போனதில் பெரும்பங்கு வினிதாவையே சேரும்.

'பெண் என்பதைச் சொல்லி எனக்கு வசதியாக வேலை செய்யும் இடத்தில் சலுகைகளைப் பெற்றுக்கொண்டதில்லை. அது எனக்குப் பிடிக்காத ஒன்று ஒரே இடத்தில் தேங்கி விடுவதும் கூடாது. அது நம்மை புதுப்பிக்க உதவாது. நித்தம் நித்தம் புதுப் பயிற்சியாளர். பாதைகளை மாற்றும் புதுப் புது வண்டிகளில் பயணிக்க வேண்டும்' என்று சொல்பவள் 1980இல் பிரபல வணிக நிறுவனமான கட்பரியில் (Cadbury) இணைந்தாள். சாதாரணமாகக் கிடந்த சொக்லெட்டுக்கு தன் மார்க்கெட்டிங் மூளையால் மேலும் இனிப்புத் தடவ அவை தாறுமாறாய் விற்கத் தொடங்கின. புதிய வர்ணம் புதிய பொதி என்று நாளுக்கு நாள் அதன் மெருகு கூட மக்களும் அதன் வசமானார்கள்.

கவிஞர் பிறேம்ராஜ், கொழும்பு

# தடைகளைத் தகர்த்தெறி

## வரலாறு காணாத விஞ்ஞானி



உலகின் மிகப் பெரிய விருதுகளில் ஒன்றாகக் கருதப்படும் நோபல் பரிசை ஒரு முறை வெல்வதே அரிது. முதன்முறையாக நோபல் பரிசை இரண்டு முறை வென்றது மேரி கியூரி. புற்று நோய்ச் சிகிச்சைக்கு இவரின் கண்டுபிடிப்புக்கள் தான் ஆரம்பம். தன் வாழ்வை அறிவியலுக்காகவே அர்ப்பணித்த மேரி கியூரி, வரலாறு காணாத விஞ்ஞானி என்று போற்றப்படுகிறார்.

## தன்னம்பிக்கையின் அடையாளம்



தன்னம்பிக்கை, விடாமுயற்சி மற்றும் கற்றுக் கொள்ளும் ஆர்வம் ஆகிய பண்புகளைக் கொண்டவர் தான் ஹெலன் கெல்லர். புகழ் பெற்ற எழுத்தாளராக, பேச்சாளராகப் பின்னாட்களில் மாறியதன் காரணமும் அதுதான். பெண்களுக்கு மட்டுமல்ல, இந்த உலகில் சாதிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் ஹெலனின் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது புத்துணர்வைத் தரும். கண் பார்வையற்ற, கேட்கவும், பேசவும் இயலாத ஒரு மாற்றுத் திறனாளி தான் ஹெலன் கெல்லர்.

## வறுமையில் உயர்வு கண்டவள்



ஹாரி பொட்டர் (Harry Potter) நாவலையோ, அதைத் தழுவி எடுக்கப்பட்ட திரைப்படத்தையோ கேள்விப்படாதோர் இருக்க மாட்டார்கள். இதனைப் படைத்தவர் ஜே. கே. ரவுலிங் (J.K.Rowling). வறுமையில் சிக்கித் தவித்து, எழுதுவதற்கு ஓர் ஒழுங்கான இடம்கூடக் கிடைக்காமல் சிரமப்பட்டவர் இன்று எண்ணற்ற நிராகரிப்புகளைத் தாண்டி வெற்றிக் கொடியை நாட்டியுள்ளார்.

## கருணையின் மறு உருவம்



அன்னை தெரஸா என்றால் கருணையின் மறு உருவம். அமைதிக்கான நோபல் பரிசு மற்றும் இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா ஆகியவற்றைப் பெற்றவர். ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையால் புனிதராக்கப்பட்டவர்.

## இரும்புப் பெண்மணி



இந்திரா காந்தி இந்தியாவின் இரும்புப் பெண்மணி. இந்திய நாட்டின் பிரதமராக இருந்த போதும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும் எண்ணற்ற முடிவுகளை துணிச்சலாக எடுத்தவர்.

## முதல் பெண் பிரதமர்

உலகின் முதல் பெண் பிரதமர்



என்ற பெருமையைப் பெற்றவர் இலங்கையின் முன்னாள் பிரதமர் சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கவின் மனைவியான இவர் தனது கணவரின் அரசியல் சித்தாந்தங்களையும், குறிக்கோள்களையும் சாதிப்பதில் முக்கியமான பங்கொன்றையும் ஆற்றினார். 1959 இல் பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கவின் மரணத்தின் பின்னர், 1960 ஜூலை பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிகரமாக வழிநடத்தியதன் மூலம், இவர் விருப்பமின்றி தீவிரமான அரசியலில் பிரவேசித்தார். தேர்தலின் பின்னர், உலகின் முதலாவது பெண் பிரதமராகத் தெரிவானதன் மூலம் வரலாற்றில் இடம் பெற்றார். அவரது தீவிரமான அரசியல் வாழ்க்கை 50 வருடங்களுக்கு மேலாக நீடித்ததுடன், இக் காலத்தின் போது, மூன்று தடவைகள் (1960-65, 1970-77 மற்றும் 1994-2000) பிரதமராகவும், இரு தடவைகள் (1965-70, 1989-1994) எதிர்க்கட்சித் தலைவராகவும், அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் விளங்கினார்.

# ஜே.ஆர். தலைக்குள் கோழி முட்டை

## அடங்கா தமிழன்

அடிமைத் தமிழன்

**அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். சுந்தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகிறார் அடிமைத்தமிழன்.**





ஜே.ஆர்.ஜெயவர்த்தன சர்வதேச ரீதியில் புகழ் பெற்ற ஒரு இலங்கை இராஜதந்திரி. இலங்கையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ ஆட்சி முறையையும் ஜனாதிபதி ஆட்சி முறையையும் அறிமுகம் செய்தவர். இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்தவர். ஒரு முறை வரவு செலவுத்திட்டத்தை தயாரித்த போது ஒரு சைபரைக் கூடுதலாகப் போட்டு விட்டார் ஜே.ஆர். வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது சுந்தரலிங்கம் இது என்ன வரவு செலவுத்திட்டமா? எனக் கேள்வி எழுப்பினார். ஏன் என்ன பிரச்சினை என்றார் ஜே.ஆர். சுந்தரலிங்கம் தலையை கைகளால் சுற்றிக்காட்டி உனது தலைக்குள் கோழி முட்டை தான் இருக்கிறது. ஒரு சைபரைக் கூடுதலாகப் போட்டு விட்டாய் என்றார். ஜே.ஆர் தலை குனிந்தார்.

# காஃபிர்கள் என்று அழைக்கலாமா?

(05 ஆம் பக்கம் பார்க்க)

அப்படிப் புறக்கணிக்கப்படுமானால், அதன் மூலம் தம்மை அறியாமலேயே சக சமூகத்தவர் மத்தியில் விதைக்கப்படும் வெறுப்புக்கும் குரோத உணர்வுக்கும் காழ்ப்புணர்வுக்கும் யார் காரணம்? அதன் விளைவுகளை யார் எதிர்கொள்ள நேரும் என்பதைச் சிந்தித்து உணரக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும், அல்லாஹ் மனித மேம்பாட்டினைக் கருதி எல்லா மனிதருக்கும் பல்வேறுவிதமான அறிவாற்றல்களை, திறன்களை அள்ளி வழங்கியுள்ளான். ,தில் அவன் ,ன, மத, கலாசார, மொழி, பால், பிரதேச, நிற பேதங்களைப் பார்ப்பதில்லை. ஒருகாலத்தில் முஸ்லிம்கள் அறிவியலுக்குப் பெரும் பங்காற்றினார்கள் அதனால் முழு உலகும் பயனடைந்தது என்பது வரலாறு கூறும் உண்மை.

அவ்வாறே இன்றுவரை முஸ்லிம் அல்லாத அறிஞர்கள், கண்டுபிடிப்பாளர்களின் ஆராய்ச்சிகளின் விளைவுகளை முஸ்லிம்கள் உள்ளிட்டு முழு உலகமும் பயன்படுத்தி வருகின்றது என்பதே யதார்த்தம். ஆக, அறிவும் அதனை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சியும், கண்டுபிடிப்புகளும் பேதங்களுக்கு அப்பாற்பட்டவையாகும். முழு உலகுக்கும் பயன் தருபவையாகும். பல்வகை நிறுவனங்களின் பதவிகள், மருத்துவம், தாதிச்சேவை, உளவள ஆலோசனை, ஊடக சேவை என அன்றாடம் நாம் பயன்கொள்ளும் எல்லாமும் ,தில் அடங்கும்.

ஆகவே, இதுபோன்ற சேவை நுகர்வின் போது, யார் நிபுணத்துவம் உடையவர் என்பதும், யாருக்கு குறித்த விடயத்தில் சிறப்புத் தேர்ச்சியும் பயிற்சியும் அனுபவமும் இருக்கின்றன என்பதுமே கருத்திற் கொள்ளப்பட வேண்டுமே தவிர, அவர் முஸ்லிமா, முஸ்லிம் இல்லையா என்பதையிட்டு அலட்டிக் கொள்ளத் தேவையே இல்லை. முஸ்லிம்களில் இருந்தும் அவ்வாறான நிபுணர்கள் உருவாக வேண்டும் என்று ஆசைப்படுவது தவறல்ல. ஆனால், முஸ்லிம் அல்லாதோர் இதில் உள்வாங்கப்படுகின்றார்களே என்று பதற்றம் அடைவதோ கவலை கொள்வதோ எந்த வகையிலும் அறிவுபூர்வமானதல்ல. அவ்வாறு கருதுவதுதான் உண்மையில் துவேச மனப்பாங்காகும்.

இலங்கையின் முப்பது வருட கால யுத்த நெருப்பின் 'பொறி' அந்த இடத்திலிருந்தே தொடங்கியது என்பதையும், இஸ்லாம் ஒருபோதும் துவேசத்தை விதைக்கும் சமயம் அல்ல என்பதையும் நாம் ஆழ மனங்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவ்வாறே, நாட்டினதும் ஊரினதும் நலனைக் கருத்திற்கொண்டு, பொதுவான சமூகப் பணிகளில் பேதங்களுக்கு அப்பால் உரிய வளவாளர்களோடு இணைந்து பணியாற்ற நாம் முன்வரவேண்டும். இது குறித்த விழிப்புணர்வு அண்மைக்காலமாக நம் சமூகத்தில் மேலெழுந்து தொடர்வது மனதுக்கு ஆறுதல் அளிக்கும் ஓர் அம்சமாகும்.

ஆக, முஸ்லிம் அல்லாதோரும் நேசிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய, நம்மைப் போன்ற சகமனிதர்களே என்ற உணர்வை ஆழமாக ஊட்ட வேண்டியது நம்முடைய ஆலிம்களின்ஃ ஆசிரியர்களின் கடமையாகும். அதன் மூலமே இந்நாட்டில் சமூகங்களுக்கு இடையிலான சகவாழ்வுக்கு உரமூட்ட முடியும். இலங்கை போன்ற ஒரு நாட்டில், முஸ்லிம் அல்லாதோரைக் குறிப்பிடுவதற்கு 'காஃபிர்' என்ற பதப்பிரயோகம் எந்த வகையிலுமே பொருத்தமற்றது என்பதை முதலில் ஆலிம்கள்ஃ ஆசிரியர்கள் உணர்ந்து தெளிவார்கள் என்றால் மட்டுமே அவர்களால், இது காலம் வரையிலும் படித்தவர் - பாமரர் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால், முஸ்லிம் மக்கள் மத்தியில் முஸ்லிம் அல்லாதவர்களைக் 'காஃபிர்' என்று அழைத்து, அவர்களை இரண்டாம் தரப்பினராகவோ தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகவோ கருதிவரும் மனப்பாங்கு படிப்படியாக மாற்றமுறும்.

அப்படி இல்லாத பட்சத்தில், நாம் பொதுச் சமூக நீரோட்டத்திலிருந்து விலகி அந்நியப்பட்டு, தனிமைப்படுத்தப்படுவோம். அது எந்த வகையிலும் பாதுகாப்பானதல்ல என்பதோடு, அல்லாஹ் தந்த பிரதிநிதித்துவக் கடமைக்குப் பொருத்தமானதுமல்ல என்பதை மனங்கொள்வோம். இஸ்லாம் என்பது அன்பின் மார்க்கம். மகத்தான அருளின் மார்க்கம். அதனை அன்பினாலும் அருளினாலுமே பூரணப்படுத்த நம்முடைய பணியினை ஆற்றுவோம். அதற்கான முதலடியாக, நம்முடைய மனங்களில் சக சமூகத்தவர் மீதான துவேச உணர்வு முளைவிடாமல் காப்போம். சமயஃ ,னப்பற்றுக்கும், சமயஃ இன வெறிக்கும் ,டையிலான மெல்லிய ஆனால், ஆழமான பிரிகோட்டை ஐயம் திரிபறத் தெளிந்துணர்வோம். ■

# புத்த தர்மம் இதுதானோ?

(03 ஆம் பக்கம் தொடர்ச்சி)

அத்துடன், நாட்டில் எங்கே கலவரம் என்றாலும் உடனடியாக இன்ஸ்டக்ராமில் ஓடிவந்து அமைதியைக்கோரும் அவரது நல்லிணக்க மனசு சிங்கள சிப்பாய்களுக்காகத்தான் நேற்றும் கூட இரங்கியிருக்கிறது. முன்னாள் போராளிகள் வேண்டாம். ஆனால் அங்கு அழுது கொண்டிருக்கும் ஒரு பொதுமகனைப் பற்றிக்கூட சிந்திக்கவுமில்லை. சிந்திக்க விரும்பவுமில்லை.

இங்கு சொல்லவந்த விடயம் என்னவென்றால், இதுதான் சிங்களம். இது தான் பேரினவாத மனோநிலை. நாற்பது வருடப்போராட்டத்துக்குப் பின்னரும் சிங்கள தேசம் தமிழர்களது உணர்வுகளைப் புரிந்து வைத்திருக்கும் சீத்துவம் இதுதான்.

இப்படிப்பட்டதொரு தரப்புடன், முஸ்லிம் சகோதரர்கள் பலர் நேற்று வெசாக் கொண்டாடி அவர்களுடன் மத நல்லிணக்கம் பாராட்டியிருக்கிறார்கள். தாங்கள் ஒன்றும் சஹ்ரான் ஆதரவாளர்களில்லை, சங்கக்கார ஆதரவாளர்கள்தான் என்று அவர்களது கால்களில் விழுவதற்கு பெரும் பிரயத்தனம் செய்திருக்கிறார்கள். தங்கள் மொழிபேசும் இனமொன்று கூப்பிடுதூரத்தில் பத்து வருடங்களுக்கு முன்னர் அபயக் குரல் எழுப்பிச்செத்துப்போனதே என்ற எந்த உயர்வும் இல்லாமல், இவர்களது வீடுகளுக்குள் வாள்களை தேடிக்கொண்டிருப்பவர்களுடன் சேர்ந்து தாங்களும் 'இலங்கையர்கள்தான்' என்று 'நமோ நமோ தாயே' பாடிவிட்டு வந்திருக்கிறார்கள். முள்ளிவாய்க்கால் இறந்தநாளிலும் பார்க்க புத்தரின் பிறந்தநாள்தான் தமக்கு எப்போதும் பெரிதென்றும் பறைசாற்றியிருக்கிறார்கள்.

இவை எல்லாவற்றையும்விட, ஈஸ்டர் குண்டுவெடிப்புக்களுக்குப் பிறகு வெறும் மண்டபம் எது கிடைத்தாலும் அதற்குள் ஓடிப்போய் மேசையைப்போட்டுக்கொண்டு ஊடகவியலாளர் மாநாடு நடத்திய ஒரு முஸ்லிம் அரசியல்வாதியோ கட்சியோகூட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குறித்து ஒரு அறிக்கைகூட விடவில்லை. ஈஸ்டர்நாள் தாக்குதல் நடந்தபோது தமிழர் தரப்பு நாடாளுமன்றத்தில் நின்று இதே முஸ்லிம் அரசியல்த் தரப்புடன் கைகோர்த்தது. தாக்குதல்களுக்கான காரணத்தை ஒரு சமூகத்தின் மீது சுமத்திவிடக்கூடாது என்று இந்த முஸ்லிம் அரசியல்த்தரப்பு முண்டுகொடுக்கும் அரசியல்த்தரப்பிடமே வேண்டுகோள்விட்டது.

ஒரு சுடரேற்றுவதற்கு நெஞ்சில் இடமில்லாத சமூகம் வாழும் நாட்டில் தான் தமிழர்கள் சுதந்திரத்துக்காக ஏங்குகிறார்கள் என்று எண்ணும்போது நெஞ்சம் வெடித்துவிடும்போலுள்ளது. நல்லிணக்கம் என்ற சொல்லின் அர்த்தம் தெரியாவிட்டாலும் பரவாயில்லை. அதனை புரிந்துகொள்ளக்கூட முயற்சி எடுக்காமல் எத்தனை வெசாக் கூடுகள் கட்டியும் பயனில்லை. கடைசியில் கலண்டரில் மத நல்லிணக்கம் தேடிய கதையாகத்தான் போய்முடியும்.

இந்த விண்ணப்பங்கூட, சங்கக்கார போன்றவர்களுக்கு அல்ல. அவரெல்லாம் நல்லிணக்கம் என்பதை மலிங்க போடும் ஜோக்கர்போல பார்ப்பவர். ஒரே வீச்சில் ஐ.பி.எல் கிண்ணம்போல தூக்கிக்கொண்டு வந்துவிடலாம் என்று எண்ணுபவர். ஆனால், எங்கள் மொழி பேசுகின்றவர்களால்க்கூட எங்களின் வலிகளை புரிந்துகொள்ளமுடியாவிட்டால், நீங்கள் கதறும்போது யாருங்கள் வாசல் வருவார்? அவர்கள் எப்போதும் வாள்தேடத்தான் வருவார்கள் புரிந்து கொள்ளுங்கள்! ■

# அகதிகளின் கதி...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் ஆகிய நாம் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருந்து வருகின்றோம்.

### தேசிய கிறிஸ்வதப் பேரவை (NCC)

உண்மையான ஒரு சில கிறிஸ்தவத் தலைவர்களின் அணி (தமது பெயர்களுக்கும் அப்பால் உண்மையில் தலைவர்களாக இருப்பவர்களை நான் குறிப்பிடுகின்றேன்.) இந்நெருக்கடி தொடர்பாக ஆற்றிய எதிர்வினை, ஆகக்குறைந்தது இப்பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிட்டும் வரையில் இந்த அகதிகளை நம்மத்தியில் மீளக் குடியமர்த்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு திடசங்கற்பத்துடன் உதவ வேண்டும் என்பதாகவே இருந்து வந்தது. தேசிய கிறிஸ்தவப் பேரவையைச் சேர்ந்த தேசிய தலைவர்களின் குழுவில் (யாழ்ப்பாண அங்கிலிக்கன் அதிமேற்றிராணியரான) அருட்தந்தை சாம் பொன்னையா ஆண்டகை அவர்களும் ஒருவராக இருந்து வந்தார். அவர் இந்த அகதிகளை கிறிஸ்தவத் தொண்டர்களின் வீடுகளில் தங்க வைப்பதற்கு முயற்சித்து வருகின்றார். சிறு குழுக்களுக்கு, யாழ்ப்பாணத்தில் சுமார் 10 குடும்பங்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களினூடாக இந்த அகதிகளின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் எமது கடமையை நிறைவேற்றி வைக்கமுடியும் எனப் பொன்னையா ஆண்டகை அவர்கள் கருதுகின்றார்.

### யாழ்ப்பாணத்தில் இறுகும் இராணுவப்பிடி

பொதுவாக உரிமைகள் ஒடுக்கப்பட்டிருக்கும் பின்னணியில், இராணுவத்தின் 513ஆவது படையணியைச் சேர்ந்த சுமார் 300 இராணுவ வீரர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசித்து, அங்குள்ள ஒவ்வொரு கட்டடத்தையும் சோதனையிடத் தொடங்கினார்கள். மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் வே.பிரபாகரனின் ஒரு புகைப்படம் மற்றும் ஈழ வரைபடம் ஒன்று என்பன கண்டுபிடிக்கப்பட்டதுடன், வேறோரு இடத்தில் (பொதுவாக இராணுவத்தினரால் பயன்படுத்தப்படும் பொருட்கள் எனக் கருதப்படும்) ஒரு சோடி தொலைநோக்கிகள் மற்றும் சப்பாத்துக்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன. அதனையடுத்து, மாணவ சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டார்கள். தற்பொழுது பல்கலைக்கழத்துக்குப் பிரவேசிக்கும் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இவ்விதம் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் எம் மீதான தமது பிடியை இறுக்குவதற்கு இராணுவத்துக்கு ஒரு வாய்ப்பாக இருந்து வந்துள்ளது.

இறுதியில் இது தொடர்பாக தலையிட்ட சுமந்திரன், பிரபாகரனின் புகைப்படத்தை அல்லது ஈழ வரைபடத்தை வைத்திருப்பது ஒரு குற்றச்செயலாக இருந்து வரவில்லை என்ற பின்னணியில், அவர்கள் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகாமல் இருக்க முடியாது என்ற நிலைப்பாட்டுக்கு வந்து, அவ்விதம் கைவிடப்பட்ட மாணவர் சங்கத் தலைவர்கள் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுவதற்கு முடிவு செய்திருந்தார்.

### களத்தில் குதிக்கிறார் விக்கி

கைது செய்யப்பட்ட இந்த மாணவர்களுக்கு எதிராக நான்கு சட்டங்களின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச் சட்டம், பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்கள், சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச சமவாயம் மற்றும் ஏப்ரல் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அவசரகால ஒழுங்கு விதிகள் என்பனவே அச்சட்டங்களாகும். யாழ்ப்பாண மஜிஸ்ட்ரேட் நீதவானின் கட்டளையின் பிரகாரம் அவர்கள் மே 16ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடந்த வாரம் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த மாணவர் சங்கத் தலைவர்களின் பரிதாப நிலையை தனக்குச் சாதகமான விதத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கென முன்னாள் வட மாகாண முதலமைச்சர் திரு. சீ.வி. விக்னேஸ்வரன் அப்பொழுது களத்தில் குதித்தார். அவசரகால ஒழுங்குவிதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காதிருந்தமைக்காக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குறை கூறியிருந்தார். மேலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டாம் என இராணுவத்திடம் கேட்டுக்கொண்டமை குறித்தும் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மே 3ஆம் திகதி தமிழில் ஓர் அறிக்கையை வெளியிட்டது. இந்த ஒழுங்குவிதிகள் இல்லாத நிலையிலும் கூட இந்த மாணவர்கள் இருவருக்கும் எதிராக ஏனைய மூன்று சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருக்க முடியும் என அந்த அறிக்கையில் எடுத்து விளக்கப்பட்டிருந்து. தாம் அவசரகால ஒழுங்கு விதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பது உண்மை என்றும், ஆனால், அந்த ஒழுங்குவிதிகளின் கீழ் அதன் பின்னர் நிறைவேற்றப்பட்ட எதேச்சதிகார சட்டங்களுக்கு தாம் எதிர்ப்புத் தெரிவித்திருந்ததாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குறிப்பிட்டிருந்து. மாணவர் சங்கத் தலைவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு அந்த ஒழுங்குவிதிகளே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற வேண்டாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இராணுவத்திடம் கேட்டுக் கொண்டிருந்தது என்ற குற்றச்சாட்டுக்கும் அந்த அறிக்கையில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்விதம் வேண்டுகோள் விடுத்த ஒரேயொருவர், புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளராக இருந்து காணாமலாக்கப்பட்ட எழிலனின் மனைவியான முன்னாள் வட மாகாண அமைச்சர் திருமதி. அனந்தி சசிதரன் மட்டுமே என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மிக முக்கியமாக அனந்தி சசிதரன் திரு. விக்னேஸ்வரன் அவர்களின் ஒரு சகாவாக இருந்து வருவதுடன், அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சீர்குலைப்பதற்கு முயற்சித்து வருகின்றார் என அக்கட்சியால் கருதப்படுகின்றது.

(குறிப்பு: கிளிநொச்சியில் இடம்பெற்ற மே தின நிகழ்வு ஒன்றின் போது இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா பின்வருமாறு பேசியதாக 2019 மே 03ஆம் திகதியிட்ட 'டெய்லி மிரர்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. "மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, இராணுவம் மற்றும் பொலிஸ் ஆகிய தரப்புக்களால் வழங்கப்படும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும்." எனினும், இந்தப் பேச்சை நேரடியாகக் கேட்ட நிருபர் ஒருவர் சேனாதிராஜா உண்மையில் தமிழில் கூறிய விடயம் "மேலும் அதிகளவிலான பாதுகாப்பைக் கோரவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாங்கள் இருந்து வருகின்றோம். ஆனால், நாங்கள் அப்படி கோர மாட்டோம்" என்பதாகும். இந்தப் பேச்சு தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றினால் திரிக்கப்பட்டுள்ளது என்றும், பேச்சின் இறுதிப் பிரிவு அதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிருபர் குறிப்பிடுகின்றார். இந்த நிலையில், 'டெய்லி மிரர்' போன்ற பத்திரிகைகளே தவறாக வழி நடத்தப்பட்டுள்ளன. உண்மையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையில் ஏற்படும் அத்தகைய ஒரு பாரிய மாற்றத்தை ஒரு சாதாரண மேடைப் பேச்சின் மூலம் கொண்டுவரவும் முடியாது).

### இராணுவ சர்வாதிகாரம் ஒன்றை நோக்கிய நகர்வு?

இப்பொழுது நாங்கள் எந்தத் திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றோம்? நிச்சயமாக குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற முடியும் என இந்தியாவால் விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கைகள், இராணுவம் ஒரு பாரிய வகிபங்கினை வகிப்பதற்கான ஒரு சாக்காகப் பயன்படுத்துவதற்கென, குழப்ப நிலை ஒன்றை உருவாக்குவதற்கென புறக்கணிக்கப்பட்டனவா? முன்னைய அரசாங்கம் முஸ்லிம் மற்றும் பௌத்த தீவிரவாதிகளுக்கு பணம் செலுத்தி வந்தது என அரசாங்கப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன கூறி வரும் விடயம் தொடர்பான விளக்கம் என்ன? அமைதியாக செயற்பட்டு வரும் ஒரு பல்கலைக்கழகத்தில் மீண்டும் குழப்பங்களை தூண்டுவதற்கு முயற்சிக்கும் விதத்தில் இராணுவம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்துக்குள் பிரவேசித்தது ஏன்? போன்ற பல கேள்விகள் எம்முள்.

இராணுவம் நிலை கொண்டிருக்கும் தமிழர்களின் நிலப் பரப்புக்களிலிருந்து முற்றாக வெளியேற வேண்டுமென அரசாங்கம் இராணுவத்திடம் கேட்டுக் கொண்டாலும் கூட, இராணுவம் அவ்வாறு செய்யப் போவதில்லை என அண்மையில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்திருந்தார். இந்தக் கருத்திலேயே இக்கேள்விகளுக்கான பதில் பொதிந்திருக்கின்றது. அது தேசத் துரோகமாக இருந்து வருவதுடன், எமது அரசியல் யாப்பை மீறும் ஒரு செயலாகவும் உள்ளது. அதற்கு எதிராக எந்த ஒழுக்காற்று நடவடிக்கையையும் எடுக்க முடியாதா? இது அராஜகமாகும்அராஜகம் என்பது ஒரு சர்வாதிகார ஆட்சியின் தொடக்கமாகும். இராணுவம் நாட்டைக் கைப்பற்றிக் கொள்வதற்கு வழிசமைக்கும் விதத்தில் அராஜகத்தின் விதைகள் வேண்டு மென்றே தூவப்பட்டு வருகின்றனவா?

---

# ஒப்பிரேஷன் நோஆ

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

5 பீரங்கிப் படகுகளுக்கும் தேவையான எரிபொருள் நிரப்பப்பட்டதுடன் 8 நாட்களுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய உணவுப் பொருட்களும் படகுகளுக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டன. ஒரே நேரத்தில் இவ்வளவு பெருந்தொகையான எரிபொருள் நிரப்பப்பட்டால் படகுகள் நீண்ட பயணத்துக்கு தயார்ப்படுத்தப்படுகின்றது என்ற சந்தேகம் ஏற்பட்டு நிலைமையை பாதகமாக்கிவிடும் என்பதால் 5 தொன் கொள்ளளவு கூடிய வாகனத்தின் மூலம் எரிபொருள் நிரப்பும் பணியை மேற்கொள்ளும்படி நடவடிக்கைகளுக்கான தலைமைத் தளபதி றினற் (RINAT) பணித்தார். கால் மில்லியன் லீற்றர் எரிபொருள் சிறிய சிறிய கொள்கலன்களில் நிரப்பி கடத்தப்பட்டு படகுகளின் கீழ்த்தட்டுகளில் மறைத்து வைக்கப்பட்டன. டிசெம்பர் 24ஆம் திகதி மதியத்துக்கு முன்னர் தேவையான எரிபொருட்கள் நிரப்பப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டது மற்றொரு வெற்றி நடவடிக்கையாக இஸ்ரேலிய அதிகாரிகள் உணர்ந்து கொண்டனர். இதேவேளை விநியோக அதிகாரி வேண்டிய உணவுப்பொருட்களை உள்ளூர் பலசரக்குக் கடைகளில் வாங்கிவந்து படகுகளுக்குள் சேமித்துவிட்டார். சந்தேகம் ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஒவ்வொரு முறையும் சிறிய தொகைகளில் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

புறப்படுவதற்காக ஒரேநேரத்தில் படகுகளின் இயந்திரங்களை இயக்க ஆரம்பித்தால் பலமான ஒலியை எழுப்பி பிரெஞ்சு அதிகாரிகளை உஷார்ப்படுத்தி விடும் என்பதற்காக நடவடிக்கைக்கான தளபதி கப்டன் ஹாதர் கிம்கி (CAPTEIN KATHAR KIMHHI) ஒவ்வொருநாளும் இரவு வேளைகளில் படகின் இயந்திரங்களை இயங்க வைக்கும்படி ஒவ்வொரு படகின் மாலுமிகளுக்கும் கட்டளை இட்டிருந்தார். இதனால் அப்பகுதி மக்களுக்கும் அந்த ஒலி வழக்கமான ஒலியாக உணரவைக்கப்பட்டிருந்தது. பீரங்கிப் படகுகளின் இரைச்சல் அதிகமாக இருந்ததால் அப்பகுதி மக்கள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர். அதற்கமைய பொலிஸாரால் படகுகள் பார்வையிடப்பட்டு விளக்கம் கோரப்பட்டிருந்தது. துறைமுக மின் விநியோகத்தில் இருந்து கிடைக்கப்பெறும் மின்வலு போதாமையினால் படகுகளின் இயந்திரங்களை இயக்கவேண்டிய நிலை என இஸ்ரேல் தரப்பினால் விளக்கம் அளிக்கப்பட்டு பிரெஞ்சு அதிகாரிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பீரங்கிப்படகுகள் ஐந்தும் கிறிஸ்மஸ் இரவில் புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இஸ்ரேலிய மாலுமிகள் மேற்கொண்டிருந்தனர். மேலதிகமான 80 இஸ்ரேலிய மாலுமிகளும் இரகசியமான முறையில் கொண்டுவரப்பட்டு பீரங்கிப் படகுகளின் கீழ்த்தட்டுகளில் மறைத்து வைக்கப்பட்டனர்.

பிஸ்கே (BISCAY) குடாப் பகுதியினூடாகப் பயணிக்கும்போது மோசமான குளிர்கால காலநிலையால் படகுகள் மூழ்கிவிடுமோ என்ற பயமும் இஸ்ரேலியர்களிடம் இருந்தது. இந்தக்குழுவில் வானிலை அவதானிப்பாளர் ஒருவரும் இணைக்கப்பட்டிருந்தார். அவர் பிரித்தானிய, பிரெஞ்சு, ஸ்பானிய வானிலைகளை தொடர்ச்சியாக அவதானித்து நிலைமைகளை உடனுக்குடன் மாலுமிகளுக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருந்தது இஸ்ரேலியர்களின் கடற்பயணத்துக்கு பெரும் உதவியாக இருந்தது.

### பயணத்துக்கான இறுதி நடவடிக்கை

புறப்படுவதற்கான நேரம் 1969 டிசெம்பர் 24ஆம் திகதி 20.30 மணி எனத்திட்டமிடப்பட்டு மாலுமிகளுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது. 19.30 மணிக்கு சகல மாலுமிகளும் அவரவர் படகுகளுக்குள் ஏற்றப்பட்டு புறப்படுவதற்கு தயார்நிலைப் படுத்தப்பட்டனர். கடுமையான காற்று வீசியதால் புறப்படும் நேரம் 22.30 மணிக்கு பின்போடப்பட்டது. சீரற்ற காலநிலை தொடர்ந்ததால் 22.30 மணிக்கும் படகுகள் புறப்படவில்லை. ஆனாலும் உடனடியாகப் புறப்படுமாறு இஸ்ரேலில் இருந்து கப்டன் ஹாதர் கிம்கிக்கு இரகசியச் செய்தி அனுப்பப்பட்டது. எனினும் தாமதித்துப் புறப்படுவது என்னும் முடிவில் கப்டன் திடமாக இருந்தார். BBCயின் வானிலைச் செய்திகளில் இன்னும் 2 மணி நேரத்தில் காற்றின் வேகம் குறைந்து காலநிலை சீராக இருக்குமென குறிப்பிடப்பட்டிருந்ததை வானிலை அவதானிப்பாளர் கப்டனிடம் தெரியப்படுத்தினார்.

### அமைதியாக பீரங்கிப்படகுகளின் பயணம் ஆரம்பம்

1969 டிசம்பர் 25ம் திகதி அதி காலை 02.30 மணிக்கு பீரங்கிப் படகுகள் சேர் போக் (CHERBOURG) நகரை விட்டு பறப்பட்டு ஆழ் கடலை நோக்கி மெதுவாக தமது பயணத்தை ஆரம்பித்தன. எந்த சந்தேகங்களையும் ஏற்படுத்தாது ஆங்கிலக் கால்வாய் ஊடாக தமது பயணத்தை தொடர்ந்தனர். நீண்ட நேரமாக பிரெஞ்சு அதிகாரிகள் படகுகளின் நிலைபற்றி அவதானிக்கவில்லை. அப்பகுதிக்கு சென்ற ஊடகவியலாளர் ஒருவரினால் படகுகள் எவையும் காணப்படவில்லை என உணரப்பட்டது. அந்த ஊடகவியலாளரினால் உடனடியாக BBCசெய்தி ஸ்தாபனத்திற்கு செய்தி வழங்கப்பட்டது. BBC செய்தி நிறுவனமும் உடனடியாக செய்திகளை வெளியிட்டு உலகை அதிர்ச்சியில் உறைய வைத்தது. செய்திகளை அறிந்து கொண்ட பிரெஞ்சு அதிகாரிகள் மிகுந்த அதிர்ச்சியுடன் படகுகள் இருந்த இடத்திற்கு உடனடியாக விரைந்தனர். அங்கு எந்தப் படகுகளும் காணப்படவில்லை. பிரெஞ்சு அதிகாரிகள் வருவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்னரே படகுகள் புறப்பட்டுவிட்டன என்பதை பிரெஞ்சு அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை. படகுகள் இஸ்ரேலியர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என பிரெஞ்சு அதிகாரிகள் சிந்திக்கத் தொடங்கினர்.

தொலைக்காட்சிக்குழு ஒன்று படகு கள் நோர்வே நோக்கிச் செல்லலாம் என ஊகித்து வடகடல் பகுதி நோக்கி விரைந்தது. ஆனால் படகுகள் மத்திய தரைக்கடலுக்குள் நுழைவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. அதுவே உண்மையாகவும் இருந்தது.

### மத்தியதரைக் கடலுக்குள் நுழைவு

படகுகள் பிஸ்கே (BISCAY) குடாவைக் க்டந்து தெற்கு நோக்கி மத்தியதரைக்கடலை அண்மித்ததிலிருந்து இஸ்ரேலின் கடற்படைக் கப்பல்கள் தமது உதவியை வழங்கத் தொடங்கின. கிப் றல்ரர் (GIBRALTAR) பகுதியில் எம்.வி. லியா (MV LEA) என்ற கப்பலில் இருந்து எரிபொருள் வழங்கும்போது மாலுமி ஒருவரின் தவறினால் சிறிதளவு நீரும் சேர்ந்து எரிபொருள் தாங்கியினுள் சென்றுவிட்டது. அது நன்னீரா அல்லது கடல் நீரா என்று உடனடியாகப் புரியவில்லை. கடல்நீராக இருந்தால் படகின் இயந்தி ரங்களை மோசமாகப் பாதித்துவிடும். மாலுமி ஒருவரிடம் எரிபொருளை ருசித்துப் பார்க்கும்படி கப்டன் றினாட் வேண்டியிருந்தார். அதிஷ்டவசமாக அது கடல்நீர் அல்ல என்று உணரப்பட்டது.

இஸ்ரேலிய பீரங்கிப் படகுகள் கிப்ரல் ரறைக் (GIBRALTAR) ஐக் கடந்து மத்தியதரைக் கடலிற்குள் நுழையும்போது பிரித்தா னிய அவதானிப்பு நிலையத்திலிருந்து படகுகளை அடையாளப்படுத்துமாறு கோரிக்கை விடப்பட்டது. அவதானிப்பு நிலையத்திலிருந்த பிரித்தானிய அதிகாரி ஒருவர் சேர் வோக் (CHERVOURG) இலிருந்து படகுகளை இஸ்ரேலியர் கடத்திவிட்டனர் என்பதை ஊடகங்கள் வாயிலாக அறிந்திருந்தார். கடத்தப்பட்ட படகுகள்தான் இவையெனவும் இஸ்ரேலை நோக்கி செலுத்தப்படுகின்றன என்பதையும் சரியாக ஊகித்துக்கொண்ட அந்த பிரித்தானிய அதிகாரி BON VOYAGE (நல்ல பயணம்) என்ற செய்தியை இஸ்ரேலியப் படகுகளுக்கு அனுப்பியிருந்தார். தாம் யார், எங்கு செல்கிறோம் என்பதை அந்த அதிகாரி புரிந்து கொண்டுவிட்டார் என்பதை உணர்ந்துகொண்டு தமது பயணத்தைத் தொடர்ந்தன இஸ்ரேலியப் படகுகள்.

### இஸ்ரேலிய போர்விமானங்கள் பீரங்கிப் படகுகளுக்கு பாதுகாப்பு

பிரான்சில் இருந்து புறப்பட்ட இஸ்ரேலியப் படகுகள் மத்திய தரைக்கடல் ஊடாக வட ஆபிரிக்காவின் கரையை அண்டியதாக இஸ்ரேல் நோக்கிச் செல்வதாக தொலைக்காட்சி நிலையமொன்று செய்தி வெளியிட்டது. இதேவேளை இஸ்ரேலிய விமானப்படைக்குச் சொந்தமான F-4 PHANTOM போர் விமானங்கள் தாழ்வாகப் பறந்து பீரங்கிப் படகுகளுக்குப் பாதுகாப்பு வழங்கி அழைத்துச் சென்றன.

பிரான்சின் பாதுகாப்பு அமைச்சர் MICHEL BEBRE இஸ்ரேலியப் படகுகளை தாக்கி மூழ்கடிக்குமாறு தமது அதிகாரிகளுக்கு கட்டளையிட்டார். பொறுப் பாக இருந்த உயர் அதிகாரி இந்தக் கட்டளைகளை ஏற்காமல் தான் பதவி யை இராஜினாமா செய்வதாக பதிலளித்தார். மேலும் விளைவுகள் மோசமாகாமல் இருக்க பிரான்ஸ் பிரதமர் அந்தக்கட்டளையை வாபஸ் பெற்றுக்கொள்கிறார். பிரெஞ்சு அரசாங்கம் மிகவும் சீற்றம் அடைந்தாலும் எதுவும் செய்ய முடியாத நிலை என்பதை உணர்ந்து கொள்கிறது. பிரான்சின் வெளிவிவகார அமைச்சர் இஸ்ரேலில் இந்தப் படகுகள் காணப்படுமானால் விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்று எச்சரிக்கிறார். இத்தனை சவால்களுக்கும் மத்தியிலும் 5825 கிலோமீற்றர்(3145 கடல் மைல்கள்) தூரத்தைக் கடந்து இஸ்ரேலின் HAIFA நகரில் உள்ள KISHON கப்பல் கட்டுமானத்துறைமுகத்துக்கு டிசம்பர் 31ஆம் திகதி மக்களின் பெரும் உற்சாகமான வரவேற்புடன் 5 பீரங்கிப் படகுகளும் வெற்றிகரமாக வந்தடைந்தன. இஸ்ரேலின் உளவுப்பிரிவான மொசாட்டின் மற்றொரு துணிகரமான இராணுவ நடவடிக்கையாக ஒப்பரேஷன் நோ ஆ(OPPERATION NOA) வர்ணிக்கப்படுகிறது.




கேள்வி: செவ்வாய்க்கிரகத்தைப் பற்றி நாசா அடிக்கடி ஏதோ சொல்லுதே? அந்தக் கிரகத்தைப் பற்றி ஏதாவது தெரியுமா கைப்புள்ள?

**கே,சந்திரன், வல்வெட்டித்துறை**

**பதில்:** பெயர் - செவ்வாய், தூரம் - பூமியிலிருந்து 14 கோடி கிலோ மீற்றர், தொழில் - தோசம் என்று திருமணத்தை நிறுத்துவது. இவ்வளவுதான் எனக்குத் தெரிந்தது.

கேள்வி: 'கல்யாணத்துக்குப் பிறகு காதலிக்கிறதுதான் நல்லது' என்று சொல்கிறார்களே அது கரேக்டா கைப்புள்ள?

**எம்,வேலாயுதம், புன்னாலைக்கட்டுவன்**

**பதில்:** அதுசரி.... அதுக்குப் பொண்டாட்டி ஒத்துக்குவாளா!

கேள்வி: ஐகஜாலக்கில்லாடி என்றால் யார்? கைப்புள்ள உன்னமாதிரியா?

**எஸ்.இனியவன், நல்லூர்**

**பதில்:** அந்த பஸ் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. நல்ல கூட்டம். திடீரென யாரோ குறுக்கே வர டிரைவர் பிறேக்கை சட்டென்று அழுத்தினார். அந்த அதிர்ச்சியில் கூட்டத்தில் நின்றுகொண்டிருந்த இளைஞன் தடுமாறி சீற்றில் உட்கார்ந்திருந்த இளம் பெண் மீது விழுந்தான். விழுந்த வேகத்தில் இருவரது இதழ்களும் ஒன்றை ஒன்று ஒட்டிக்கொண்டன. அதுதான் சமயம் என்று அழுத்தமா கிஸ் அடித்து விட்டான். பதறிப்போன அந்தப் பெண் 'டேய் என்னடா பண்றா' என்று அலறினாள். ஐகஜாலக் கில்லாடியான அந்தப் பையன் சொன்னான், 'B.Sc. இன்ஜினியரிங் செக்கண்ட் இயர்.'

கேள்வி: ஆடித்தள்ளுபடியில் மனைவிக்குப் புடவை வாங்கிக் கொடுத்தது உண்டா?

**கே.தாஸ், மானிப்பாய்**

**பதில்:** அது கொடுமை சார். ஒரு புடவை வாங்க கடையில் 300 புடவைகளை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியிடம் சொன்னேன், 'ஆதி காலத்தில் ஏவாள் வெறும் இலையை மட்டுமே உடுத்தி இருந்தாள். இதுபோன்ற தொல்லைகள் நல்ல வேளை ஆதாமுக்கு இல்லை' என்று. இதற்கு என் மனைவியின் பதில் 'அதுக்கு அவன் எத்தனை மரம் ஏறி இறங்கினானோ'

கேள்வி: இந்தக் காதல் எங்கே ஆரம்பித்திருக்கும் உமக்குத் தெரியுமா?

**எம்.சுபாசினி, பூதர்மடம்**

**பதில்:** காதல் சீனாவிலதான் உருவாகி இருக்கணும். எனிதிங் மேட் இன் சைனா இஸ் (Anything Made in china is) நோ கேறன்ரி நோ வொறன்ரி.

கேள்வி: ஐ லவ் யூ என்ற வார்த்தைக்கு எதிர்ப்புறத்தில் இருந்து வெவ்வேறான பதில்கள் வருகிறதே என்ன காரணம்?

**கே,குகன், கொக்குவில்**

**பதில்:** மனைவி - ஐ லவ் யூ, கணவன் - Come to the Point (விசயத்துக்கு வா)

கணவன் - ஐ லவ் யூ, மனைவி - not today (இன்றைக்கு இல்லை)

இப்ப புரியுதா என்ன காரணம் என்று.

கேள்வி: மொபைலுக்கு ஏன் 'ஆண்ராய்டு' என்று பெயர் வைத்திருக்கிறாங்கள்.

**எஸ்.வீரசாமி, கரவெட்டி**

**பதில்:** ' பெண்ராய்டு' என்று வைச்சிருந்தால் நாம தடவுற தடவுக்கு செருப்பை கழற்றியே அடித்திருக்கும். நல்ல வேளை 'ஆண்ராய்டு' என்று பேர் வச்சதால் தப்பிச்சம்.

# சொல்லுங்கோ டொக்டர்?




கேள்வி: எனக்கு 30 வயது. மது, புகைப்பழக்கம் எதுவும் இல்லை. ஆனாலும் தொப்பை உள்ளது. இதை எப்படிக் குறைப்பது டொக்டர்?

**ஏ. கரன் நெல்லியடி**



# தொப்பையை குறைப்பது எப்படி?

பதில்:- உங்கள் எடை என்ன? உயரம் என்ன என்பதை நீங்கள் தெரியப்படுத்தவில்லை. பொதுவாக தொப்பை என்பது அதிகரித்த எடையோடு கூடியது. ஆனால் சாதாரண எடையுள்ளவர்களுக்கும், சில வேளைகளில் தொப்பை இருப்பது சாத்தியமே.

பொதுவாக தொப்பைக்கு முக்கிய காரணம் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைதான். அதாவது தவறான உணவுமுறைகளும் போதிய உடற் பயிற்சி இல்லாததுமே ஆகும்.

நீங்கள் மது அருந்துவதில்லை, புகைப்பதில்லை என அறிந்து மகிழ்ச்சி. ஏனெனில் இவை இரண்டும் எமது உடல் நலத்துக்கு கேடு விளைவிப்பவை. உயர் இரத்த அழுத்தம் கொலஸ்ட்ரோல், நீரிழிவு, பக்கவாதம், புற்றுநோய் உட்பட பல ஆபத்தான விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடியவையாகும். அத்துடன் அதீத மது பாவனை தொப்பைக்கும் வழிவகுக்கலாம் என்பது உண்மையே. ஆனால் மது பாவனை மட்டும் தொப்பைக்குக் காரணமல்ல.

தொப்பை என்பது முக்கியமாகக் கொழுப்புத்தான். இந்தக் கொழுப்பானது எமது வயிற்றறைத் தசைகளுக்குள் இருக்கும். இந்த வயிற்றறைத்தசைக் கொழுப்பானது ஒரு அங்குல அகலத்துக்கு குறைவாக இருந்தால் அது சாதாரணமானதே ஆகும். அதற்கு மேல் இருந்தால் அது தொப்பைக்கு வழிவகுக்கும். தொப்பை இல்லாதவர்களுக்கும் வயிற்றறை தசைகளுக்குள் ஓரளவு கொழுப்பு இருக்கவே செய்யும்.

தொப்பை ஏற்படாதிருக்க எமது உடலில் தேவையற்ற கொழுப்பு சேர்வதைத் தடுக்க வேண்டும். அதற்கு ஆரோக்கியமான உணவு முறையைக் கைக்கொள்ள வேண்டும். தொப்பையைக் கரைப்பதற்கும் அத்தகைய போசாக்கான உணவு முறையே அவசியம் என்பதோடு மேலும் கடுமையாக அனுசரிக்க வேண்டும்.

ஆரோக்கியமற்ற உணவுகளான நொட்டு நொறுக்குத் தீனிகளைத் தவிர்க்க வேண்டும். வடை, மிக்ஸர், பற்றிஸ், ரோல்ஸ், பிஸ்கற், ஐஸ் கிறீம், கொத்துப் பரோட்டோ என தினமும் உள்ளே தள்ளிக் கொண்டிருப்பதைக் கைவிட வேண்டும். இவற்றில் உள்ளது பெரும்பாலும் மாப்பொருளும் எண்ணெயும் தான்.



மருத்துவ ரீதியாக உங்களுக்கு எழும் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப்பிடுங்கள். நோயற்ற வாழ்வுக்கு கேளுங்கள். பதிலோடு பயனும் பெறுங்கள்.

இவை போசாக்கற்ற உணவுகள். விற்றமின் நார்ப்பொருள் புரதம் தாதுப்பொருட்கள் எதுவும் கிடையாது. அல்லது மிகக் குறைவான அளவிலேயே உள்ளன.

அத்தோடு சோடா போன்ற மென் பானங்கள், போத்தலில் அடைத்து வரும் யூஸ் வகைகள் போன்றவற்றையும் தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவற்றில் உள்ளது சீனி மட்டுமே. இத்தகைய மேலதிக மாப்பொருளும் இனிப்பும் எமது உடலில் கொழுப்பாகவே சேமிக்கப் படும். அடிக்கடி தேநீர் அல்லது கோப்பி அருந்துவதையும் தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் சீனி இருக்கிறது. இனிப்பூட்டிய அத்தகை பானங்களைத் தவிர்த்து தினமும் நிறைய நீர் அருந்துங்கள்.

ஒருவருக்கு ஒரு நாளுக்கு 6 தேக்கரண்டி சீனி மட்டுமே போதுமானது அதற்கு மேல் எடுக்கக் கூடாது. நாம் அருந்தும் பானங்களில் மட்டுமின்றி கேக், பிஸ்கற் போன்ற ஏனைய பல பொருட்களிலும் சீனி கலந்திருக்கிறது என்பதை மறக்கக் கூடாது. நாளாந்தம் 6 தேக்கரண்டி சீனி என்பது இவை அனைத்தையும் கலந்துதானே தவிர தேநீர், கோப்பிக்குப் பாவிப்பது மட்டுமல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இனிப்பைப் போலவே எண்ணெயையும் கட்டுப்படுத்த வேண்டும். இனிப்பு மற்றும் மாப்பொருளில் உள்ளதை விட மூன்று மடங்களவு கலோரி வலு எண்ணெயில் இருக்கிறது. எனவே எண்ணெய் சேர்ந்த பொருட்கள் அதீதமாக எடையை அதிகரிக்கும். தொப்பைக்கும் வழி வகுக்கும்.

இதன் காரணமாக பொரித்த மற்றும் எண்ணெய் சேர்ந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். வதக்கல் கறிகள் எம்மவர்களுக்கு பிடித்தமானது. அவை முழுக்க எண்ணெயில் தொக்கிக் கொண்டிருப்பவை. எனவே அவற்றையும் கைவிடுங்கள்.

உணவில் காய்கறிகளையும் பழ வகைகளையம் நிறையச் சேருங்கள். உணவு உண்ண ஆரம்பிக்கும் போது கோப்பையின் அரைவாசி அளவை மரக்கறிகளால் நிரப்புங்கள். மீதியில் மீன், முட்டை, இறைச்சி போன்றவற்றுடன் மாப்பொருள் உணவுகளான சோறு, இடியப்பம், பிட்டு போன்று ஏதாவது அளவோடு உண்ணுங்கள்.

உணவை ஆரோக்கியமானதாக உட்கொள்வதால் எடை அதிகரிப்பதையும் தொப்பை மேலும் அதிகரிப்பதையும் தவிர்க்க முடியுமே தவிர ஏற்கனவே உள்ள தொப்பையைக் குறைக்க முடியாது.

எனவே ஏற்கனவே உடலில் சேர்ந்துவிட்ட கொழுப்பைக் கரைப்பதற்கு அடுத்த முக்கிய நடவடிக்கை உடற் பயிற்சி அல்லது கடுமையான உடல் உழைப்பு மட்டுமே. தினமும் 30 நிமிடம் முதல் 60 நிமிடங்கள்வரை கடுமையமான உடற்பயிற்சி செய்ய வேண்டும். வேக நடை, சைக்கிள் ஓடுதல், நீந்துதல் கயிறடித்தல் போன்ற ஏதாவது ஒன்றைச் செய்யலாம். கொத்துதுல் வெட்டுதல் போன்ற தோட்ட வேலைகளும் உகந்தவையே.

தொப்பைக்கு மற்றொரு காரணம் வயிற்றறை தசைகள் இறுக்கமின்றி நொய்ந்து இருப்பதே. மகப்பேற்றின் பின்னர் பெண்களின் வயிறு தொளதொள என இருப்பது இதற்கு உதாரணமாகும். ஏனையோருக்கும் இவ்வாறான தொப்பை இருக்க வாய்ப்புண்டு. மீண்டும் வயிற்றறை தசைநார்களை உறுதியாக்குவதற்கு பயிற்சிகள் அவசியம்.

ஒரு இலகுவான பயிற்சி சொல்கிறேன். தரையில் அல்லது கட்டிலில் படுத்திருந்து கொண்டு இரு கால்களையும் செங்குத்தாகத் தூக்க வேண்டும். மடிக்காமல் தூக்குவது அவசியம். பின்னர் கால்களை மடிக்காமல் மெதுவாக கீழே கொண்டுவர வேண்டும். தொப்பென்று கீழே கொண்டுவராமல் மெது மெதுவாகக் கொண்டுவர வேண்டும். தினமும் காலையிலும் இரவிலுமாக இரண்டு தடவைகள் செய்ய வேண்டும் ஒவ்வொரு வேளையும் 10-15 தடவைகள் செய்து வரவேண்டும். தசைகள் இறுகத் தொப்பை மறையும்.

மிக அரிதிலும் அரிதாக வயிற்றில் கட்டி வளர்ந்தாலும் வயிறு பெரிதாகக் கூடும். வயிற்றை ஸ்கான் செய்து பார்ப்பதன் மூலம் அது இருக்கிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த முடியும்.

(1505 முதல் 1948 வரையான யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்யவுள்ளார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)




# பால்டயஸ் பாதிரியாரின் டயறி




யாழ்ப்பாணப் பட்டணம் சன அடர்த்தி கூடிய நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி. யாழ்ப்பாணப் பட்டணம் 159 கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாணப் பட்டணத்தின் நீளம் ஆறு ஜேர்மன் லீக்குகள் (German Leagues). அகலம் மூன்று ஜேர்மன் லீக்குகள் (German Leagues). இதன் வடக்கு எல்லை வங்காள விரிகுடா. தெற்கு எல்லை ஆனையிறவு.


நாங்கள் இங்கு 34 தேவாலயங்களைக் கட்டியுள்ளோம். வலிகாமத்தில் 14 தேவாலயங்களைக் கட்டியுள்ளோம். இவற்றுள் தெல்லிப்பளையில் உள்ள தேவாலயம் மிகவும் பெரியது. சுற்றிவர பூந்தோட்டமும் இந்தியப் பழ மரங்களும் காணப்படுகின்றன. இரட்டைச் சுவர்களால் அமைந்த நீளமான மண்டபமும் இந்தத் தேவாலயத்தில் உள்ளது.

12.01.1661 அன்று எமது பாடசாலையில் உள்ளூர் வாசிகள் 12 பேர் நற்செய்தி சொல்பவர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். ஏப்ரல் மாதம் இந்த எண்ணிக்கை 15 ஆக அதிகரித்தது. 1665ஆம் ஆண்டளவில் எமது செமினரிகளில் 2000 மாணவர்கள் இருந்தனர். இவர்களில் 480 பேர் எமது சமயம் பற்றிப் போதுமான அறிவைப் பெற்றிருந்தனர். தெல்லிப்பளையில் இருந்து அரை மணித்தியாலத்தில் மல்லாகம் தேவாலயத்தை அடைந்து விடலாம். இங்கு செங்கற்களால் ஒரு தேவாலயத்தை அமைத்துள்ளோம். இந்தத் தேவாலயத்தை போர்த்துக்கேயர் கட்டத் தொடங்கினார்கள். நாங்கள் அதனைக் கட்டி முடித்தோம். இங்கு 200 மாணவர்கள் உள்ளார்கள்.

(சமர் தொடரும்)







# இதுதான் நாட்டின் சுபீட்சமோ?

சி.லோஜிகா
யாழ்.பல்கலைக்கழகம்

மாலைப்பொழுதில் பறவைகள் கூட்டம் தம் இருப்பிடம் தேடி நகருகையில் கடற்கரையோரம் மணல்நிறைந்த வழியதனில் கடலை ரசித்தபடி நடப்பது எத்தினை சுகம் சில்லென்று வீசும் கடற்காற்றும் அங்கு தன்னிலை மறந்து விளையாடும் மழழையின் அழகும் எத்தினை இன்பத்தை அள்ளித் தருகின்றன. இவ் இன்பத்தை அனுபவித்திட சென்ற வாரம் மாலைப்பொழுதினில் நானும் என் தோழியும் கடற்கரையின் அழகை இரசித்தபடி அமர்ந்திருந்தோம்.

சோகம் நிறைந்த வதனத்துடன் கையிலே இருபது ரூபாய் பெறுமதியான கச்சான் பைகள் சிலவற்றை ஏந்திய வண்ணம் எங்களை நோக்கி நடந்து வந்தான் பத்துவயதைக் கூட எட்டிவிடாத ஓர் சிறுவன். கிழிந்த சேட்டினையும் தோய்த்து தோய்த்தே சாயம் போன சிவப்பு நிறக் காற்சட்டையும் அணிந்து காலில் செருப்பின்றி நடைபாதை வழியே அவன் வரும் காட்சி அவனின் ஏழ்மைத் தன்மையை படம்பிடித்துக்காட்டியது.

தயக்கத்துடன் ஒரு கையில் கச்சான் பைகளையும் மறுகையில் சிறு குச்சியொன்றினையும் ஏந்திய வண்ணம் என்னருகில் வந்து 'அக்கா அக்கா' என்ற அன்பு கலந்த வார்த்தையுடன் 'அக்கா நல்ல வறுத்த கச்சான் இருக்கு ஒரு பை இருபது ரூபா வாங்கினால் என் பசி மட்டுமல்ல என் தங்கையின் வயிற்றுப் பசியும் தீர்ந்து விடும், என்று தன் மழலைக் குரலில் கூறினான். அதனைக் கேட்டதும் மனதில் ஏதோ கனத்த பாரம். ஆளுக்கொரு கச்சான் பைகளை வாங்கி நூறு ரூபாய் பணத்தை அச் சிறுவனிடம் கொடுத்தேன். அந்தக் கணம் அவன் முகமோ சிரிப்பால் பிரகாசித்தது. குழந்தையின் சிரிப்பில் இறைவனைக் காண்பாய் என்பதற்கு அர்த்தம் அச்சிரிப்பில்த்தான் எனக்குப் புரிந்தது.

மீதிப்பணத்தை கொடுப்பதற்கு தன்னுடைய காற்சட்டை பொக்கெட்டில் கை விட்ட அச்சிறுவனை என்னருகில் உட்காரும் படி கூறினேன். பயம் நிறைந்த முகத்துடன் என்னருகில் உட்கார்ந்த அச் சிறுவனைப் பார்த்து 'தம்பி நீ யாரப்பா? நீ எங்கிருக்கிறாய்?' என்று கேட்டேன். என் முகத்தை நன்றாக உற்றுப்பார்த்த அச்சிறுவன் "என் பெயர் கனிஸ்டன் இந்த ஊர் தான் அக்கா என்றான்.' 'ஏன் கச்சான் விற்கின்றாய்? உன் அப்பா அம்மா எங்கே?' என்றேன். கவலை நிறைந்த முகத்துடன் கூறினான், 'நானும் என்ட தங்கச்சியும் அம்மாவும்தான் இருக்கம் அப்பா சண்டையில காணாமல் போட்டார் எண்டு அம்மா சொல்லுறவா' என்றான். 'அம்மாக்கு சண்டையில கால் இல்லாம போச்சு அதால அம்மா கச்சான் வறுத்து தருவா நான் இங்க விக்கிறனான். இங்க வித்தாத்தான் எங்களுக்கு சாப்பாடு பள்ளிக்கூடம் போக விருப்பம் ஆனா எங்கள பாக்க ஒருத்தருமில்லை அக்கா" என்று கூறிவிட்டு 'இருளுறதுக்குள்ள இவ்வளவும் விக்கோனும்' என்று கூறி எழுந்தான் அச்சிறுவன்.

அச்சிறுவன் கூறியதைக் கேட்டதும் என்னை அறியாமல் வந்த கண்ணீர் என் கண்களை மறைத்தன. அப்போதுதான் என் மனதில் தோன்றியது கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் போரின்போது மக்கள்பட்ட துன்ப துயரங்கள் எண்ணிலடங்காதவை அதன்பின் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையோ விடியலைத் தேடும் விடிவெள்ளி போன்றதென்று. சொத்துக்களை உடைமைகளை உடலின் பாகங்களை இழந்து வறுமை எனும் பிணியினால் பீடிக்கப்பட்டு எழுந்து நிற்க ஒரு வேளை சாப்பாட்டுக்காக திண்டாடிய வண்ணம் தான் உள்ளனர்.

வறுமைகளை ஒழிப்போம் நாட்டின் சுபீட்சத்தை உருவாக்குவோம் என்ற கோசங்களை ஏந்தியவண்ணம் வீடு வீடாக பொய்யான வாக்குகளைக் கொடுத்து ஓர் அரிசிப்பையையும் கொடுத்து புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற அவர்களோ மக்களை இன்று தெருவோரத்தில் தள்ளிவிட்டார்கள். மக்கள் தம் வறுமைக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வாக்குகளை அவர்கள் பக்கம் அள்ளி இறைத்தார்கள். ஆனால் அவர்களின் தாகத்துக்கு நீர் இறைக்காமல் தத்தம் குடும்பத்துடன் சொகுசுக் காரில் ஏறி நட்சத்திர ஹோட்டலில் உணவருந்தி மக்களின் பணத்தில் இன்பம் காண்கிறார்கள். அவர்கள் யார்? அவர்கள் தான் அரசியல்வாதிகள்.

வசதி படைத்தவர் வசதி படைத்தவர்களே. ஏழைகளோ அன்றும் இன்றும் ஏழைகளாகவே வசதிபடைத்தவர்களின் அதிகாரத்தில் நசுக்கப்பட்டு வயிற்றுப்பிழைப்புக்காக தினம்தினம் போராடும் நிலையில். அவர்களின் குழந்தைகள் கல்வி எனும் சொல்லை மட்டும் தான் கேள்விப்பட்டார்களே தவிர கல்வி என்பது அவர்களின் வாழ்வில் எட்டாக் கனவு.

வாக்குப் போட்ட கைகள் வீதி ஓரத்தில் ஒரு பிடி சோற்றுக்குக் கையேந்துகின்றன. பாடசாலைக்கு செல்லவேண்டிய பிள்ளைகளோ வீதியோரங்களிலும், கடற்கரையோரங்களிலும் கச்சான், நாவல்ப்பழம், பாலைப்பழம் எனக் கூவிக்கூவி விற்கின்றனர். மக்களின் இந்நிலை அரசியல்வாதிகளுக்கு எங்கே புரியப் போகிறது. யார் தான் புரிய வைக்கப் போகிறார்களோ! இது தான் இன்றைய நம் நாட்டின் சுபீட்சமான நிலையோ?

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இறுதி யுத்தத்தின்போது தாயின் உயிர் பிரிந்ததுகூடத் தெரியாமல் எட்டு மாதப் பச்சிளம் குழந்தை தாயிடம் பால் குடித்த காட்சியை எவராலும் மறக்க முடியாது. அந்தக் குழந்தைதான் இம்முறை நினைவேந்தல் நிகழ்வின் பொதுச் சுடரை ஏற்றிவைத்தது.






















இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 22.05.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.